REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மார்ச் 30 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
89 1932 - 2021

வரு. 89 இல. 76 | March 30,Tuesday, 2021 | 24 பக்கங்கள் | 30/-
















தடை செய்யப்பட்ட அமைப்புகளுடன் தொடர்பா?

## இலங்கையில் செயற்பட்டால் அல்லது நாட்டுக்கு வந்தால் உடன் கைது

அரசின் சார்பில் மக்கள் பாதுகாப்பு அமைச்சர்



தடை செய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகளின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட எவரேனும் இலங்கையில் செயற்பட்டாலோ அல்லது இலங்கைக்கு வருகை தந்தாலோ அவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்படுவார்கள் என்று அரசு அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு கொண்டுள்ளமை, இஸ்லாமிய பயங்கரவாத கொள்கையை பரப்புகின்றமை மற்றும் அவர்களுக்காக நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றமை

06

## பண்டிகை காலத்தில் போலி நாணயத்தாள் புழக்கத்தில்

அவதானமாக இருக்க மக்களுக்கு அறிவுறுத்தல்



பண்டிகை காலத்தில் பொது மக்கள் போலி நாணயத்தாள்களின் பயன்பாடு குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண அறிவுறுத்தியுள்ளார்.

கொழும்பு வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் 5000 ரூபா போலி நாணயத்தாளுடன் முகத்துவாரம் பகுதியில் 21

06

## புத்தாண்டு கொண்டாட்டம் அடுத்த வாரமே தீர்மானம்

இராணுவ தளபதி சவேந்திர சில்வா



புத்தாண்டு கொண்டாட்டங்கள் மற்றும் போட்டிகளை நடத்த பொதுமக்களை அனுமதிக்கும் முடிவு அடுத்த வாரத்தில் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்படும் என கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் சவேந்திர சில்வா தெரிவித்தார். புத்தாண்டு தொடர்பான

06

புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் அடங்கிய

# தேங்காய் எண்ணெய் சந்தைக்கு விநியோகிக்கப்படவில்லை

அரசாங்கம் நேற்று உறுதி செய்தது
அமைச்சர் பந்துல குணவர்தன அறிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் அடங்கிய தேங்காய் எண்ணெய் சந்தைக்கு விநியோகிக்கப்படவில்லை என்பதை அரசாங்கம் நேற்று உறுதி செய்துள்ளது.

நான்கு இறக்குமதி நிறுவனங்களால் நாட்டுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ள தேங்காய் எண்ணெயில் எப்லடோக்ஸின் என்ற புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் கலந்துள்ளதை தர நிர்ணய நிறுவனம் உறுதி செய்துள்ள நிலையில்அவற்றை சந்தைக்கு விநியோகிக்கவில்லை என்றும் இறக்குமதி செய்யப்பட்ட நாட்டுக்கே அதனை திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மேற்படி சர்ச்சைக்குரிய தேங்காயெண்ணெய் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு

06

## நாட்டை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடியாது

மக்களை அச்சமூட்ட எதிரணி முயற்சி - அமைச்சர் ஜீ.எல்



ஷம்ஸ் பாஹிம்

எமது நாட்டை ஒருபோதும் சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடியாது என கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஜெனீவா தீர்மானத்தை ஒரு பிசாசைப் போல நாட்டிற்கு முன்பாக முன்வைத்து

06

## சீன கொவிட் தடுப்பூசிகள் நாளை இலங்கை வந்தடையும்

முதற்கட்டமாக ஆறு இலட்சம் தடுப்பு மருந்து



சீனாவில் தயாரிக்கப்படும் சைனோஃபார்ம் கொவிட் தடுப்பூசிகள் நாளை புதன்கிழமை (31) நாட்டை வந்தடையவுள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் கொவிட் தடுப்பூசி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான லலித் வீரதுங்க தெரிவித்தார்.

அதற்கமைய முதற்கட்டமாக 6 இலட்சம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெறவுள்ளன. இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு

06



கொரோனா தொற்று காரணமாக மூடப்பட்டிருந்த மேல்மாகாண பாடசாலைகள் நீண்ட இடைவெளியின் பின்னர் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலை செல்வதைக் காணலாம்.
படம்: சமன் ஸ்ரீ வெதகே

20 நாள் குழந்தை தகன வழக்கு;

## மனு விசாரணையிலிருந்து நீதியரசர் ஒருவர் விலகல்



கொரோனா தொற்றினால் உயிரிழந்த 20 நாட்கள் கொண்ட சிசுவின் பெற்றோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையில் இருந்து நீதியரசர் ஒருவர் விலகியுள்ளார். குழந்தையை தகனம் செய்வதற்கு எதிராக தாக்கல் செய்த குறித்த

06

## கண்டியில் பிறந்த அதிசய நாய்க் குட்டி!



கண்டி பகுதியில் ஒரு நாய்க்கு பிறந்த பச்சை நிறக் குட்டி தொடர்பில் பல தகவல்கள் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றன.

இது குறித்து கால்நடை வைத்தியர் ஒருவரிடம் வினவிய போது, விலங்குகளின் கருவில் உள்ள இரத்த சிவப்பணுக்கள் பிரசவத்தின் போது வெடிக்கும்

06




## புலிகளை ஊக்குவிக்கும் வகையில் யூடியுப் மற்றும் இணையதளம்

யாழ்ப்பாணத்தில் பெண் உட்பட இருவர் கைது



யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

எல்ரிரிஈ அமைப்பை ஊக்குவிக்கும் வகையில் யூடியுப் அலைவரிசை மற்றும் இணையதளம் ஒன்றை முன்னெடுத்து சென்ற பெண் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண நகரில் இணையத்தளம் மற்றும் யூடியுப் அலைவரிசை ஒன்றை நடத்திச் சென்ற இடம் அடையாளம் காணப்பட்டு அந்த இடம்

06

## கிட்டு பூங்காவிற்கு விஷமிகளால் தீ

பூங்கா முற்றாக எரியுண்டது

யாழ். நல்லூர் முத்திரை சந்தியில் அமைந்துள்ள கிட்டுப்பூங்காவின் முகப்பு, விஷமிகளினால் தீ வைக்கப்பட்டு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம், ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

06

## பன்மை தன்மையை ஏற்றால் மட்டுமே நாடு முன்னேறும்

கட்டியெழுப்பவும் முடியும் என்கிறார் மனோ



இலங்கையின் பன்மொழி, பல்லின, பன்மத, பன்மைத்தன்மையை புரிந்துகொண்டு இலங்கையை ஒரு பன்மைத்தன்மை கொண்ட நாடாக ஏற்காமல் நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் வாழும், கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர்களின், "ஜனநாயகத்துக்கான ஆனந்தியர்கள்" என்ற அமைப்பு

06

## யாழில் தொற்று தீவிரம் நேற்று 1500 பேரிடம் PCR

முடிவுகளுக்காக சுகாதாரப் பிரிவு காத்திருப்பு



யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்று அதிகரித்துச் செல்லும் நிலையில் நேற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்நிலையில் சுமார் ஆயிரத்து 500 பேரின் பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் நேற்று மாலை வரை அவை வெளியாகவில்லை.

யாழ்.நகர வர்த்தகர்களிடம் நேற்று முன்தினம் பெறப்பட்ட 870 மாதிரிகள் பரிசோதனைக்காக முல்லேரியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதே போன்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாற்பண்ணைப்பகுதி மக்களிடம் முத்துத்தம்பி பாடசாலையில் வைத்துப்

06

இந்திய மீனவர் விடுவிக்கப்பட்டது போன்று

## இலங்கை மீனவர்களும் விடுவிக்கப்பட வேண்டும்

வன்னி எம்.பி செல்வம் கோரிக்கை



வவுனியா விசேட நிருபர்

இலங்கை கடற்பரப்பில் அத்து மீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் இலங்கை அரசினால் உடனடியாக விடுதலை செய்யப்பட்டதுபோல், இந்தியாவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் மீனவர்களையும் உடன் விடுதலை செய்ய இலங்கை, இந்திய அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என தமிழ்

06

விக்கல் வீராச்சாமி



அசாத் ஐயா கைதுக்கு சமூகம் கவலை எண்டு அறிக்கை விட்டு பிரயோசன–மில்லை, முன்னமே அவருக்கு அட்வைஸ் பண்ணி இருக்கனும்.....

உண்மைதான், அவர் ஒவ்வொரு நாளும் டிவியில வரேக்க கைதட்டி போட்டு இப்ப அதிர்ச்சி எண்டா என்ன செய்ய....!!!!

89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

## இந்தோனேசிய எண்ணெய் சுத்திகரிப்பகத்தில் பாரிய தீ

இந்தோனேசியாவின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றில் ஏற்பட்ட பாரிய தீயை கட்டுப்படுத்த தீயணைப்புப் படையினர் கடுமையாக போராடினர்.



அரச எண்ணெய் நிறுவனத்தால் நடத்தப்படும் பலொகான் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை இந்தத் தீ ஏற்பட்டது.

குறைந்தது ஐவர் காயமடைந்திருப்பதோடு சுமார் 950 குடியிருப்பாளர்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். ஒரு சிலர் காணாமல்போயிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தீக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. எனினும் கடும் மழை மற்றும் இடி மின்னலுக்கு மத்தியிலேயே தீ ஏற்பட்டதாக அந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தெரிவித்தது.

நேற்றுக் காலையிலும் தீ எரிந்து கொண்டிருப்பது மற்றும் வானில் கரும்புகை சூழ்ந்திருக்கும் காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியாகி இருந்தன.

இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து கிழக்காக 200 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் பலொகான் சுத்திகரிப்பு நிலையம் குறைந்தது 340 ஹெக்டேர் பகுதியில் அமைந்துள்ளது. இங்கு நாள் ஒன்று 125,000 பீப்பாய் எண்ணெய் சுத்திகரிக்க முடியும்.

## கற்பழிப்பு குற்றச்சாட்டு: ஆஸி. அமைச்சர்கள் இருவர் நீக்கம்

அவுஸ்திரேலிய அரசியலில் பரபரப்பை ஏற்படுத்திய இரு கற்பழிப்பு குற்றச்சாட்டுகள் தொடர்பில் அந்நாட்டு அமைச்சரவையைச் சேர்ந்து இரு அமைச்சர்கள் பதவி நீக்கப்பட்டுள்ளனர்.



சட்டமா அதிபரான கிறிஸ்டியன் போட்டர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் லிண்டா ரெய்னோல்ட் ஆகிய இருவரையும் பிரதமர் ஸ்கொட் மொரிஸன் பதவி நீக்கியுள்ளார்.

அரசின் உயர் சட்ட அதிகாரியான போட்டர் 1988 இல் தனது 17 வயதில் 16 வயதாக இருந்த சக மாணவியை கற்பழித்ததாக குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார்.

பாதிக்கப்பட்ட அந்தப் பெண் கடந்த ஜூன் மாதம் தற்கொலை செய்து கொண்ட நிலையில் அவர் இந்தக் குற்றச்சாட்டை மறுத்து வருகிறார்.

மறுபுறம் தனது பாராளுமன்ற அலுவலகத்தில் பணியாற்றிய இளம் பெண் ஒருவர் கற்பழிப்புக்கு உள்ளான நிலையில் அது பற்றிய விசாரணையை தவறாக கையாண்டதாக ரெய்னோல்ட் குற்றச்சாட்டுக்கு உள்ளானார். இந்த இருவரும் தொடர்ந்து அரசில் கனிஷ்ட நிலையில் நீடிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை மாற்றத்தில் பெண்களுக்கு அதிக இடம் அளிக்கப்படுவதாகவும் பிரதமர் அறிவித்துள்ளார்.

## மொசம்பிக் நகர் மீது தாக்குதல்: பலர் பலி

வடக்கு மொசம்பிக்கின் பல்மா நகரில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் பலரும் கொல்லப்பட்டிருப்பதாக நாட்டின் பாதுகாப்பு திணைக்கள பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதில் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற முற்றுகையில் இருந்து தப்பிக்க முயன்ற ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டினர் என நூற்றுக்கணக்கானோர் மீட்கப்பட்டனர்.

இந்தப் பகுதியில் இஸ்லாமியவாத குழு ஒன்று கடந்த புதன்கிழமை தாக்குதல் நடத்தியது. தலைகளற்ற உடல்கள் மிதக்கும் கடற்பகுதியில் படகு மூலம் காப்பாற்றப்படும் வரை தாம் ஒளிந்து காத்திருந்ததாக பார்த்தவர்கள் விபரித்துள்ளனர்.

எனினும் இந்தத் தாக்குதலில் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. பலரும் தொடர்ந்து காணாமல் போன நிலையில் உள்ளனர். அந்த நகரை ஆயுதக் குழு கைப்பற்றியதாக கூறப்பட்டபோதும் தொடர்பாடல் துண்டிக்கப்பட்ட



நிலையில் அதனை உறுதி செய்ய முடியாதுள்ளது.

தாக்குதல்தாரிகள் கடைகள், வங்கிகள் மற்றும் இராணுவ முகாம் ஒன்றை இலக்கு வைத்து தாக்குதலை நடத்தியுள்ளனர்.

# சுயஸ் கால்வாயில் சிக்குண்ட கொள்கலன் கப்பல் விடுவிப்பு

## விரைவில் போக்குவரத்தை ஆரம்பிக்க எதிர்பார்ப்பு

கடந்த ஒரு வாரமாக எகிப்தின் சுயஸ் கால்வாயை அடைத்து இருந்த இராட்சத கொள்கலன் கப்பல் பகுதி அளவில் விடுவிக்கப்பட்டதாக சுயஸ் கால்வாய் அதிகாரசபை அறித்துள்ளது. இதன்மூலம் அந்த கால்வாயில் விரைவில் மீண்டும் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்கும் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

சுமார் 80 வீதம் கப்பல் சரியான திசைக்குத் திரும்பியுள்ளது. கப்பலின் பின்புறம் கரையில் இருந்து 102 மீற்றர் சரியான திசையில் திருப்பிவிடப்பட்டுள்ளது. முன்னர், அது கரையில் இருந்து 4 மீற்றராக இருந்தது.

400 மீற்றர் நீளம் கொண்ட எவர் கிவன் என்ற இந்தக் கப்பல் கடந்த செவ்வாய்க்கிழமை கடும் காற்றுக்கு மத்தியில் கால்வாயின் தென் பக்கமாக குறுக்காக சிக்கிக்கொண்டது. இதனால் ஐரோப்பா மற்றும் ஆசியாவுக்கு இடையிலான மிகக் குறுகிய நீர்ப் பாதையின் போக்குவரத்து தடைப்பட்டது.

இந்நிலையில் கப்பல் தரைதட்டிய பகுதியில் மணல் தோண்டி எடுக்கப்பட்டு இழுவை படகுகளால் இழுக்கப்பட்டு கப்பலை விடுவிக்கும் முயற்சி தீவிரமாக இடம்பெற்றது. தொடர்ந்து நேற்றும் இந்தக் கப்பலை விடுவிப்பதற்கு இழுவைப் படகுகளை பயன்படுத்தி கால்வாய் அதிகாரிசபை மற்றும் நெதர்லாந்து நிறுவனமான ஸ்மித் லெவ்வேஜ் கடுமையாக பாடுபட்டது.

எவர் கிவன் கப்பம் கால்வாயின் கிழக்குக் கரைக்கு இணையாக பெரும்பாலும் நேராக வந்திருப்பதாகவும் அதனை மேலும் இழுக்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் கால்வாய் அதிகாரசபை நேற்று தெரிவித்தது. கால்வாயின் பரந்த பகுதியான ஏரிப் பகுதிக்கு இந்தக் கப்பல் செலுத்தப்பட்ட பின் கால்வாயின் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று அது தெரிவித்தது.

கொள்கலன் கப்பல்கள், சரக்குக் கப்பல்கள், எண்ணெய் டாங்கர்கள் மற்றும் திரவ இயற்கை வாயு மற்றும் திரவ பெற்றோலிய வாயு கப்பல்கள் உட்பட குறைந்தது 369 கப்பல்கள் இந்த கால்வாய் ஊடாக பயணத்தைத் தொடர காத்திருப்பதாக சுயஸ் கால்வாய் அதிகாரசபை தலைவர் ஒசாமா ரபீ தெரிவித்தார்.

“இறைவன் நாடினால், இன்று (திங்கட்கிழமை) மதியம் ஆகும்போது கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்க முடியுமாக இருக்கும்” என்று எகிப்து அரச தொலைக்காட்சிக்கு அவர் தெரிவித்தார். “ஒரு வினாடியைக் கூட நாம் வீணாக்க மாட்டோம்” என்றும் அவர் குறிப்பிட்டார்.



எனினும் இந்தக் கப்பல் தொடர்ந்து மணல் மற்றும் களிமண்ணில் சிக்கி இருப்பதால் கப்பலின் அடிப்பகுதிக்கு நீரை அதிக அழுத்தத்துடன் பீச்சும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த முயற்சி வெற்றிபெறாவிட்டால் கப்பலில் இருக்கும் கொள்கலன்கள் அகற்றப்படவுள்ளன. அவ்வாறான நிலை ஏற்பட்டால் கப்பல் போக்குவரத்தில் மேலும் தாமதம் ஏற்படும்.

எனினும் கப்பலை மீண்டும் நிலைநிறுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அங்கு சாதகமாக அலை இருப்பதால் கொள்கலன்களை அகற்ற வேண்டிய தேவை இருக்காது என்றும் இந்த மீட்பு நடவடிக்கையுடன் தொடர்புபட்ட தரப்பு ஒன்றை மேற்கோள் காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

“கப்பல் நகர்வது நல்ல செய்தியாகும். என்றாலும் அது தொடர்ந்து சேற்றில் சிக்கியுள்ளது. இழுப்பதை கையாளும் இரண்டாவது பெரிய நங்கூரம் ஒன்று காலையில் வந்தது. அதன்மூலம் கப்பலை விடுவிக்க முடியும் என்ற எதிர்பார்க்கிறோம்” என்று மீட்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தாய்வானை சேர்ந்த எவர் கிரீன் மரைன் எனும் நிறுவனத்தால் இயக்கப்படும் எவர் கிவன் கப்பல் ஜப்பானைச் சேர்ந்த ஷோயி கிசென் எனும் நிறுவனத்துக்குச் சொந்தமானது. 2018ஆம் ஆண்டில் கட்டப்பட்டு, பனாமாவில் இந்தக் கப்பல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஷோயி கிசென் நிறுவனத்தின் தலைவர் யுகிடோ ஹிகாகி இந்த கப்பல் சேதம் அடைந்ததாக தெரியவில்லை என்று கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

“இந்த கப்பலுக்குள் நீர் புகவில்லை. இது மீண்டும் மிதக்கத் தொடங்கும்போது வழக்கம்போல இயங்கும்” என்று அவர் தெரிவித்தார்.

இதனிடையே ஆசியா ஐரோப்பாவுக்கிடையே சுற்றிச் செல்லும் மாற்றுப் பாதையில் 20க்கும் மேற்பட்ட கப்பல்கள் சென்றுள்ளன. அவை குறித்த இடங்களைச் சென்றடைய மேலும் 2 வாரங்கள் ஆகலாம் என்பதால், பொருட்களின் விநியோகம் தாமதமாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சுயஸ் கால்வாய் மத்திய தரைக்கடல் மற்றும் செங்கடலுக்கு இடையிலான ஒரு பகுதியான சுயஸ் இஸ்த்மஸை எகிப்தில் கடக்கிறது. இந்தக் கால்வாய் 193 கி.மீ (120 மைல்) நீளம் கொண்டது மற்றும் மூன்று இயற்கை ஏரிகளை உள்ளடக்கியது.

2015ஆம் ஆண்டில், எகிப்து அரசாங்கம் கால்வாயை விரிவாக்கம் செய்தது. இது பிரதான நீர்வழிப் பாதையை ஆழப்படுத்தியதுடன், அதற்கு இணையாக 35 கி.மீ (22 மைல்) தடத்தையும் கப்பல்களுக்கு வழங்கியது.

## மெக்சிகோவில் கொரோனா பலி 321,000 ஆக அதிகரிப்பு



கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் திருத்தப்பட்ட எண்ணிக்கையை மெக்சிகோ வெளியிட்டுள்ளது.

இதன்படி அந்நாட்டின் உயிரிழப்பு எண்ணிக்கை முன்னரை விடவும் 60 வீதம் அதிகமாக இருப்பதோடு அது உலகின் இரண்டாவது அதிக உயிரிழப்பாக உள்ளது.

புதிய தரவுகளின்படி அந்நாட்டில் கொவிட்–19 தொற்றினால் 321,000க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். இந்தத் திருத்தத்தின்படி அமெரிக்காவுக்கு அடுத்து உலகில் அதிக உயிரிழப்பு பதிவான நாடாக மெக்சிகோ மாறியுள்ளது.

முன்னர் இரண்டாவது இடத்தில் இருந்த பிரேசிலில் 310,000 உயிரிழப்புகள் பதிவாகி உள்ளன. அதிகபட்சமாக கொரோனா தொற்றினால் அமெரிக்காவில் 549,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

மெக்சியோவில் போதிய சோதனைகள் இடம்பெறாத நிலையில் அங்கு நோய்ப் பாதிப்பு கூறப்பட்டதை விடவும் அதிகம் என்று நிபுணர்கள் ஏற்கனவே கூறி வந்தனர்.

இந்த பெருந்தொற்றை கையாள்வது தொடர்பில் ஜனாதிபதி அன்ட்ரெஸ் மனுவேல் லோபஸ் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி உள்ளார்.

நோய்த் தொற்றின் தீவிரத்தை அவர் குறைத்து மதிப்பிடுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுவதோடு தடுப்பு மருந்து திட்டத்தில் ஏற்பட்டிருக்கும் தாமதத்திற்கும் ஜனாதிபதி விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளார்.

## வான் தாக்குதலால் மியன்மாரில் 3,000 பேர் தாய்லாந்துக்கு ஓட்டம்

மியன்மாரின் தென்கிழக்கு கரேன் மாநிலத்தில் இன ரீதியான கிளர்ச்சிக் குழு ஒன்றின் மீது இராணுவம் நடத்திய குண்டு வீச்சை அடுத்து 3,000 பேர் வரை அண்டை நாடான தாய்லாந்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

நாட்டின் கிழக்கு எல்லைக்கு அருகில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் ஒரு முகாம் உட்பட முட்ரோ மாவட்டத்தில் ஐந்து இடங்கள் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை வான் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

'அப்போது கிராம மக்கள் காடுகளில் ஒளிந்துகொண்டதோடு 3000 பேர் எல்லை கடந்து தாய்லாந்தில் அடைக்கலம் பெற்றனர்' என்று கரேன் பெண்கள் அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.



மியன்மாரில் இராணுவ சதிப்புரட்சிக்கு எதிராக தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மியன்மாரில் உள்ள கிளர்ச்சிக் குழுக்களுக்கும் அரசுக்கும் இடையே கடந்த 2015 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டபோதும் நாட்டில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது தொடக்கம் பதற்றம் அதிகரித்துள்ளது.

## எண்ணெய்க்கு பதில் தடுப்பூசி வாங்க வெனிசுவேலா திட்டம்

வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோ தடுப்பூசிகளுக்குக் கட்டணமாக எண்ணெய் வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

தற்போது அந்நாட்டில் இரண்டாம் கட்டமாக வைரஸ் தலைதூக்கியுள்ளது. வெனிசுவேலாவில் எண்ணெய்க் கப்பல்கள் உள்ளதாகவும், எண்ணெய் வாங்குவதற்கு வாடிக்கையாளர்கள் தயாராயிருப்பதாகவும் ஜனாதிபதி மடுரோ குறிப்பிட்டார்.



எண்ணெய் உற்பத்தியில் ஒரு பகுதியைப் பிரித்து, அதைக் கொண்டு தடுப்பூசி பெறலாம் என அவர் குறிப்பிட்டார்.

வெனிசுவேலாவில் இதுவரை ரஷ்யாவின் ஸ்புட்னிக் ஏ தடுப்பூசி, சீனாவின் சினோபாம் தடுப்பூசி ஆகியவற்றுக்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன.

கொவெக்ஸ் திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறவுள்ள 2.4 மில்லியன் முறை பயன்படுத்தும் அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசிகளை ஏற்கப் போவதில்லை என பான் அமெரிக்கா சுகாதார அமைப்பிடம் வெனிசுவேலா தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பிடம் வெனிசுவேலா கடன் பாக்கி வைத்திருப்பதால், கொவெக்ஸ் திட்டத்தின் மூலம் இதுவரை அந்நாட்டுக்குத் தடுப்பூசி எதுவும் விநியோகிக்கப்படவில்லை.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk



**தொழுகை நேரம்**

28 முதல் 30 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.56 |
| ளுஹர் | 12.17 |
| அஸர் | 03.25 |
| மஃரிப் | 06.21 |
| இஷா | 07.30 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் பங்குனி 17

ராகுகாலம் : மாலை : 03.00 - 4.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: துவிதியை

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)



# சுற்றாடலை பாதுகாக்க பொறுப்புவாய்ந்த ஒன்றிணைந்த அமைச்சு அலகு உருவாக்கம்

சுற்றாடல் அழிக்கப்படுகின்றமை தொடர்பில் தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள சர்ச்சைக்குரிய நிலையில் குறிப்பிட்ட சம்பவங்களின் போது துரிதமாகவும் வினைத்திறனாகவும் செயற்படக்கூடிய அலகொன்றை அமைக்க சுற்றாடல் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர யோசனை முன்வைத்தார்.

அந்த அலகில் சுற்றாடல், வனசீவராசிகள், வன பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு உள்ளிட்ட அமைச்சுக்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை போன்ற பொறுப்பு வாய்ந்த அரச நிறுவங்களின் பொறுப்புள்ள அதிகாரிகளும் உள்ளடப்படவேண்டும் என குழுவில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு சமாந்தரமாக, சுற்றாடல் அழிப்பு தொடர்பில் நாட்டில் போலிச்செய்திகள் பரவுவதை தடுப்பதற்கும், ஊடகங்களில் வெளியாகும் முக்கிய செய்திகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவதற்கும் புதிய ஊடக அலகொன்றை அமைப்பதற்கும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சுற்றாடல் அமைச்சர் கௌரவ மஹிந்த அமரவீர தலைமையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சுற்றாடல் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன் இங்கு நாடு பூராகவும் ஏற்பட்டுள்ள சுற்றாடல் சார் பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

விசேடமாக, மணல் அகழ்வு தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கான தீர்வாக மணல் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பில் அரச நிறுவனமொன்றான தொழிநுட்ப நிறுவனம் ஒன்றின் ஊடாக மேற்கொள்வதற்கும், மணல் அகழ்வுக்காக குறைந்த வருமானம் பெரும் சமுர்த்தி

06



## தவக்கால சிந்தனை

### ஒளியின் அருமை இருளில்தான் தெரியும்

நம்மில் பலர் நம்மிடம் இருக்கும் பலபொருள்களின் அருமை பற்றி தெரியாமல் இருக்கின்றோம். இறைவன் நமக்கு கொடுத்திருக்கும் ஆசீர்வாதங்களைப் பற்றியும் நாம் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் இருக்கின்றோம். அவைகள் நம்மைவிட்டுப்போகும் பொழுதுதான் அதன் அருமைகளை நாம் அறிகிறோம்.

இந்த கொரோனா காலகட்டத்தில் ஒருவர் ஒரு விடயத்தைச் சொன்னார். "நான் கொரோனாவால் பாதிக்கப்பட்டு மூச்சுக்கூடவிடமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். சுயமாக சுவாசிக்க முடியாமல் அவதிப்பட்டதால் எனக்கு செயற்கையாக பிராணவாயு செலுத்தினார்கள். நான் பட்ட அந்த நரக வேதனை யாருக்கும் வரக்கூடாது என்று இறைவனை மனதார வேண்டினேன் என்றார்.

நான் குணமாகி வந்தவுடன் இறைவனுக்கு நன்றிசொன்னேன். ஏன் தெரியுமா? எனக்கு செயற்கை சுவாத்திற்கே ஏகப்பட்டதொகையை நான் கட்டவேண்டி இருந்தது. இத்தனை வருடமாக நான் எந்தசெலவும் செய்யாமல் இயற்கை சுவாசத்தை இறைவன் கொடுத்திருந்தார். நானும் சுவாசித்து வாழ்ந்துவருகின்றேன்.

அப்போது எனக்கு இயற்கையின் அருமை தெரியவில்லை ஆனால் இன்று மரண நிலையில் இருந்து வந்த பிறகுதான் இயற்கை சுவாசத்தின் உண்மை நிலையை நான் உணருகின்றேன் என்றார்.

அதேபோல சாதாரணமான மனிதரிடம் போய் நாம் சுதந்திரத்தைப் பற்றிப் பேசினால் அவருக்குஅதன் அருமை புரியாது. ஏதாவது ஒரு சூழலில் அடிமையாக்கப்பட்டு வேதனைப்பட்டு சுதந்திரத்தை இழந்தபோதுதான் உண்மையான சுதந்திரத்தை பற்றி நம்மால் அறிந்துகொள்ள இயலும். அதை உணராதவர்களால் ஒருபோதும் அடிமையாக உள்ளவர்களின் வேதனையை அறிந்துகொள்ளவே முடியாது. அப்படிப் பட்டவர்கள் பிறரைஅடிமைப்படுத்தி வாழவே ஆசைப்படுவார்கள்.

வெளிச்சத்திலே வாழ்ந்து விட்டு சிலகாரணங்களால் நாம் இருளில் அடைத்து வைக்கப்படுகின்றபோதுதான் நாம் வெளிச்சத்தின் அருமையை உணர்கின்றோம் என்பதுதான் உண்மை. இதனைத்தான் நமது பெரியவர்கள் சொன்னார்கள் நிழலின் அருமை வெயிலிலேயே தெரியும் என்று ,உண்மை தானே.

கடவுள் நம்மோடு இருக்கும்போது நாம் அவரின் அருமையை மறந்து விடுகின்றோம். அவர் செய்கின்ற பல காரியங்களை பெற்றுக்கொள்கின்ற நாம் அவருக்கு நன்றியற்றவர்களாக வாழுகின்றோம். நாம் எப்போது பெற்றுக்கொண்டஆசீர்வாதங்களை இழக்கின்றோமோஅன்று இறைவனை நாம் தேடுகின்றோம். நம் பெரியவர்கள் சொல்வதுபோல கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் என்பதுபோல.

யூதாஸ் இஸ்காரியோத்தின் வாழ்க்கையில் இயேசு எவ்வளவோ காரியங்கள் செய்திருக்கின்றார். ஆனால் அதையெல்லாம் அவர் நினைத்துப் பார்க்கவில்லை. ஆனால் அவரை காட்டிக்கொடுக்க திட்டமிட்டபின் இயேசு கூறுகின்றார் என்னை உங்களில் ஒருவன் காட்டிக்கொடுப்பான் என்று. ஒவ்வொருவரும் நானோ நானோ என்றுகேட்கின்றார்கள். இயேசு கூறுகின்றார் நான் யாருக்கு அப்பத்தை தோய்த்து கொடுக்கின்றோனோ அவனேஎன் பார். ஆவ்வாறு யூதாஸ் இஸ்காரியோத்திற்கு தோய்த்து கொடுத்தபின் சாத்தான் அவனுக்குள்ளே நுழைந்தான் என்று பார்க்கிறோம்.

அருட்பணி ஜோசப்கென்னடி...

எந்தவொரு முறையின் கீழாவது

# மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும்

பொதுஜன பெரமுன மாகாண சபைகள் உறுப்பினர்கள் அமைப்பு கோரிக்கை



எந்தவொரு முறையின் கீழாவது மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டுமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மாகாண சபைகள் உறுப்பினர்கள் அமைப்பு கோரியுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மாகாண சபை உறுப்பினர்கள் அமைப்பு பொதுஜன பெரமுனவின் மாகாண சபை உறுப்பினர்கள் அமைப்பின் தலைவர் காஞ்சன ஜயரத்ன தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் இது தொடர்பான கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அங்கு கருத்து தெரிவித்த ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன மாகாண சபை உறுப்பினர்கள் அமைப்பின் தலைவர், கடந்த அரசாங்கம் மாகாணசபை தேர்தலை ஒத்தி வைத்து அதனை காணாமலாக்கி நான்கு வருடங்களாகின்றன. அனைத்து மாகாண சபைகளின் உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்துள்ளன. மாகாணசபை முறை

06

ஈஸ்டர் தாக்குதல்:

## அமைச்சரவை உப குழு அறிக்கை பூர்த்தி



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கையின் பரிந்துரைகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவின் அறிக்கை தயாரிக்கும் பணி நிறைவடைந்துள்ளதாக அந்த குழுவின் உறுப்பினர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையை நேற்று ஜனாதிபதி

06

## பிரசாந்தனின் விளக்கமறியல் 14 நாட்கள் நீடிப்பு



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தனை மேலும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.ரிஸ்வான் உத்தரவிட்டுள்ளார். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பூ.பிரசாந்தன் மீதான வழக்கு விசாரணை நேற்று (29) எடுத்துக்கொள்ளப்பட்டபோது கொரோனா நிலைமை காரணமாக அவரை நீதிமன்றத்துக்கு அழைத்துவரமுடியாதென சிறைச்சாலை

06

## பாணம பகுதியில் 3 ஏக்கரில் கஞ்சா பயிர்ச் செய்கை STF சுற்றிவளைத்ததில் மூவர் சிக்கினர்

விசேட அதிரடிப்படையினரால் பாணம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் 3 ஏக்கர் நிலத்தில் கஞ்சா பயிரிடப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளதால் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த சுற்றிவளைப்புக்கள் தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்ததாவது,

தப்பிச் சென்றுள்ள குறித்த சந்தேகநபர்கள் வசித்த இடத்திலிருந்து 5 தொலைபேசிகள் , 5 கிலோ கிராம் கஞ்சா மற்றும் உள்நாட்டு துப்பாக்கி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் பேலியகொடை நுகேபார பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 205 கிராம் ஹெரோயின், 306 கிராம் கஞ்சா, 48,000 ரூபா பணம் என்பவற்றுடன்

06

## 24 மணி நேரத்தில் 1,766 பேர் வருகை



நேற்று காலை 8.30 உடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் விமானங்களின் ஊடாக 1,766 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்த காலப்பகுதிக்குள் 17 சரக்கு விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

06

# இறக்குமதி செய்யும் சீனி, பருப்பு, பால்மா குறித்து தீவிரமான கண்காணிப்பு

சுங்கத் திணைக்களப் பணிப்பாளர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இறக்குமதி செய்யப்படும் பொருட்களை தனியார் களஞ்சியசாலைகளுக்கு அனுப்புவதை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்கள பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ரவிப் பிரிய தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய தேங்காயெண்ணை மீள் ஏற்றுமதி செய்வதற்கு தீர்மானித்துள்ள நிலையில் அதற்கான உத்தரவை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

துறைமுகத்தில் களஞ்சியப்படுத்துவதற்கான போதிய இடவசதி இல்லாமல் உள்ள நிலை சுங்கம் மற்றும் நுகர்வோர் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடும் நிலையிலும் மேற்படி தீர்மானத்தை சுங்கம் எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுங்கத் திணைக்களத்தில் இருந்து தனியார் களஞ்சிய சாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள குறித்த சர்ச்சைக்குரிய தேங்காய்எண்ணெய் அதே நிலையில் உள்ளதா அல்லது அவற்றில் ஒரு தொகை

06



# அனைத்து பாடசாலைகளும் நேற்று மீள ஆரம்பம்

ஏப்ரல் 9 இல் விடுமுறை

**ஷம்ஸ் பாஹிம்**

நீண்ட நாட்களின் பின், நேற்று நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும், அனைத்து வகுப்புக்களும் மீள் திறக்கப்பட்டமையிட்டு மகிழ்ச்சியடைவதாக கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இதுவே இந்நாட்டின் பெற்றோரின் எதிர்பார்ப்பாக இருந்தது. பாடசாலை விடுமுறை தவணை ஏப்ரல் 09ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அதன் பின் புதிய தவணை ஏப்ரல் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பொதுஜன பெரமுன ஊடக மாநாட்டில் நேற்று கருத்துத் தெரிவித்த அவர் ,நாட்டின் சுகாதாரத் துறை மற்றும் விசேட நிபுணர்களின் ஆலோசனைக்கமைய, பாடசாலைகளை ஆரம்பிக்கின்ற நிலைமை

06

## சுயஸ் கால்வாயில் தரை தட்டியிருந்த கப்பல் மீண்டும் பயணம்

ஆறு நாட்களின் பின் முடிவுக்கு வந்தது

உலகின் பிரதான கடல் வழித்தடமான சுயஸ் கால்வாயில் கடந்த 23 ஆம் திகதி தரை தட்டியிருந்த எவர்கிவன் சரக்கு கப்பல் மீண்டும் மிதக்க ஆரம்பித்துள்ளதாக சுயஸ் கால்வாய் நிர்வாகத்தினரை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இக்கப்பல் சிக்கியிருந்தமையினால் சுயஸ் கால்வாயின் ஊடான போக்குவரத்து

06

வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த

# ஏப்ரல் முதலாம் திகதி முதல் விசேட போக்குவரத்து திட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்வரும் புத்தாண்டுக் காலங்களில் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் வகையில் ஏப்ரல் முதலாம் திகதி முதல் விசேட போக்குவரத்து திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதன் ஒரு அம்சமாக தூரப் பிரதேச பஸ் சேவைகளில் சிவில் உடை தரித்த அதிகாரிகளை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் திருட்டு தொடர்பான

06

# பாடசாலை வருகையில் ஆர்வம் காட்டிய மேல் மாகாண மாணவர்கள்

பெற்றோரும் ஒத்துழைப்பு; சுகாதார வழிகாட்டல் பின்பற்றல்



மேல் மாகாணத்திலுள்ள அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் தரம் ஒன்று முதல் சகல தரங்களுக்கும், இந்த ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகள் நேற்றைய தினம் மீள ஆரம்பமாகின.

ஆயினும் பாட விதானங்கள் தொடர்பில் உரிய தெளிவூட்டல்கள் வழங்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அத்துடன் சாதாரண அளவு மாணவர்களின் வருகையே நேற்று பதிவானதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்திலுள்ள அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில், தரம் ஒன்று முதல் சகல தரங்களுக்கும், இந்த ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டன.

சுகாதார வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டு பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகள்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 150.36 | 154.89 |
| கனடியன் டொலர் | 155.60 | 161.07 |
| யூரோ | 232.33 | 238.25 |
| ஜப்பான் யென் | 1.7960 | 1.8461 |
| சிங்கப்பூர் டொலர் | 146.24 | 150.31 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 271.93 | 278.34 |
| சுவிஸ் பிராங்க் | 207.82 | 215.74 |
| அமெரிக்க டொலர் | 197.28 | 201.77 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 525.65 | கட்டார் ரியால் | 54.41 |
| குவைத் டினார் | 655.75 | சவூதி ரியால் | 52.83 |
| ஓமான் ரியால் | 514.74 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 53.95 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 16

### குறள் தரும் சிந்தனை

இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு

பொருள் வேண்டும் என்ற இரந்தவரின் மகிழ்ந்த முகத்தைக் காணும் வரைக்கும் (இரத்தலைப் போலவே) இரந்து கேட்கப்படுவதும் துன்பமானது.

## அலட்சியத்தைக் கடைப்பிடித்தால் கல்வி நடவடிக்கைகளுக்கு ஆபத்து

கொவிட்19 தொற்றானது உலகின் அனைத்துத் துறைகளிலும் மாற்றங்களையும் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் இலங்கையும் பாதிப்புகளையும் தாக்கங்களையும் சந்தித்து இருக்கின்றது. அவற்றில் கல்வித் துறையும் அடங்கும்.

இந்நாட்டில் 2020 மார்ச் நடுப் பகுதியில் இத்தொற்று பதிவாகத் தொடங்கியதும் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் மறுஅறிவித்தல் வரை விடுமுறை வழங்கப்பட்டதோடு, இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டன. பாடசாலைகள் ஊடாக இத்தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தவே பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

இந்நாட்டில் முதலாம் தரம் முதல் 13ஆம் தரம் வரையும் சுமார் 42 இலட்சம் மாணவர்கள் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு கல்வி அளிக்கும் பணியில் 02 இலட்சத்து 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இப்பாடசாலைகளில் கடமையாற்றுகின்றனர். அத்தோடு ஒரு இலட்சத்து 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தனியார் பாடசாலைகளிலும் கல்வி பெறுகின்றனர்.

இத்தொற்றானது 2020 மார்ச் மாதத்திற்கு முன்பு போன்று சகல பாடசாலைகளையும் ஒரே நேர காலத்தில் ஆரம்பிப்பதற்கு கடந்த ஒரு வருட காலமாக பெரும் சவாலாக இருந்து வந்திருக்கின்றது. இது வேகமாகப் பரவும் ஒரு நோயாக இருப்பதால் இந்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்ட பரந்துபட்ட நடவடிக்கைகளின் பயனாக 2020 ஏப்ரல் மாதத்தின் பின்னர் இத்தொற்றின் முதலாம் அலை பெருவீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டதோடு நாட்டில் இயல்பு நிலையும் கட்டம் கட்டமாக ஏற்படுத்தப்பட்டது. இதற்கேற்ப இத்தொற்று அச்சுறுத்தல் இல்லாத பிரதேசங்களில் பாடசாலைகளும் கட்டம் கட்டமாக திறக்கப்பட்டன. ஆனாலும் முதலாம் அலை பெருவீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டும் கூட, முழு நாட்டிலும் பாடசாலைகளை இத்தொற்று பரவுதலுக்கு முன்பு இருந்ததைப் போன்று ஆரம்பிக்க முடியவில்லை. கடந்த ஒக்டோபர் மாத முதல் வாரத்தில் இத்தொற்றின் இரண்டாம் அலை மினுவாங்கொடையில் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து மேல் மாகாணம் உட்பட நாட்டின் பல மாகாணங்களிலும் பாடசாலைகளுக்கு மீண்டும் விடுமுறை அளிக்கப்பட்டது.

கொவிட் 19 தொற்று அச்சுறுத்தல் காரணமாக கல்வி பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர் தரப் பரீட்சைகளும் காலதாமதப்படுத்தியே நடத்தப்பட்டன. பொதுப் பரீட்சைகளைக் கூட உரிய நேர காலத்தில் நடத்த முடியாத நிலைமையை ஏற்படுத்தியது இத்தொற்று.

இப்பினும் இரண்டாம் அலைத் தொற்று பெருவீழ்ச்சிக்கு கொண்டு வரப்பட்டுள்ள தற்போதைய சூழலில் மேல் மாகாணம் உட்பட முழு நாட்டிலும் ஒரே நேரத்தில் நேற்று (29 ஆம் திகதி) பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு முன்னெடுத்தது. இருந்தும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளை திட்டமிட்டபடி ஆரம்பிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. அதாவது கடந்த சில தினங்களாக யாழ் குடாநாட்டின் சில பிரதேசங்களில் கொவிட்19 தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது. இதனால் யாழ்ப்பாணத்தின் சில பிரதேசங்களில் இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்காக இறுக்கமான நடைமுறைகளும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்நிலையில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்கு உட்பட சகல பாடசாலைகளுக்கும் நேற்று முதல் ஒரு வார காலத்திற்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அதன் விளைவாகவே யாழ்ப்பாண கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளை திட்டமிட்டபடி ஆரம்பிக்க முடிந்தது.

இது கொவிட்19 தொற்று மனித வாழ்வுக்கு எவ்வளவு தூரம் அச்சுறுத்தல் மிக்கதாகவும் பாதிப்பு கொண்டதாகவும் விளங்குகின்றது என்பது நல்ல எடுத்துக்காட்டாகும்.

அதன் காரணத்தினால் தற்போது நாட்டில் இத்தொற்றின் பரவுதல் வீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ள போதிலும், இத்தொற்று நாட்டில் முற்றாகக் கட்டுப்பாட்டு நிலையை அடையவில்லை என்பதை மறந்து விடலாகாது. அதனால் கொவிட்19 தவிர்ப்புக்கான தடுப்பூசி வழங்கப்படுகின்ற போதிலும் இத்தொற்று தவிர்ப்புக்காக முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகழுவுதல் உள்ளிட்ட சுகாதார வழிகாட்டல்களை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதில் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்த வேண்டும். அதுவே இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த வழிமுறையாகும். தவறும் பட்சத்தில் இத்தொற்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தோற்றம் பெற்று தீவிரமடைய முடியும் என்பதை மறந்து விட முடியாது.

editor.tkn@lakehouse.lk

# சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாடகங்கள் ஊடாக விழிப்புணர்வு

நாடகத் துறையில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளை ஒன்று திரட்டி மாவட்ட மட்டத்தில் நாடகக் குழுக்களை ஏற்படுத்தி, கிராமங்கள் ரீதியாக சமூக விழிப்புணர்வு



நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் வழிகாட்டுதலில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இத்திட்டத்தை மாவட்ட ரீதியாக அமுல் நடத்த விருக்கின்றது. இதன்படி மாவட்டங்கள் தோறும் நாடகத் துறையில் திறமை படைத்த மற்றும் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளைக் கொண்டு இளைஞர் நாடகக் குழுக்களை ஏற்படுத்துவதற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் விஷேட திட்டத்தை அமுல் நடத்தி வருகிறது.

இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்துக்கான இளைஞர் நாடகக் குழுமம் உருவாக்குவதற்கான விஷேட நிகழ்வு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலக வளாகத்தில் மாவட்ட இளைஞர் சேவைகள் உதவிப் பணிப்பாளர் ஹாலிதீன் அமீர் தலைமையில் நடைபெற்றது.

இந்த விசேட நிகழ்வில் சிறப்பு அதிதியாக தேசிய இளைஞர் சேவைகள்



மன்றத்தின் முன்னாள் உதவி கலாசார பணிப்பாளரும், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அபிவிருத்திக் குழுவின் தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தனின் இணைப்பாளர் தம்பிராசா ஈஸ்வரராஜா கலந்து கொண்டு சம்பிரதாயபூர்வமாக இந்த மாவட்ட கலாசார நாடகக் குழுவை ஆரம்பித்து வைத்தார்.

### இளைஞர் நாடக குழுமம் மட்டக்களப்பில் அங்குரார்ப்பணம்




இந்நிகழ்வில் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிகளான எஸ். தர்மரத்தினம், திருமதி கலாராணி ஜேசுதாசன், நிசாந்தி அருள்மொழி உள்ளிட்ட பல அதிகாரிகளும் இளைஞர், யுவதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வின் இறுதியில் கிராம மட்டத்தில் சமூகப் பிரச்சினைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சமூக மாற்றத்தை கொண்டு வருவதற்குமான வீதி நாடகம் தயாரிக்கும் பணிகளும் இங்கு ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இங்கு பயிற்றுவிக்கப்படும் நாடகக் கலைஞர்கள் தமது படைப்புகளை கிராம மட்டத்தில் சமூக பிரச்சினைகளுக்கான விழிப்புணர்வு திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படவிருப்பதாக மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஹாலிதீன் அமீர் தெரிவித்தார்.

# டெங்கு நுளம்புகள் பெருகுவதை ஒழிக்க புதுமையான செயல் திட்டம்

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் டெங்கு நுளம்பு பரவலை கட்டுப்படுத்தும் முகமாக 150 வருட பூர்த்தி நிறைவினை விரைவில் கொண்டாட இருக்கும் கல்முனை அல் அஸ்ஹர் வித்தியாலயத்தில் வித்தியாசமான முறையில் மாபெரும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடைபெற்றது. கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர். எம்.அஸ்மி வழிகாட்டலில், மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஏ.எம். பாறுக் நெறிப்படுத்தலில், சுகாதாரப் பரிசோதகர் எம்.ஜுனைதின் ஏற்பாட்டில் அண்மையில் விழிப்புணர்வு செயல் திட்டம் நடத்தப்பட்டது.

தங்கள் வீட்டிலும் ,வீட்டுக்கு வெளியிலும் உள்ள இடங்களில் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய பொருட்களை அதிகமாகக் கொண்டு வரும் மாணவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்படும் என ஊக்குவிக்கப்பதுடன், அதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் ஒரு வாரமாக பாடசாலையில் வழங்கப்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து பாடசாலைக்கு வருகை





தந்த மாணவர்கள் டெங்கு நுளம்புகள் பரவக் கூடிய அனைத்து பொருட்களையும் தங்களுடன் கொண்டு வந்தனர் . இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கம் டெங்கு நுளம்பு பரவலை முற்றாக தடுப்பதாகும். மாணவர்கள் பிளாஸ்டிக் பொருட்கள், சிரட்டை போன்றவற்றை பெருமளவில் கொண்டு வந்தனர். அவை குவியலாய் காட்சியளித்தன. மாணவர்களினால் கொண்டு வரப்பட்ட பொருட்கள் யாவும் ஓரிடத்தில் குவிக்கப்பட்டதுடன், மாணவர்களுக்கு கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் டெங்கு பரவும் முறைகள் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

கொண்டுவரப்பட்ட பொருட்கள் யாவும் கல்முனை மாநகர சபை திண்ம கழிவு அகற்றல் பிரிவு மூலம் அகற்றப்பட்டன. 40க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இது தொடர்பில் பாடசாலை அதிபர் ஏ.எச்.அலி அக்பர் கருத்துத் தெரிவிக்கையில்

"எமது சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டியது எம் அனைவரின் பொறுப்பாகும். இவ் விழிப்புணர்வு மூலம் டெங்கு நுளம்பு பரவல் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்ள முடிகின்றது. இதன் மூலம் மாணவர்களை நாம் முன்மாதிரியாக மாற்ற முடியும். மேலும் சுற்றுச் சூழல் தொடர்பான அறிவு மேலும் மாணவர்களுக்கு அதிகரிக்கும்" என்றார் .

விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொண்ட சுகாதாரப் பிரிவினருக்கு நன்றிகளையும்பாராட்டுக்களையும் அதிபர் தெரிவித்தார்.

**எம்.என்.எம்.அப்ராஸ்**

# கல்வித் திட்டத்தில் மாற்றம் அவசியம்

கல்வி என்பது நாட்டின் தேவைக்கேற்ப மாறுபட வேண்டியது. ஒரு நாடு வளம் பெறுவதற்கு அரசியல் ஸ்தீரம்,பொருளாதார வளர்ச்சி முக்கிய காரணிகளாகும். இன்று எமது நாட்டில் உறுதியான ஓர் ஆட்சி நிலவுகிறது என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். எனவே கல்வியில் பல மாற்றங்கள் கண்டிப்பாகச் செய்யயப்பட வேண்டும்.

அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் நம் நாட்டின் பொருளாதாரம் தென்னை, இறப்பர், தேயிலை போன்றவற்றிலேயே தங்கியிருந்தது. அன்று மிகவும் செழிப்பான யுகமாகவும் காணப்பட்டது. இன்று நாட்டின் பொருளாதாரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுற்றுலாத் துறை போன்றவற்றையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

இதை உணர்ந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு கல்வித் திட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது.

இதற்கு முன்னரும் நாட்டின் கல்வி முறையில் பல தடவை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக 1943, 1964, 1966, 1974, 1981 ஆகிய ஆண்டுகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. இருந்தும் அவை எதிர்காலத்தையும் நாட்டையும் கருத்தில் கொண்டு செய்யப்பட்டனவா என்பது கேள்விக்குரியது.



நீர்வளம், நிலவளம் அனைத்தும் விவசாயத்துறைக்கு சாதகமாக இருந்த போதிலும் நாம் இன்னும் அத்துறையில் தன்னிறைவு பெறாதது கவலைக்குரியதாகும்.

இன்று கல்வியில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு நாட்டின் அனைத்துப் பிஜைகளின் உள்ளங்களிலும் நாட்டுப் பற்றை, குறிப்பாக இளைய தலைமுறையினர் உள்ளங்களில் ஏற்படுத்த வேண்டும். ஐந்தாம் தர புலமைப் பரீட்சை சுமையை சிறு மாணவர்களுக்கு இல்லாது ஒழிக்க வேண்டியது அவசியம். இப்பரீட்சையை ரத்துச் செய்வதற்கு தனியார் வகுப்பு நடத்துவோர் விரும்பப் போவதில்லை.

க.பொ.த சாதாரண தரத்தில் ஒன்பது பாடங்களை முடிந்த அளவில் குறைத்து மொழி, சமயம், விவசாயம், கைத்தொழில், தகவல் தொழில்நுட்பப் பாடங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். பல்கலைகழகங்களுக்கு மருத்துவம், பொறியியல், கைத்தொழில், தகவல் தொழில்நுட்பத் துறைகளுக்கு கூடுதல் மாணவர்களை உள்வாங்கி அதன் மூலம் நாட்டில் திறமைசார் இளவயதினரை உருவாக்க முடியும்.

**ஏ. ஸீ. எம். ஜிப்ரி**
(காலி)

# இந்துக்களின் பண்டைய இருப்பை வெளிப்படுத்தும் தொண்டீஸ்வரம்

இலங்கையை சிவபூமி என்றார் திருமூலர். வட இந்தியாவிலிருந்து வந்து விஜயனுடன் கரையொதுங்கியவர்களில் ஒருவரான உபதிஸ்ஸன் என்கின்ற பிராமணர், இலங்கையில் நான்கு திசைகளிலுமிருந்த ஐந்து சிவாலயங்களைச் சென்று தரிசித்ததாகக் கூறப்பட்டுள்ளது. விஜயனின் வருகை புத்தர் பெருமானின் ஜனனத்துக்கு முற்பட்டதாகும்.அதாவது புத்தர் பிரான் அவதரிப்பதற்கு முன்பே இந்நாட்டில் சிவ வழிபாடு சிறந்தோங்கியிருந்தது என்று கூறப்பட்டுள்ளது.

உபதிஸ்ஸன் சென்று வழிபட்ட சிவத்தலங்கள் ஐந்தும் இன்று பஞ்சேஸ்வரங்கள் என்று கூறப்படுகின்றன. அவை வடக்கே நகுலேஸ்வரம், கிழக்கே திருக்கோணேஸ்வரம், தெற்கே தொண்டீஸ்வரம், மேற்கே முன்னேஸ்வரம் மற்றும் திருக்கேதீஸ்வரம் என்பவையாகும். இவ்வைந்து சிவாலயங்களும் போர்த்துக்கேயரால் சிதைத்தழிக்கப்பட்டபோதும், தொண்டீஸ்வரம் தவிர்ந்த ஏனைய நான்கு ஈஸ்வரங்களும் மீண்டும் தமது பண்டைய சிறப்புடன் இன்று துலங்குகின்றன.

ஆனால் தொண்டீஸ்வரத்தின் நிலை வேறுபட்டுள்ளது. இலங்கையின் தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் தென்முனையில் உள்ளது தேவேந்திரமுனை. பருத்தித்துறையை தீவின் வடக்கெல்லையாகக் குறிப்பிடுவது போன்று தெற்கெல்லையாகத் தேவேந்திரமுனை குறிப்பிடப்படுவது வழக்கிலுள்ளது. பருத்தித்துறையில் உள்ள சிவாலயம் பசுபதீஸ்வரம். அதுபோல் தேவேந்திரமுனையில் இருந்தது தொண்டீஸ்வரம், சந்திரசேகரேஸ்வரம் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

போர்த்துக்கேயரின் வருகையின் முன்னர் இலங்கையிலிருந்த இந்துக்களின் மிகப் பெரும் வரலாற்றுச் சிறப்புமிகு தொண்டீஸ்வரத் திருக்கோயில் அந்நியரின் வருகையின் பின்னர் சிதைத்தழிக்கப்பட்டது. போர்த்துக்கேயருக்கும் முதலாம் இராஜசிங்க மன்னனுக்கும் இடையே இடம்பெற்ற போரின் போது இத்திருக்கோயில் சிதைத்துக் கொள்ளையிடப்பட்டது.

கி.பி. 1587 இல் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது. சீனச் சக்கரவர்த்தியால் இச்சிவாலயத்திற்கு வழங்கப்பட்ட பல பெறுமதி வாய்ந்த பொருட்களும் போர்த்துக்கேயரால் கொள்ளையிடப்பட்டு இன்றும் லிஸ்பன் நகர தொல்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

தென்னிலங்கை கரையினிலே தொன்மை மிகுந்த தொண்டீஸ்வரம் இன்று திருமாலின் திருத்தலமாகப் பிரசித்தி பெற்றுள்ளது. ஈஸ்வரனை மூலமூர்த்தியாகக் கொண்டு விளங்கிய தொண்டீஸ்வரம், இன்று தென்னிலங்கையில் பிரசித்தி பெற்ற விஷ்ணு கோயிலான சீரமைப்பு செய்யப்பட்டு மக்கள் வழிபாட்டிற்குரியதாக விளங்குகின்றது.

மாத்தறை நகரத்திலிருந்து இரண்டரை மைல் தொலைவில் மாத்தறை_ ஹம்பாந்தோட்டை வீதியில் தெவிநுவரையில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. கடலையண்டியதாக அமைந்துள்ள தெவிநுவரையில் கடலை எல்லையாகக் கொண்ட இந்துத் தெய்வமான விஷ்ணுவின் திருத்தலமாகப் பண்டைய தொண்டீஸ்வரம் விளங்குகின்றது.

இன்று தெவிநுவர விஷ்ணு தேவாலயம் என்று சிறப்புடன் போற்றப்படும் இக்கோயில் பௌத்த மக்களால் பக்தியுடன் வழிபாடு செய்யப்படும் இந்துக் கோயில்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. தெவிநுவர என்பதன் பொருள் தேவநகர் அல்லது தெய்வநகர் எனத் தமிழில் பொருள்படுகின்றது. இன்று சிங்கள மொழியில் தெவிநுவர என்று வழக்கிலுள்ள பெயர் ஆதியில் 'தேவ நகர்' என்ற தமிழ்ப் பெயரிலேயே அழைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ் மன்னன் ஆரியசக்கரவர்த்தியை எதிர்த்துப் போரிடச் செல்லு முன்னர் தன் வெற்றிக்காக சப்புமல்குமாரயா என்று கூறப்படும் செம்பகப் பெருமாள், தொண்டீஸ்வரத்திற்குச் சென்று வழிபாடு செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

கி.பி 1234 – 1271 வரை தம்பதெனியாவிலிருந்து ஆட்சி செய்த இரண்டாம் பரக்கும்பா மன்னன் காலத்தில் தொண்டீஸ்வரத்தின் வருடாந்த திருவிழாக்கள் சிறப்பாக இடம்பெற்றிருந்தன. சிறப்பாக இடம்பெற்று வந்த திருவிழா 1587 இல் இடம்பெற்ற யுத்தத்தின் பெறுபேறாகக் கைவிடப்பட்டது. கோட்டை நிர்மாணிக்கப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. தொண்டீஸ்வரம் அமைந்திருந்தமையால் ஐரோப்பியர் தொண்றா (DONDRA) என்று தேவேந்திர முனையைக் குறிப்பிட்டுள்ளனர். நீர்கொழும்பு என்ற தமிழ்ப் பெயர் 'நிகம்பு' என்று மாறியது போன்றது இந்தப் பெயர் மாற்றம் என்று கொள்ளலாம்.



விஜயன் வந்த போது இருந்த சிவாலயங்கள் பற்றி 'யங்' ஆசிய வெளியீட்டின் வரலாற்றறிஞரான சேர் போல் பீரிஸ் இலங்கையிலிருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஐந்து சிவாலயங்களைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். பஞ்சேஸ்வரங்கள் என்று இந்துக்கள் போற்றும் அந்த ஐந்து சிவாலயங்களுமே அவை என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்று தமிழ் – சிங்கள மக்களின் ஐக்கியம் நிறைந்த திருத்தலம்

சிங்கள இனத்தவரான அறிஞர் சேர் போல் பீரிஸ் ஆராய்ந்து எழுதிய கட்டுரை தென்னிலங்கையில் தேவேந்திர முனையில் சிறப்புமிகு சிவாலயமாகத் தொண்டீஸ்வரம் விளங்கியமையை ஆதாரப்படுத்துகின்றது. மாத்தறை மாவட்டத்திலுள்ள பலரின் பரம்பரைப் பெயர்களில் தமிழ் தொக்கி நிற்பதை அவதானிக்கலாம். பெருமான் அல்லது பெருமாள் என்ற பதம் 'பெருமா' என்று முடியுமாறு பல பெயர்கள் உள்ளன. நல்ல பெருமா, வீரப் பெருமா... இவ்வாறு தமிழ்க் கருத்துக்களை முன்னதாகக் கொண்டு பெருமா என்று முடிவைக் கொண்டவையாக பெயர்கள் அமைந்துள்ளன.

அன்று சிவபெருமான் கோயில் கொண்டிருந்த பகுதியில் இன்று விஷ்ணு பெருமாள் கோயில் கொண்டுள்ளார். பெருமானோ, பெருமாளோ மக்களின் பெயர்களில் இணைந்திருப்பது சிறப்பானது. நல்ல, இளைய, பொன்னம், அழக போன்றவற்றுக்கு சிங்கள மொழியில் கருத்தில்லை. ஆனால் தமிழ்மொழியில் கருத்துண்டு. தூய தமிழ் மொழியை முதலாகக் கொண்டவர்களாக தென்னிலங்கையில் சிங்கள பௌத்தர்கள் வாழ்வது பண்டைய உறவின் வெளிப்பாடல்லவா?

போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டு புனித லூசியா தேவாலயம் அமைக்கப்பட்ட தொன்மையான தொண்டீஸ்வரம் இருந்த அதே நிலப்பரப்பில் 1955 ஆம் ஆண்டு மூன்று அடுக்குகளைக் கொண்ட விஷ்ணு கோயில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சிவாலயம் விஷ்ணு ஆலயமாக மாற்றமடைந்தாலும் இந்துக்களின் வழிபாட்டிற்குரிய விஷ்ணுவே மூலமூர்த்தியாக இருப்பது இந்து சமயத்தின் பண்டைய பெருமையை மிளிரச் செய்கின்றதென்று கொள்ள வேண்டும்.

தொண்டீஸ்வரம், சந்திரசேகரேஸ்வரம் என்ற திருப்பெயருடன் சந்திரமௌலீஸ்வரம் என்ற பெயரும் இக்கோயிலுக்குரிய தொன்மையான பெயர்களிலொன்றாகும்.

தற்போது விஷ்ணு கோயிலாக விளங்கும் தொண்டீஸ்வரத்தின் நிலப்பரப்பில் பண்டைய பல தொன்மையான ஆதாரங்களுள்ளன. அவற்றிலே சிவலிங்கம், அழகாக வடிவமைக்கப்பட்ட நந்தி, பழைமைமிக்க விநாயகப் பெருமானின் கருங்கல்லினாலான திருவுருவம் மற்றும் நான்கு வரிசைகளாகவுள்ள கருங்கற் தூண்கள் ஆகும்.

விஷ்ணு கோயிலுக்கு உரித்தான சிவலிங்கமும், நந்தியும் பண்டைய சிவாலயத்தின் இருப்பை உறுதி செய்கின்றன. இவ்வாலய வளவில் சிற்பங்கள் செதுக்கப்பட்ட பல கருங்கல் படிமங்களுமுள்ளன. வரலாற்றுச் சிறப்புக் கொண்டதாகக் கொள்ளப்படும் தெவிநுவர விசித்திர விகாரையின் ஒத்பிலிம விகாரையில் மேற்குறிப்பிட்ட சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது பிரசித்தி பெற்றதும் லண்டனிலிருந்து வெளிவருவதுமான 'நியூஸ் லங்கா' என்ற வாராந்தர சஞ்சிகையின் 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆந் திகதி வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1917 இல் பழைமை வாய்ந்த தொண்டீஸ்வரம் தொடர்பாக வரலாற்றாய்வாளர் சேர் போல் பீரிஸ் தனது ஆய்வு கட்டுரையின் மூலம் வெளிப்படுத்தினார். 1998 இல் சான்றுகள் மூலம் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சுற்றாடலில் வேறெந்தவொரு சிவாலயமும் இருந்ததற்கான ஆதாரங்கள் இன்மையும், இங்கு கண்டெடுக்கப்பட்ட சிவாலயச் சின்னங்கள் பழம் பெரும் தொண்டீஸ்வரத்திற்கே உரியவை என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

ஆவுடையார் அகப்படாத நிலையில் கண்டெடுக்கப்பட்ட நான்கு அடிகள் உயரமான சிவலிங்கத்தை நோக்கும் போது மூலமூர்த்தியாக விளங்கிய ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கத்தின் பாரிய அளவினைக் கணிக்க முடிகின்றது. அழகுற வடிவமைக்கப்பட்ட நந்தியின் திருவுருவம் பிள்ளையார் கோயிலுக்கு வெளியே வைக்கப்பட்டுள்ளது. மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட இந்நந்தியின் திருவுருவம் பல்லவர் காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று ஊகிக்க முடிகின்றது.

பிள்ளையார் கோயிலில் திரைச்சீலையால் மூடிமறைக்கப்பட்ட நிலையில் உள்ளது பண்டைய பிள்ளையாரின் திருவுருவம். கருங்கல்லாலான பெரிய அளவைக் கொண்ட மேற்படி திருவுருவம் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுவும் பண்டைய திருக்கோயிலின் ஆதாரச் சின்னமாக விளங்குகின்றது.

அடுத்ததாக பண்டைய சிவாலயத்தின் இருப்புக்கும், வரலாற்று நிகழ்வுக்கும் கட்டியம் கூறி நிற்பவை நான்கு வரிசைகளில் வரிசையாகவுள்ள கற்றூண்களாகும். புராதன சின்னங்களாகக் கொள்ளப்படும் இக்கற்றூண்கள் போர்த்துக்கேயரால் சிதைக்கப்பட்ட தொண்டீஸ்வரத்தின் மண்டபத் தூண்களாகும். இதன் மூலம் கருங்கற்றூண்களைக் கொண்ட பிரமாண்டமான மண்டபங்களைக் கொண்டதாகத் தொண்டீஸ்வரம் விளங்கியுள்ளது என்பது சான்றுகளுடன் வெளிப்படுகின்றது.

## 2550 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்னிலங்கை சிவாலயம்

இன்று இக்கோயில் வளவிலே விஷ்ணு பெருமான் மூலவராக வீற்றிருக்க விநாயகர், முருகன், சூரியன், அம்மன் உட்பட பல இந்துத் தெய்வங்கள் அமர்ந்து அருள் செய்கின்றன. ஒருபுறம் பழைமையும் பெருமையும் கொண்ட காலி மீனாட்சி சுந்தரேஸ்வரமும் மறுபுறம் தமிழ் தெய்வமென்று போற்றப்படும் கதிர்காமக் கந்தன் திருத்தலமும் அமைந்திருப்பது தேவநகர் தொண்டீஸ்வரத்திற்கு மேலும் சிறப்பு சேர்க்கின்றது.

மூலவராக விஷ்ணு வீற்றிருக்கும் மண்டபத்தில் விஷ்ணுவின் அவதார மூர்த்தங்கள் அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன. வராக, நரசிம்ம, பரசுராம, கிருஷ்ண, ராமச்சந்திர என்று சகல அவதாரங்களும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

ஆண்டு தோறும் ஆடிமாதம் வருடாந்த மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இலங்கையில் பிரசித்தி பெற்ற சமத் திருவிழாக்களில் தெவிநுவர விஷ்ணு ஆலய வருடாந்த மகோற்சவம் சிறப்புப் பெறுகிறது. தென்னிலங்கையின் காவல் தெய்வமாகப் போற்றப்படுபவரும் விஷ்ணு பகவானே. இதனால், தென்மாகாணத்தின் சிறப்பு மிகு திருவிழாவாக இலட்சக்கணக்கானவர்கள் கலந்து கொள்ளும் பெருவிழாவாக இவ்வாலய மகோற்சவம் இடம்பெறுகின்றது.

மூன்றாம் சங்ககாலம் அதாவது கடைச்சங்க காலத்தின் ஆக்கப்பட்டது சிலப்பதிகாரம். தமிழுக்கு அணிசேர்க்கும் காவிய நூல் இது. இளங்கோ அடிகளாரால் ஆக்கப்பட்ட இக்காவிய நூலிலுள்ள பாடல்களுக்கு மேற்குறிப்பிட்ட விஷ்ணு ஆலய மகோற்சவத்தின்போது சிறப்பிடம் வழங்கப்பட்டு வருவது வழக்கமாகவுள்ளது. இது சிலப்பதிகாரத்திற்கும், தமிழுக்கும், தமிழர்களுக்கும் பெருமை தருவதாயுமுள்ளது.

ஆண்டுதோறும் நடைபெறும் மகோற்சவத்தின் போது பத்தினி அம்மனுக்காக யாகம் நடைபெற்று வருகின்றது. வாழை, மா, தென்னங்குருத்துக்களால் எல்லையிடப்பட்டு புனிதப்படுத்தப்பட்ட இடத்தில் மேற்படி பத்தினியம்மனுக்கான யாகம் இடம்பெறுகின்றது.

குடை, கொடிகளுடன் சேமக்கலம், கொம்பு, உடுக்கு, தவில், தம்பட்டை ஆகியவை ஒலிக்க இந்த யாகம் ஆரம்பமாகின்றது. தமிழ் மாமுனி இளங்கோவடிகளால் ஆக்கப்பட்ட சிலப்பதிகாரத்தின் பாடல்கள் பாடப்பட்டு அதற்கேற்ப வாத்தியங்களின் ஓசையும் எழுப்பப்பட்டு இந்த யாகம் இடம்பெற்று வருகின்றது. தமிழ் மொழியில் சிலப்பதிகாரப் பாடல்கள் பாடப்பட்டு பத்தினியம்மனின் ஆசி கோரப்படுகின்றது. தென்னிலங்கையின் தென் கரையிலிருந்து தமிழ் இசையுடன் ஆண்டுதோறும் ஓங்கியொலிப்பதை அறியும் போது பெருமிதம் ஏற்படுகின்றது. கண்ணகி அறம் காத்து மறம் அழிக்க வல்லவள் என்ற வரலாறு நினைவூட்டப்படுகின்றது.

அன்னதானம் என்று கூறப்படும் மகேஸ்வர பூசை விசேடமானது மகோற்சவ இறுதியில் அன்னதானம் வழங்கப்படுகின்றது. அன்னதானம் வழங்கும் வழக்கம் இந்துக்களுக்குரியது என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மகேஸ்வரன் என்ற திருப்பெயர் சிவனுக்கு உண்டு. திருக்கோயில் பெயர் மாறினாலும் சிவனுக்குரிய முக்கிய வழிபாடான, பூசையான மகேஸ்வர பூசை தவறாது தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

போர்த்துக்கேயரால் சிதைக்கப்படுவதற்கு முன்பு கடல் பயணிகளுக்கான கலங்கரை விளக்கமாக தொண்டீஸ்வரத்தின் தங்க முலாம் பூசப்பட்டு ஒளி வீசிய கோபுர கலசங்கள் விளங்கியதாக கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் இந்து சமயத்தின் தொன்மைக்கு கட்டியம் கூறி நிற்கும் சான்றாதாரமாக விளங்கும் பெருமை பண்டைய தேவநகர், இன்றைய தெவிநுவர திருத்தலத்திற்குண்டு.

பஞ்சேஸ்வரங்களில் ஒன்றான தொண்டீஸ்வரத்தின் பழைமை, மேன்மை, இருப்பு, வளம் யாவும் வெளிக்கொண்டு வரப்படுவதன் மூலம் இலங்கையின் ஆதிக்குடிகளின் வழிபாட்டு முறையை நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்தலாம்.



த. மனோகரன்...

# கிராமங்களில் 5000 பாலங்களை அபிவிருத்தி செய்யும் திட்டம்




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்க்ஷவின் எண்ணக்கருவுக்கு அமைய, பிரதமர் மஹிந்த ராஜபக்க்ஷவின் வழிகாட்டலின் கீழ், கிராமிய மக்களினதும் விவசாயிகளினதும் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்து, அதன் மூலம் உற்பத்தியை சரியான நேரத்தில் சந்தைக்கு நகர்த்துவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கில் நாடு முழுவதும் 5000 கிராமிய பாலங்கள் அபிவிருத்தி செய்யும் திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளது.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் மிக முக்கிய பங்கை வகிப்பது வீதிகளும், பாலங்களுமாகும். அந்த வகையில் வீதி அபிவிருத்தி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் கிராமிய வீதி அபிவிருத்தி செயற்திட்டம் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றது. இதன் மற்றுமொரு அங்கமாகவே கிராமிய பாலங்களும் அபிவிருத்தி அடையவுள்ளன. கிராமப்புறங்களில் காணப்படும் கயிற்றுப் பாலங்கள், சிறிய வகை பாலங்கள் மற்றும் மரப்பாலங்களுக்குப் பதிலாக, புதிதாக பாலங்களை அமைப்பதற்காகவும் இந்த கிராமப்புற பாலங்கள் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வீதி அபிவிருத்தி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு, அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் இந்தப் பாலங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற பொருளாதாரத் துறையையும், சுற்றுலாத்துறையையும் மேம்படுத்தி மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு புத்துயிரளிக்கும் இந்தத் திட்டமானது பொருளாதார அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் செயல்படுத்தப்படுகிறது.

ஏற்கனவே கடந்த வாரம் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் அரசின் ‘சௌபாக்கியத்தின் நோக்கு’ வேலைத் திட்டத்தின் கீழ், நாட்டின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் இலக்குடன் ‘உற்பத்திக் கிராமங்களை’ உருவாக்கும் தேசிய வேலைத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வெற்றி காணும் காலப் பகுதிக்குள் அவர்களால் உற்பத்தி செய்யப்படும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை சந்தைக்குக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதும், அதன் மூலம் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதும் இதன் முக்கிய குறிக்கோள்களாகும்.

அத்துடன் இலங்கையின் கிராமப்புறங்களில் காணப்படும் சுற்றுலாத் தலங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையாக இந்த கிராமிய வீதி அபிவிருத்தியும், கிராமிய பாலங்கள் அபிவிருத்தியும் காணப்படுகின்றன.

இவை அனைத்தும் மிகுந்த சிரமத்துடன் வாழும் கிராம மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகின்ற செயற்பாடாக அமைவதுடன், அவர்களை நாட்டின் புதிய முயற்சியாளர்களாக உருவாக்குவதோடு, புதிய புதிய தொழில் துறைகளை ஆரம்பிப்பதற்கும், அதன் மூலம் தங்களது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து கொள்வதற்கும், நாட்டின் தேசிய வருமானத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் பொருத்தமான சூழ்நிலையொன்று

அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## பின்தங்கிய பிரதேச மக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு புத்துயிரளிக்க ஏற்பாடு

அத்துடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்டு வரும் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டமும் தற்போது நாடு பூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில், கிராமப்புற பிரதேசங்களில் வாழும் மக்களின் வீதிப் போக்குவரத்து குறைகளும் நாளுக்கு நாள் தணிந்த வண்ணமாக இருப்பதுடன், வீதி அபிவிருத்திப் பணிகளும் கிராமப்புற மக்களின் மனங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதுமட்டுமல்லாமல், கிராமிய வீதி அபிவிருத்தி மற்றும் பாலங்கள் அபிவிருத்தி விடயத்தில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் பெரிதும் பயனடையவுள்ளனர். கொரோனோ வைரஸ் தாக்கத்தின் பின்பு பாடசாலைகள் அனைத்தும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த தருணத்தில், இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அனைத்தும் மக்கள் மத்தியில் மகிழ்வை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக சில கிராமப்புறங்களில் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் தங்களது கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலும், உரிய நேரத்திற்கு பாடசாலைக்குச் செல்வதிலும் சிரமங்களை எதிர்நோக்கினர். ஆனால் இந்த புதிய திட்டத்தின் மூலம் ஆசிரியர்களும், மாணவர்களும் பெரிதும் நன்மை அடையவுள்ளதுடன், இலகுவாக பாடசாலைக்குச் சென்று மீண்டும் குறிப்பிட்ட நேரத்திற்குள் தங்களுடைய வீடுகளுக்குச் செல்ல வழியேற்படுகின்றது.

5000 கிராமிய பாலங்கள் அபிவிருத்தித் திட்டம் அம்பாறை மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் முதற் கட்டமாக கடந்த வாரம் உகன, பொத்துவில், மற்றும் நிந்தவூர் போன்ற பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இம்மாவட்டத்தில் சுமார் 300 கிராமிய பாலங்களை அமைப்பதற்கான பூர்வாங்க வேலைத் திட்டங்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அக்கரைப்பற்று மேலதிக மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் முன்னெடுத்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேலதிக மாகாணப் பணிப்பாளர் ஐ.எல். அமீனுல் பாரியின் மேற்பார்வையின் கீழ், மாகாணப் பணிப்பாளர் பிரிவிலுள்ள அம்பாறை, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவுகளில் பாலங்கள் அமைக்கும் பணிகள் இடம்பெறவுள்ளன.

மேலும் இதன் ஒரு அங்கமாக கடந்த வாரம் நிந்தவூர் அல்லிமுல்லை கிராமிய பாலத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வுகள், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காஸிமினால் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அக்கரைப்பற்று பிரதம பொறியியலாளர் எம்.பி. அலியார், கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் ரி. சிவசுப்ரமணியம், மேலதிக மாகாணப் பணிப்பாளர் பணிமனையின் கிராமிய பாலங்களை நடைமுறைப்படுத்தும் பொறியியலாளர் ரி. அமிர்தலிங்கம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் யு.எல். ஜௌபர், நிந்தவூர் பிரதேச சபையின் உறுப்பினர்களான எம்.எம்.எம். அன்சார், கே.எம். ஜாரிஸ் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



சுலைமான் றாபி ...
(நிந்தவூர் குறூப் நிருபர்)

## கண்டியில் பிறந்த அதிசய நாய்க் குட்டி!...

என்றும் அவற்றில் வெளியாகும் பிலிவடின் பதார்த்தம் சில சமயங்களில் பிறக்கும்போதே தோலில் படிவதாகவும் அவர் தெரிவித்தார். அதனால் இது போன்ற வேறு நிறங்களைக் கொண்ட குட்டிகள் உருவாகும் வாய்ப்பு உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், பச்சை மற்றும் நீல நிறக் குட்டிகள் பிறப்பதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுவதுடன், இவ்வாறான விடயங்கள் மிக அரிதாகவே இடம்பெறும் என அவர் தெரிவித்தார்.

இருப்பினும், சூரியனின் புற ஊதா கதிர்களின் தாக்கத்தினால் சில நாட்களில் இந்த நிலை மாற்றமடையும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

## கிட்டு பூங்காவிற்கு விஷமிகளால் தீ...

அத்துடன் கிட்டுப்பூங்கா தீ பற்றி எரிவதனை கண்ட அப்பிரதேச மக்கள், உடனடியாக யாழ்.மாநகர சபை தீயணைப்பு பிரிவுக்கு அறிவித்துள்ளனர்.

ஆனாலும் அவர்கள், வேறொரு பகுதியில் சேவையில் ஈடுபட்டிருந்தமையால், நல்லூர் முத்திரை சந்திக்கு வருவதற்கு தாமதமாகியுள்ளது.

இதனால் கிட்டுப்பூங்காவின் முகப்பு முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதாக மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## யாழில் தொற்று தீவிரம்...

பெறப்பட்ட 172 மாதிரிகளும் நேற்று நகர வர்த்தகர்களிடம் பெற்ற 596 மாதிரிகளுமாக மொத்தம் 768 மாதிரிகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன.மேலும் யாழ். போதனா வைத்தியசாலையின் மாதிரிகளும் போதனா வைத்தியசாலையில் பரிசோதனை செய்யப்படுவதனால் இவற்றில் ஒரு தொகுதியான நேற்று நகர வர்த்தகர்களிம் பெறப்பட்ட மாதிரிகள் இன்றைய தினமே பரிசோதனைக்காக எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பரிசோதனைக்காக முல்லேரியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாற்பண்ணைப்பகுதி மக்களிடம் முத்துத்தம்பி பாடசாலையில் வைத்துப் பெறப்பட்ட 172 மாதிரிகளும் நேற்று நகர வர்த்தகர்களிடம் பெற்ற 596 மாதிரிகளுமாக மொத்தம் 768 மாதிரிகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும் யாழ். போதனா வைத்தியசாலையின் மாதிரிகளும் போதனா வைத்தியசாலையில் பரிசோதனை செய்யப்படுவதனால் இவற்றில் ஒரு தொகுதியான நேற்று நகர வர்த்தகர்களிம் பெறப்பட்ட மாதிரிகள் இன்றைய தினமே பரிசோதனைக்காக எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பன்மை தன்மையை ஏற்றால்...

நேற்றிரவு நடத்திய இணையரங்கத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், சிங்களம் மட்டும், பௌத்தம் மட்டும் என்ற அடிப்படைகளில், தம்மை இரண்டாம், மூன்றாம் பிரஜைகளாக நிலை நிறுத்தும் நிலைமையை தமிழர்கள் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை.

ஆனந்தா கல்லூரி இலங்கையின் புகழ் பெற்ற சிங்கள பௌத்த கல்வி நிறுவனம். இலங்கையின் பிரபல சிங்கள அரசியல் நண்பர்களை உருவாக்கிய கல்லூரி இதுவாகும். ஆகவே இதன் பழைய மாணவர்களாகிய நீங்கள், "இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவோம்" என்ற நிகழ்வை நடத்துவது சாலப்பொருத்தமானது. இலங்கையில் சிங்கள மொழி பேசுகின்றவர்கள், பௌத்த மதத்தை பேணுகின்றவர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மை. அதில் எமக்கு பிரச்சினை இல்லை. அதுபற்றி உண்மையில் நான் மகிழ்கிறேன். ஆனால், இந்த சிங்கள, பௌத்தம் மட்டும் இலங்கை அல்ல. ஆகவே, இலங்கை நாட்டின் தேசியத்தை கட்டியெழுப்ப வேண்டுமானால், நம் நாட்டின் பன்மை தன்மையை முதலில் நீங்கள் ஏற்க வேண்டும். இதுதான் ஐக்கிய இலங்கைக்கான முதல் நிபந்தனை என்றார்.

## புத்தாண்டு கொண்டாட்டம்...

விழாக்களை நடத்துவதற்கான பரிந்துரைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில் அந்த பரிந்துரைகள் குறித்து தொழில்நுட்பக் குழு இறுதி முடிவு எடுக்கும் என கூறினார். இருப்பினும், பண்டிகை காலங்களில் பயணத்தை முடிந்தவரை மட்டுப்படுத்துமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தன. மேலும் கொரோனா தொற்றின் மற்றுமொரு அலையை தடுக்க பண்டிகை காலங்களில் நாடு முழுவதும் விசேட திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சீன கொவிட் தடுப்பூசிகள்...

வருகின்றன. சைனோஃபார்ம் தடுப்பூசிகளுக்கு இலங்கையின் அவசர பயன்பாட்டுக்கு இலங்கை தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்துகை அதிகாரசபை அனுமதியளித்துள்ளதாகவும் லலித் வீரதுங்க தெரிவித்தார். இதேவேளை, ரஷ்யாவில் தயாரிக்கப்படுகின்ற ஸ்புட்னிக் தடுப்பூசிகளும் விரைவில் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

முதற்கட்டமாக 7 மில்லியன் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. விரைவில் இந்த தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ள முடியும் என்று லலித் வீரதுங்க மேலும் தெரிவித்தார்.

## இலங்கையில் செயற்பட்டால் அல்லது...

போன்ற காரணங்களால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என அரசு தெரிவித்துள்ளது. நீண்டகாலமாக இலங்கை விவகாரங்களில் கண்காணித்து செயற்பட்டு வருகின்ற புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும் தனிப்பட்ட முஸ்லிம் மற்றும் தமிழ் உறுப்பினர்கள் உட்பட 400 இற்கும் அதிகமானவர்களின் பெயர்களையும் இலங்கை அரசு தடை செய்துள்ளது. இந்தத் தடைக்கான காரணம் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன்பில ஆகியோர் அரசின் நிலைப்பாட்டை மேற்கண்டவாறு ஊடகங்களுக்கு அறிவித்துள்ளனர்.

## மனு விசாரணையிலிருந்து...

மனு மீதான விசாரணைக்காக ஐவர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. இந்நிலையில் குறித்த விசாரணையில் இருந்து விலகுவதாக நீதியரசர் யசந்த கோதாகொட அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து மனுமீதான பரிசீலனைகள் எதிர்வரும் மே மாதம் 25 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

கொழும்பு 15 ஐ சேர்ந்த சாயிக் எனும் சிசு கடந்த வருடம் டிசம்பர் மாதம் உயிரிழந்தது. இதற்கு கொரோனா தொற்றியதாக அடையாளங் காணப்பட்ட நிலையில் பெற்றோரின் அனுமதி இன்றி கட்டாயப்படுத்தி குழந்தை எரிக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.இந்த வழக்கு மீதான விசாரணை நேற்று நடைபெற்றது.

## பண்டிகை காலத்தில் போலி...

வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தொடர்ந்தும் இவ்வாறான குற்றச்செயல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. எனவே, பண்டிகை காலத்தில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

குறிப்பாக 5,000 ரூபா நாணயத்தாள்களை பயன்படுத்தும் போது போலி நாணயத்தாள் குறித்து கவனமாக செயற்பட வேண்டும்.

அவ்வாறு போலி நாணயத்தாள்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்குமாயின் அருகிலுள்ள பொலிஸாரிடம் தெரிவிக்குமாறும் பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை மீனவர்களும்...

*தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.*

*மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்,*

*இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் 54 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு அவர்கள் இரண்டு தினங்களில் படகுகளுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.*

*குறித்த மீனவர்களின் விடுதலைக்காக இந்திய தூதரகம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த மீனவர்களுக்கு விடுதலையை பெற்றுக் கொடுத்தமை பாராட்டத்தக்கது.*

*ஆனால், இலங்கை மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பிடிபட்டு இந்திய சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள்.*

*பெரும்பான்மை இன மீனவர்கள் கைது செய்யப்பட்டால் அவர்களை விடுதலை செய்வதற்காக இலங்கை அரசாங்கமும், இந்தியாவில் இருக்கின்ற இலங்கை தூதரகமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அவர்களை விடுதலை செய்கின்றனர்.*

*ஆனால், தமிழர்கள் எல்லை தாண்டி பிடிபடும் பட்சத்தில் அவர்களையும், அவர்களின் மீன் பிடி உடமைகளையும் இன்று வரை விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.*

*எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்கள் எல்லை தாண்டி பிடிபடும் பட்சத்தில் அவர்களை விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.*

*இலங்கை அரசாங்கம் தமிழர்களின் விடயம் என்ற வகையில் அசமந்த போக்கை கடைப்பிடிக்க கூடாது. அவர்களும் மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் விடுதலைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.*

*தமிழர்கள் என்ற காரணத்தினால் அவர்கள் தொடர்ந்தும் சிறையில் வாட அனுமதிக்கக்கூடாது.*

*எனவே, தமிழராக உள்ள மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.*

## தேங்காய் எண்ணெய் சந்தைக்கு...

*வரும் நிலையில் வர்த்தக அமைச்சில் நேற்றைய தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது சுங்கம், நுகர்வோர் அதிகார சபை, தர நிர்ணய நிறுவனம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களின் முக்கியஸ்தர்களையும் அழைத்து அமைச்சர் அது தொடர்பில் உண்மை நிலையை ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தினார்.*

*அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன;*

*மேற்படி புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் கலந்த தேங்காய் எண்ணெய் இது போன்ற பண்டிகை காலத்தில் நாடளாவிய ரீதியில் விற்பனைக்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர்.*

*நுகர்வோர் அதிகாரசபை, சுகாதார அமைச்சின் உணவுப்பொருட்கள் பாதுகாப்பு பிரிவு மற்றும் தர நிர்ணய நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்கள் அது தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ள நிலையில் குறித்த தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்த நாட்டுக்கு மீள் ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*பல்வேறு பொருட்கள் தனியார் துறை நிறுவனங்கள் மூலமே இறக்குமதி செய்யப்படுகின்றன.*

*தேங்காய் எண்ணெய் மட்டுமன்றி பால்மா பருப்பு, ரின்மீன் உட்பட பல்வேறு இறக்குமதிப் பொருட்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் பரிசோதனைக்கு உட்படுத்தபடுகின்றன.*

*இம்முறை தேங்காய் எண்ணெயில் மேற்படி இரசாயனம் கலந்துள்ளமை தொடர்பில் இனம் காணப்பட்டுள்ள நிலையில் இனிமேல் இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருட்களையும் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*சுகாதார அமைச்சின் விஷேட பரிசோதனைக்கான பிரிவு மேற்படி தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் கலந்துள்ளதாக தெரிவித்துள்ளது.*

*அதனையடுத்து தர நிர்ணய நிறுவனமானது அதனை சுங்கத் திணைக்களத்திடம் தெரிவித்துள்ளதுடன் மேற்படி தேங்காய் எண்ணெய்யை மீள் ஏற்றுமதி செய்யுமாறும் குறிப்பிட்டுள்ளது.*

*அதற்கிணங்க மேற்படி தேங்காய் எண்ணெய் விற்பனைக்காக சந்தைக்கு விடப்படவில்லை என்பதுடன் ஏற்றுமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*எவ்வாறெனினும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளும் வகையில் நாட்டின் 25 மாவட்டங்களில் தற்போது விற்பனை செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*அதேவேளை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் அரசாங்கத்துக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளனர். 13 கொள்கலன் இரசாயனம் கலந்த தேங்காய் எண்ணெய் சந்தைக்கு விற்பனைக்காக விடப்பட்டுள்ளதாகவும் சீனி இறக்குமதி செய்த நிறுவனம் அதில் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். அந்த குற்றச்சாட்டுக்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. அவ்வாறு விற்பனை செய்த நிறுவனங்களின் பெயர்களையும் அவர்களால் தெரிவிக்க முடியவில்லை. அவ்வாறு எந்த நிறுவனமும் சம்பந்தப்படவில்லை.*

*அவ்வாறு இரசாயனம் கலந்த தேங்காய் எண்ணெய் உறுதி செய்யப்பட்டால் தகவலை அவர்கள் வழங்கினால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.*

*தேங்காய் எண்ணெயை மூன்று நிறுவனங்கள் இறக்குமதி செய்துள்ளன. அலி பிரதர்ஸ் தனியார் நிறுவனம், கட்டான ரிபைன்ரீ, எதிரிசிங்க ஏபல் ஒயில் ஆகிய நிறுவனங்களே அவை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(ஸ)*

## நாட்டை சர்வதேச போர்க்குற்ற...

*மக்களை அச்சமூட்ட எதிரணி முயல்வதாக கூறிய அவர் அச்சப்பட எதுவும் கிடையாது என்றும் கூறினார்.*

*சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்திற்கு முன்பாக படையினர், அரசியல் தலைவர்களை கொண்டு செல்ல இருப்பதாக கூறுவதில் எந்த உண்மையும் கிடையாது.இது உண்மைக்குப் புறம்பான தகவலாகும். சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தை எந்த நாட்டையாகிலும் நிறுத்த வேண்டுமென்றால் அதற்கு நிபந்தனைகள் உள்ளன. சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றத்தை உருவாக்கிய ரோம் உடன்படிக்கையில் நாங்கள் கைச்சாத்திட்டிருக்க வேண்டும். ஆனால் நாங்கள் அதில் கையெழுத்திட்டிருக்கவில்லை. ஆகவே நிவ்யோர்க்கில் உள்ள பாதுகாப்புச் சபையின் அனுமதியின் பேரிலேயே குறித்த நாட்டின் படையினர் உள்ளிட்ட பிரிவினர் போர்க்குற்ற நீதிமன்றிற்கு அழைக்கப்பட வேண்டும். அப்படியொரு உத்தரவானது பாதுகாப்புச் சபையிலிருந்து வராது. எமது நாட்டிற்கு ஆதரவாக வாக்களித்த சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் குறித்த சபையில் இருப்பதோடு அதிகாரமும் காணப்படுகின்றது. பாதுகாப்புச் சபைக்கு ஏதாவது பிரேரணை முன்வைக்கப்பட்டால் அதனை நிராகரிக்க அனுமதிக்க குறித்த உறுப்பு நாடுகளுக்கு உரிமையுள்ளது. ஆகவே எமது நாட்டை ஒருபோதும் சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடியாது.*

*ஐ.நா மனித உரிமைப் பேரவை ஒரு பேச்சுவார்த்தை மண்டபம். பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சு நடத்த, தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்ற முடியும் என்ற போதிலும் அவற்றை அமுல்படுத்தும் அதிகாரம் அந்தப் பேரவைக்கு இல்லை. மாறாக நிவ்யோர்க்கிலுள்ள பாதுகாப்புச் சபைக்கே அந்த அதிகாரம் உள்ளது. எந்த விடயமானாலும் முறைப்படியான விசாரணை நடத்தப்பட வேண்டும். அதன் பின்பே குறிப்பிட்ட ஒரு நாட்டின் மீதான கொள்கை குறித்த நடவடிக்கையை எடுக்கமுடியும். அண்மையில் நிறைவேற்றப்பட்ட 6ஆம் பிரிவில், இலங்கை மீதான விவகாரம் குறித்து நடவடிக்கை எடுக்க பொறிமுறை அமைத்தல் மற்றும் மனித உரிமைகள் ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்படுதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*போர்க்குற்றம், மனித உரிமை மீறல் குறித்து அவர்கள் பக்கச்சார்பாக எதிர்பார்க்கின்ற விடயங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கான கடமைகள் குறித்த பொறிமுறையில் உள்ளீர்க்கப்படும். இதற்காக 2.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் ஐ.நா சபையினால் இந்தப்பணம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.*

*இலங்கையை நெருக்கடிக்குள் தள்ள எவ்வளவு அவசரம் பேரவைக்கு உள்ளது.*

*எமது நாட்டிற்கெதிரான பிரேரணையை கொண்டு வந்த சில நாடுகள் ஏனைய நாடுகளுக்கு அழுத்தங்களை செய்து நிறைவேற்றிக்கொண்டன. இருந்த போதிலும் 50 வீதப்பொரும்பான்மை அவர்களுக்கு கிட்டவில்லை.*

*எமது நாட்டை இலக்கு வைத்து ஐ.நா கட்டமைப்பின் சட்டங்களை மீறி கொண்டுவரும் நடவடிக்கைகளை நாம் நிராகரிப்பதுடன், எமது நாட்டிற்கு ஆதரவளித்த நாடுகளுடன் இணைந்து எமது நாட்டை பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.*

*போரின் இறுதிக்கட்டத்தில் 2009 ஜனவரி முதலாம் திகதி முதல் மே 19ஆம் திகதிவரை முழுமையான அறிக்கையொன்றை பிரித்தானிய அதிகாரி ஒருவர் தயாரித்துள்ளார். அவர் கொழும்பில் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் பணிபுரிந்தவர். அவருக்கே போரின் நடவடிக்கை குறித்து முழுமையான அறிக்கையை பிரித்தானியாவுக்கு அனுப்பிவைக்க அவருக்கு வழங்கப்பட்ட கடமையாதும். என்டன் கேஷ் என்ற குறித்த நபர் இலங்கை குறித்த பொறுப்புடையவர் அல்ல. அவர் பிரித்தானிய தூதரகத்தில் பணிபுரிந்தவர். குறித்த அறிக்கையில் எந்த குற்றமும் படையினரால் இழைக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. நெய்ஸ்பி சுவாமி அவர்கள் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் பேசியபோது, உண்மையை அம்பலப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தார். பிரித்தானிய தகவல் உரிமை சட்டத்தின்படி அவர் மனுவொன்றை முன்வைத்த போது அதனை அந்நாட்டு அரசாங்கம் நிராகரித்துள்ளது என்றார்.*

## புலிகளை ஊக்குவிக்கும் வகையில்...

நேற்று சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இதன்போது, அந்த இடத்துக்கு பொறுப்பாக இருந்த 35 வயது பெண் ஒருவர் மற்றும் 36 வயது ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 05 கணனிகள் மற்றும் 05 மடிக்கணனிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## சுற்றாடலை பாதுகாக்க... (03ஆம் பக்கம் தொடர்)

பயனாளிகளுக்கு சந்தர்ப்பங்களை வழங்கி அதன் மூலம் குறைந்த வருமானம் பெறுபவர்கள் நியாயமான வருமானம் ஈட்டிக்கொள்ள உறுதுணையாக இருக்க சந்தர்ப்பம் வழங்குவதாகவும் சுற்றாடல் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும், மணல் விலை அதிகரித்து காணப்படும் நிலையில் மணல் விலையை ஸ்திரமாக பேணுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மணல் அகழ்வின் போது அனுமதிப்பத்திரம் பெறுபவர்களிடம் அதிக வைப்புக் கட்டணத்தை பெறுவதன் மூலம் அதனை மேலும் முறைமைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் மொனராகலை மாவட்டத்தில் தனமல்வில, புத்தல பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் புஷ்பகுமார குழுவின் கவனத்துக்கு கொண்டுவந்த அதேவேளை, விசேட குழுவொன்றை அப்பகுதிக்கு அனுப்பி சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து அது தொடர்பில் பூரண அறிக்கையொன்றை தனக்கு வழங்குமாறு அமைச்சின் அதிகாரிகளுக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவுறுத்தினார்.

## மாகாண சபைத் தேர்தலை... (03ஆம் பக்கம் தொடர்)

உருவாக்கப்பட்டு 33 வருடங்களாகின்றன. இன்று மக்கள் பரிதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகள் இயங்குகின்றன. இந்த காலப்பகுதி அரசியல் வரலாற்றில் கரும்புள்ளியாகும் . ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் இத்தேர்தலை விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளார்கள்.

விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரவை அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் மாகாண சபை தேர்தலை நடத்த இரண்டு முறைகளை பரிந்துரைத்து அமைச்சரவையில் யோசனையொன்றை முன்வைத்துள்ளார். அந்த அமைச்சரவை பத்திரத்தை ஆராய ஒரு வார கால அவகாசம் கோரப்பட்டிருந்தது. இதே போன்று பல மாதங்களுக்கு முன்னரும் ஜனாதிபதியின் ஆலோசணைக்கு அமைய அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அமைச்சரவை பத்திரமொன்றை முன் வைத்திருந்தார். வாதப் பிரதி வாதங்கள் நடைபெற்று இறுதி முடிவு எடுக்கப்படாமல் முன் கொண்டு செல்லப்பட்டது. எந்த முறை என்றாலும் எமக்கு பிரச்சினையில்லை. இந்த தேர்தலை நடத்துவதற்கு ஜனநாயகத்தை மதிப்பவர்கள் என்ற ரீதியில் இந் நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையை பெற்றுக் கொடுக்க தலையிடுமாறு கோருகிறோம்.

## பாணம பகுதியில் 3 ஏக்கரில்... (03ஆம் பக்கம் தொடர்)

சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் கொழும்பு கிராண்ட்பாஸ் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 7 கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## இறக்குமதி செய்யும் சீனி,... (03ஆம் பக்கம் தொடர்)

பெறப்பட்டுள்ளதா என்பதை ஆராய்வதற்காக விசேட சுங்க அதிகாரிகள் குழு ஒன்றை சம்பந்தப்பட்ட களஞ்சியசாலைகளுக்கு அனுப்பி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறெனினும் சுங்கத்தில் இருந்து அனுப்பப்பட்ட அதே அளவு தேங்காய் எண்ணெய் அங்கு காணப்படாவிட்டால் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.இவ்வாறான இறக்குமதிக்கு இது முதல் தடவை அல்ல என குறிப்பிட்ட அவர் 2019ஆம் ஆண்டு 600 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் இவ்வாறு மீள் ஏற்றுமதி செய்யப் பட்டதாகவும் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் தெரிவித்த அவர் இம்முறை அது பெரும் விமர்சனத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதையும் குறிப்பிட்டார்.

தேங்காய் எண்ணெயில் மட்டுமன்றி சீனி, பருப்பு, பால்மா உள்ளிட்ட பொருட்களிலும் இவ்வாறான இரசாயனங்கள் கலக்கப்படலாம் என்பதையும் அவர் குறிப்பிட்டதுடன் சுங்கத் திணைக்களம் அவ்வாறான நடவடிக்கைகளில் தீவிரமான கண்காணிப்பை மேற்கொள்ளும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## 24 மணி நேரத்தில்... (03ஆம் பக்கம் தொடர்)

அதேநேரம், 12 விமானங்களின் ஊடாக 741 பேர் கட்டார் மற்றும் பங்களாதேஷ் நாடுகளை நோக்கி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதவிர, கடந்த 24 மணிநேரத்தில் 148 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

## பாடசாலை வருகையில்... (03ஆம் பக்கம் தொடர்)

இடம்பெறுகின்றன.

இதற்கமைய 15 மாணவர்களை கொண்ட தரங்களில், சகல நாட்களும் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. 16 முதல் 30 மாணவர்கள் உள்ள தரங்களை, இரண்டாக பிரித்து வாராந்தம் ஒரு பிரிவினர் என்ற அடிப்படையில், கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அனுமதி வழங்கியுள்ளது.

30 க்கும் மேற்பட்ட மாணவர்களை கொண்ட தரங்கள், மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுவதோடு, சமனான நாட்கள் அளவில், அவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ஈஸ்டர் தாக்குதல்:... (03ஆம் பக்கம் தொடர்)

கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்க ஏற்பாடாகியிருந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான விசாரணை அறிக்கை மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான துறை மேற்பார்வைக் குழுவின் அறிக்கைகளை ஆராய்ந்து அது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிக்கையிடுவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி இந்த குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குழுவின் பரிந்துரைக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## பிரசாந்தனின் விளக்க... (03ஆம் பக்கம் தொடர்)

சார்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதனை கருத்திற்கொண்ட நீதிமன்றம் மேலும் 14 நாட்களுக்கு, எதிர்வரும் (12.04.2021) ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆரையம்பதியில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பில், சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டிருந்த அவர், ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுயஸ் கால்வாயில் தரை... (03ஆம் பக்கம் தொடர்)

தடைப்பட்டிருந்ததுடன், சுமார் 300க்கும் அதிகமான கப்பல்கள் பயணத்தை மேற்கொள்ள முடியாமல் கால்வாயின் இருமருங்குகளிலும் நங்கூரமிடப்பட்டிருந்தன.

இந்நிலையில், மீட்புக்குழுவினரின் முயற்சியினால் சுமார் 6 நாட்களுக்கு பின்னர் கப்பல் தற்போது மிதக்க ஆரம்பித்துள்ளதாகவும், இன்னும் சில மணித்தியாலங்களில் சுயஸ்கால்வாயின் ஊடான போக்குவரத்து வழமைக்கு திரும்பும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12 அவசர மீட்பு படகுகள் மற்றும் 8 மணல் அகற்றும் இயந்திரங்களைக் கொண்டு சுமார் 156 மணி நேரம் இந்த மீட்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஏப்ரல் முதலாம் திகதி... (03ஆம் பக்கம் தொடர்)

முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில திட்டமிடப்பட்ட குழுக்களினால் முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களை திருடுவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகத்திற்கு முறைப்பாடு கிடைத்துள்ளது என குறிப்பிட்ட அவர் அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## அனைத்து பாடசாலைகளும்... (03ஆம் பக்கம் தொடர்)

இருப்பதாக தெரிவித்தமைக்கமைய, பாடசாலைகளை திறப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அனைத்து வகுப்புக்களும் கடுமையான சுகாதார நெறிமுறைகளுக்குட்பட்டதாக அமையும். பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள், ஏனைய போட்டிகள் என்பன இப்போதே ஆரம்பிக்கப்படமாட்டாது. அவற்றை ஏப்ரல் 19ஆம் திகதிக்குப் பின்னரே ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றோம். வகுப்புக்கள், பரீட்சைகளை விதிமுறைக்கமைய நடத்தப்படுவதோடு, மாணவர்களை அனுப்பிவைக்கும்படி பெற்றோரிடம் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

முதலாம் தவணை விடுமுறையின் பின் மேல் மாகாணம் உட்பட நாடுபூராவும் நேற்று பாடசாலைகள் திறக்கப்பட்டன.மேல் மாகாண பாடசாலைகள் கொரோனா தொற்று காரணமாக நீண்ட நாட்களாக திறக்கப்படாதது குறிப்பிடத்தக்கது.மாணவர்கள் நேற்று ஆர்வத்துடன் பாடசாலைகளுக்கு வருகை தந்ததோடு சில பகுதிகளில் மாணவர்களின் வருகை குறைவாக இருந்ததாக அறிய வருகிறது.(பா)

# கிளிநொச்சியில் மூன்று இறங்குதுறைகள் முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி

## மாவட்ட கடற்றொழில் திணைக்களம் தகவல்

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 21 மீன்பிடி இறங்கு துறைகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலை காணப்படுவதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாவட்டத்தில் மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் காணப்படும் இறங்கு துறைகள் தொடர்ந்தும் அவ்வாறு காணப்படுவதனால் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் கடலுக்குச் செல்வது முதல் தொழிலுக்கு சென்று திரும்புவது வரை பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த வருடம் வீசிய புரவி புயல் காரணமாக பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட நாச்சிக்குடா, பள்ளிக்குடா, வலைப்பாடு, கிராஞ்சி போன்ற பகுதிகளில் இறங்கு துறைகள் மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் மீன்பிடி தொழிலாளர்கள் தங்களுடைய மீன்பிடி படகுகளை பாதுகாப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேற்படி திணைக்களம் குறிப்பிடுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் அனைத்து இறங்கு துறைகளும் உடனடியாக புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றன. இறங்கு துறைகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்ட முன்மொழிவு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில் 5 இறங்கு துறைகள் முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் 4 இறங்கு துறைகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்ட முன்மொழிவுகள் முன்மொழியப்பட்ட போதும் அவை அபிவிருத்தி செய்யப்படவில்லை. அந்த நான்கு இறங்குதுறைகளுடன் சேர்த்து மேலும் ஒரு துறையும் இணைக்கப்பட்டு முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ளது.

அதாவது பள்ளிக்குடா இறங்குதுறையானது மிக மோசமாக பாதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றது.

# யாழ். பல்கலையில் இரண்டு பீடங்களை உருவாக்க அனுமதி

பருத்தித்துறை விசேட நிருபர்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிதாக மேலும் இரண்டு பீடங்களை உருவாக்குவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த வைத்திய அலகு, இராமநாதன் நுண்கலைக் கல்லூரி ஆகிய இரண்டையும் பீடங்களாகத் தரமுயர்த்துவதற்கு கடந்த வருடம் யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் சிபார்சுடன் துணைவேந்தரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள் கடந்த மாதம் நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, இதுவரை காலமும் சித்த மருத்துவ அலகாக இயங்கி வந்த சித்த வைத்தியத் துறையை சித்த வைத்திய பீடமாக மாற்றுவதற்கும், கலைப்பீடத்தின் கீழ் இயங்கி வந்த இராமநாதன் நுண்கலைக் கல்லூரியை சேர். பொன் இராமநாதன் நிகழ்த்துகை மற்றும் கட்புல கலைகள் பீடமாக உருவாக்குவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# கைதான 32 மீனவர்கள் பிணையில் விடுவிப்பு

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட கிராஞ்சி கடற்பகுதியில் இரவு வேளை சுழியோடி கடற்றொழிலில் ஈடுபட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 32 உள்ளூர் மீனவர்களும் தலா இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இம் 32 மீனவர்களும் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டதுடன் அவர்களது நான்கு படகுகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்களும் சான்றுப் பொருட்களும் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் பதில் நீதவான் எஸ் சிவபாலசுப்ரமணியம் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர். இதன்போது 32 பேரும் தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# தொழிற்சங்க சம்மேளன கூட்டத்துக்கு அழைப்பு

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 2021 ஆம் ஆண்டிற்கான தொழிற்சங்க சம்மேளனக் கூட்டம் மன்னார் நகர சபை மண்டபத்தில் இன்று மதியம் 1 மணிக்கு நடைபெறவுள்ளததாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மன்னார் மாவட்ட தொழிற்சங்க தலைவரும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருமான எஸ்.எச்.எம். வாஜித் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

மன்னார் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 2021 ஆம் ஆண்டிற்கான தொழில் சங்க சம்மேளனக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. கூட்டத்திற்கு பிரதம அதிதியாக தேசிய தொழில் சங்கத்தின் பொதுச் செயலாளரும், பொதுஜன பொரமுன கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜெகத் மற்றும் சமுர்த்தி இராஜாங்க அமைச்சரான சிஹான் சேமசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கான கடமை விடுமுறை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களில் இயங்கிவரும் பிரதேச மட்ட நிர்வாகங்களை 'புதுபிக்கும்' நடவடிக்கை முடிவு பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளருக்கு அழைப்பு

முல்லைத்தீவு குறூப் நிருபர்

நிலாவரையில் தொல்லியல் திணைக்களம் மேற்கொள்ள முயற்சித்த அகழ்வுப் பணிகள் தடுக்கப்பட்டமை தொடர்பில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் நேற்று அச்சுவேலி பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டார்.

ஏற்கனவே தை மாத இறுயிலும் கடந்த வெள்ளிக்கிழமை அன்றும் நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தினர் அகழ்வுப் பணிகளில் ஈடுபட முயற்சித்தனர். இம் முயற்சிகள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் அரசியல் பிரதிநிதிகள், பொதுமக்களினால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

இந் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ள முயற்சிக்கப்பட்ட அகழ்வுப் பணிகள் தடுக்கப்பட்டமை தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளால் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

# கசிப்பு உற்பத்தியால் பாதிப்பு; பிரதேச மக்கள் விசனம் தெரிவிப்பு

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி ஊற்றுப்புலம் கோணாவில் மற்றும் யூனியன்குளம் ஆகிய பகுதிகளில் தொடரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகளால் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இவ்வாறான சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகளால் இளைஞர்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகும் நிலை கானப்படுவதாகவும் அதிகளவான குடும்பங்களில் மதுப்பாவனையால் பிணக்குகள் ஏற்படுகின்றன என்றும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை இக் கிராமங்களிலே காணப்படுகின்றன.


1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படுதல் (விசெட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

**நெஷனல் டிவலொப்மன்ட் பேன்க் பீ.எல்.சீ - வத்தளை கிளை**

**விலை மதிப்புமிக்கச் சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்பனை அங்குள்ள அனைத்து கட்டிடங்கள், மண், தோட்டங்கள் மற்றும் எல்லாவற்றும் அடங்களாக**

வட மாகாணம் கம்பஹ மாவட்டத்தின் தாசிய பத்து அலுத்குரு கோறளே மினுவங்கொடை நகர சபை பிரிவு மற்றும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பொரகொடவத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவின் பொரகொடவத்தை கிராமத்தில் அமைந்துள்ள அனுமதி பெற்ற நில அளவையாளர் கே.ஏ.எப்.பெர்னாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1994/03/01 ஆம் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல.742/94 இல் **துண்டு இல. 03** என குறிப்பிடப்பட்ட (அனுமதி பெற்ற நில அளவையாளர்) சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட லொட் இலக்கம் 03 என குறிப்பிடப்பட்ட **கோஸ்கஹவத்தை** என்ற காணியின்

**வடக்கெல்லை** பீ.ஏ.லயன்ஸ் மற்றும் ஏனையோருக்கு சொந்தமான காணி மூலமாகவும்,
**கிழக்கெல்லை** ஏ.குணரத்னவுக்கு மற்றும் ஸுவினீதா அமரஸிங்கவுக்கு சொந்தமான காணி மூலமாகவும்,
**தெற்கெல்லை** லொட் இலக்கம் 04 மூலமாகவும்,
**மேற்கெல்லை** லொட் இலக்கம் 04 மற்றும் லொட் இலக்கம் 07 மூலமாகவும், சூழப்பட்டிருக்கும்

நீர்கொழும்பு காணி பதிவாளர் திணைகளத்தில் C 907/226 ஆம் திரட்டில் பதிவு செய்யப்பட்டு பின்பு கம்பஹா காணி பதிவாளர் திணைகளத்தில் K 60/5 திரட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்ட 742/94 ஆம் இலக்க நிலவரைப்படத்தில் குறிப்பிட்டுள்ளபடி காணியின் பரப்பளவு **பத்து தசம் பூச்சியம் இரண்டு பேர்ச்சஸ் (ஏ0 ரூ0 பே10.06)** அளவிலான நிலம் மற்றும் அதன் பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக

இலக்கம்.742/94 ஆம் நிலவரைப்படத்தில் குறிப்பிட்டுள்ள படி லொட் இலக்கம்.07 (10 அடி அகலமான) என குறிப்பிட்டுள்ள பாதை மற்றும் ஏனைய பொது உரிமைகளுடன்

**கம்பஹ பிரசித்த நொதாரிசு செல்வி அனுருத்திகா சேரம் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2016 ஜூன் மாதம் 16 ஆம் திகதியிடப்பட்ட 460 ஆம் இலக்க பிணை உறுதி மூலம், ஹேவா பதிரனகே முதியன்ஸேகே சஞ்ஜீவ என்பவரால் தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ க்கு ஈடுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.**

**நெஷனல் டிவலொப்மன்ட் பேன்க் பீ.எல்.சீ யினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி,**
2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
மு.ப.10.30 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**சொத்துக்கான பிரவேசம் : -**
மினுவங்கொடாவிலிருந்து, கனத்த சாலையில் வலதுபுறம் திரும்பி, முதல் மூன்று வழிச் சந்தி வரும் வரை செல்லவும். பின்பு வலதுபுறம் திரும்பவும். பின்னர் வலதுபுறம் திரும்பி, சாலை முடிவு வரை பயனிக்கும் போது சொத்து அடையாளம். மினுவாங்கொட நகரத்திலிருந்து சொத்துக்கான தூரம் கிட்டத்தட்ட 900 மீட்டர்கள் ஆகும்.

தீர்மான அறிவிப்புகளுக்காக 2019 டிசம்பர் மாதம் 13 ஆம் தெதியிட்ட அரச வர்த்தமானி மற்றும் 2019 நவம்பர் மாதம் 29 ஆம் தெதியிட்ட தி அய்லன்ட்,திவயின மற்றும் தினக்குரல் பத்திரிகைகளை பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை: -**
ஏலவிற்னையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பனமாகச் செலுத்த வேண்டும்.
(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதார்ர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்,
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவொர் கட்டணம் 500 ரூபா
(5) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்)
(6) விற்பனை நிபந்தனைக்களுக்கான முத்திரை கட்டணம்

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள், அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்கானும் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெற முடியும்.

சிரேஷ்ட முகமையாளர் - விநியோகம்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ
இலக்கம்: 40, நவம் மாவத்தை, கொழும்பு - 02
தொலைபேசி. 011 - 2448448 தொலைநகல். 011-2440262

*முன் அறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.

DK's AUCTIONS
To Professionally Serve the Nation

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதோா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com


**28.03.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 452,570**

**பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 20,307,220.00**

ரூ. 2,000,000.00 பரிசு 01 | ரூ. 1,000,000.00 பரிசுகள் 02 | ரூ. 100,000.00 பரிசுகள் 20

www.nlb.lk

NLB NATIONAL LOTTERIES

## செவண - உத்தியோகபூர்வ முடிவுகள்

உங்களுக்கு வீடு – கைகளில் காசு

திகதி 28/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 326

ஆங்கில எழுத்து: Y — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 26 30 36 43

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000/- வீதம் | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100,000/- வீதம் | 03 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000/- வீதம் | 50 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 200/- வீதம் | 104 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100/- வீதம் | 2,502 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 50/- வீதம் | 1,451 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- வீதம் | 36,800 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- வீதம் | 5,692 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 2,543,390.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,000,000.00

ரு.500,000.00 மற்றும் அதற்குக் கூடிய பரிசுகள் அரச வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்படும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

## தன நிதானய - உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 28/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் - 477

ஆங்கில எழுத்து: R — வெற்றி இலக்கங்கள்: 15 37 43 45
ஆயிரம் முறை: 2820

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 01 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 65 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 133 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 3,372 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 2,301 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 55,746 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 10,464 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,312,460.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 72,167

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 90,533,680.00

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / NATIONAL LOTTERIES BOARD

## கொவிசெத - உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2735 | சீட்டிழுப்பு திகதி 28 / 03 / 2021

ஆங்கில எழுத்து: Q — வெற்றி இலக்கங்கள்: 07 14 46 53

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 09 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 122 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 242 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 6,253 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 4,119 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 101,329 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 18,589 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 130,664

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 5,574,420.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,002,193.20

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

## දරු දිරි සම්පත - தரு திரி சம்பத DARU DIRI SAMPATHA



உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 32
திகதி 28.03.2021

வெற்றி இலக்கங்கள்: I
வெற்றி இலக்கங்கள்: 03 15 78 80

| Prize | Prize Structure | Prize Money | No. of Winners |
|---|---|---|---|
| 01 Prize | 4 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 500,000/- | - |
| 02 Prize | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000/- | 01 |
| 03 Prize | 3 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 1,000/- | 48 |
| 04 Prize | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 200/- | 96 |
| 05 Prize | 2 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 100/- | 2,506 |
| 06 Prize | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40/- | 2,136 |
| 07 Prize | 1 இலக்கம் மட்டும் பொருந்துமாயின் | 20/- | 52,583 |
| 08 Prize | ஆங்கில எழுத்து மட்டும் பொருந்துமாயின் | 20/- | 11,735 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 1,789,600.00

அடுத்த சீட்டிழுப்புக்கான ஸ்டார் சுப்பர் பரிசு ரூ. 7,193,396.40

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / NATIONAL LOTTERIES BOARD

ஐந்து இலட்சத்துக்கு அதிகமான பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் வரை மட்டுமே செல்லுபடியாகும்.

## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 4440 உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 28-03-2021

வெற்றி எழுத்து: O — வெற்றி இலக்கங்கள்: 4 8 4 8 6 3

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 4 8 4 8 6 3 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 8 4 8 6 3 | ரூபா. 100,000/- | 06 |
| 3ஆம் பரிசு | 4 8 6 3 | ரூபா. 10,000/- | 81 |
| 4 ஆம் பரிசு | 8 6 3 | ரூபா. 1,000/- | 848 |
| 5ஆம் பரிசு | 6 3 | ரூபா. 100/- | 8,338 |
| 6ஆம் பரிசு | 3 | ரூபா. 20/- | 82,537 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 4 8 4 8 6 | ரூபா. 10,000/- | 10 |
| 8 ஆம் பரிசு | 4 8 4 8 | ரூபா. 1,000/- | 87 |
| 9ஆம் பரிசு | 4 8 4 | ரூபா. 100/- | 826 |
| 10ஆம் பரிசு | 4 8 | ரூபா. 50/- | 8,309 |
| 11ஆம் பரிசு | O | ரூபா. 20/- | 32,988 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 8,087,350.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,801,315.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை
32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

## திருத்தம்

### மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு
### கிழக்கு மாகாணம்

**கிழக்கு மாகாண பொதுச் சேவையின் விவசாயப் போதனாசிரியர், தரம் III இற்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த பேட்டிப்பரீட்சை - 2021**

மேற்படி ஆட்சேர்ப்பிற்கான போட்டிப்பரீட்சை தொடர்பாக 10.03.2021ஆம் திகதிய 'தினகரன்' பத்திரிகையின் 17ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த அறிவித்தல் மற்றும் கீழ் குறிப்பிட்டுள்ள கிழக்கு மாகாண இணையத்தள முகவரியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் தொடர்பாக.

கிழக்கு மாகாண இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த மேற்படி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு அறவிவித்தலில் கீழுள்ளவாறு திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன்.

**3.2 கல்வித் தகைமைகள்:**

**3.2.2 தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம், உயிரியல், விவசாயம், விவசாயத் தொழிநுட்பவியல், உயிர் வளத் தொழிநுட்பவியல் பொறியியற் தொழிநுட்பவியல், உயிர் முறைமைகள் தொழிநுட்பவியல், தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகியவற்றில் இரண்டு (02) பாடங்கள் உள்ளடங்கலாக விஞ்ஞான/ கணிதம்/ தொழிநுட்ப பிரிவுகளில் மூன்று (03) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (பொது ஆங்கிலம் மற்றும் சாதாரண பொதுப்பரீட்சை தவிர்ந்த)**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2021.04.16 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபை இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த அறிவித்தலின் ஏனைய நிந்தனைகள் அவ்வாறே வலுவிலிருக்கும்.

*www.ep.gov.lk → Exams & Results → Recruitment Exam*

**எம்.வை. சலீம்**
**செயலாளர்**
**மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு**
**கிழக்கு மாகாணம், திருகோணமலை.**
**2021.03.29**



## பிழை திருத்தம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

**பாதுகாப்பு அமைச்சு**

**கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**

**பல்கலைக்கழக வைத்தியசாலைகளுக்கு Hybrid Uninterrupted power supply (ups) வழங்குதல், கொண்டுவந்து ஒப்படைத்தல், நிறுவுதல், செயற்படுத்திக் காட்டுதல் பயிற்சி மற்றும் பராமரித்தல் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**

**ஒப்பந்த அடையாள இலக்கம் - MOD/KDU/02/2020**

2021 மார்ச் 07ஆம் திகதி மற்றும் 14ஆம் திகதிய தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் கீழ்க்காணுமாறு திருத்தப்படல் வேண்டும் என்பதை தயவுகூர்ந்து கவனிக்கவும். ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலைக்காக Hybrid cardiac Catheterization Laboratory and uninterrupted power supply (ups) இன் வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்பட வைத்தல், பயிற்சி மற்றும் பராமரிப்பு (UHKDU/MOD/02/2020) பந்தி இல. "09" இல் குறிப்பிடப்படும் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் தினம் 2021 ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்பு பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்படும் ஏனைய சகல விபரங்களும் மாற்றமின்றி காணப்படும்.

**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல**
**பாதுகாப்பு பல்கலைக்கழகம்,**
**வேரஹெர**
**பொலரலஸ்கமுவ 10290, இலங்கை**





களுத்துறை மாவட்டம் பதுரெலிய, அஸ்க்வேலி, அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார திருவிழா நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்.





கொரோனா தொற்றுக் காரணமாக இரத்த வங்கியில் நிலவும் இரத்தக் குறைப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில் அக்குறணை கசாவத்தை ஆரம்ப பாடசாலையில் அக்குறணை பிரதேச தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீனின் அனுசரணையில் நடைபெற்றது. அத்துடன் அக்குறணை கசாவத்தை இளைஞர் மன்ற அமைப்புக்கு தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் ஒரு தொகை நாற்காலிகளையும் வழங்கி வைத்தார்.

படங்கள் மாவத்தகம தினகரன் நிருபர்


## பிழை திருத்தம்

### தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

**பதவி வெற்றிடங்கள் (இறாகம மற்றும் கராபிட்டிய)**

மேற்குறிப்பிட்டுள்ள விளம்பரம் தொடர்பாக 2021.03.28ஆம் திகதியன்று தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

**5. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல் சாராதவர் (தட்டெழுத்து முறைமை - தமிழ்) எம்ஏ 1-1 (02 பதவி வெற்றிடங்கள்)**

**வெளியக விண்ணப்பதாரிகள்:**
**கல்விசார்:**

1. அ) ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் பின்வருவன அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா-த) பரீட்சையில் சித்தி.
   **(i) தமிழ்.**

ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,**
**இல. 330, தலவத்துகொட வீதி,**
**மாதிவெல, ஸ்ரீ ஜயவர்தனபுர.**
**தொலைபேசி இலக்கம்: 0112778911-14**
**இணையதளம் - www.childprotection.gov.lk**


# ஜெனீவாவில் அதிக கவனம் செலுத்தப்பட்ட மாகாண தேர்தல்

## விரைவாக நடத்த திஸ்ஸ விதாரண வலியுறுத்தல்



காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும். ஜெனீவா விவகாரத்தில் மாகாண சபை தேர்தல் விவகாரம் குறித்து அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சர்வதேசம் தலையிட முடியாது எனக் குறிப்பிட முடியாது. ஏனெனில், இலங்கை ஜனநாயகக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சர்வதேசத்துடன் ஒன்றிணைந்துள்ளது" என்று லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை இலங்கையின் இராஜதந்திர உறவும், இலங்கை மீது சர்வதேசம் கொண்டுள்ள பார்வை குறித்தும் அதிகம் ஆராய நேரிட்டுள்ளது.

இலங்கைக்கு ஆதரவாக 11 நாடுகள் மாத்திரமே வாக்களித்துள்ளன. கடந்த காலங்களில் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஆசிய நாடுகள் மத்தியஸ்தம் வகித்துள்ளன. இவற்றில் இந்தியா, ஜப்பான் ஆகிய நட்பு நாடுகளை பிரதானமாகக் குறிப்பிட வேண்டும்.

இவ்விடயம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். ஜெனீவா விவகாரத்தில் அரசு சற்று வினைத்திறனான முறையில் செயற்பட்டிருக்கலாம் என்று தற்போது கருதப்படுகிறது.

சர்வதேச நாடுகளுக்கு அடிபணிய முடியாது எனப் பேச்சளவில் மாத்திரமே குறிப்பிட முடியும்.

இலங்கையின் ஒரு சில உள்ளக விவகாரங்களில் சர்வதேசம் கவனம் செலுத்தும். இலங்கை ஜனநாயகக் கோட்பாடுகளை முன்வைத்து சர்வதேசத்துடன் ஒன்றிணைந்துள்ளது.

ஆகவே, ஜனநாயக விவகாரங்கள் குறித்து சர்வதேசம் கேள்வி எழுப்பும். காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவது குறித்து அரசு அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும்.


## பெறுகை அறிவித்தல்

### கிராமிய வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கட்டிடப்பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு அமைச்சு

### அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம் - கொலொன்னாவ

**Procurement of structural steel Universal Beams 24 Nos. (Lot A - Hot Rolled 12 Nos. and LotB-12Nos.-12Nos.-1016x305mmx12mx438kg/m), and supply, installation, Testing, and Commissioning of a Brand New Metal and Non Metal Laser Cutting Machine**

**பெறுகை இல. 3/1/2/SA/20/RA/06/(iv), and 3/1/21Q/07/CE/FA/741**

02. அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழு தவிசாளரால் கட்டமைக்கப்பட்ட 24 உருக்குப் பாலங்கள் (Universal Beams), (லொட்A. சூடான சுருட்டப்பட்ட உருக்கு தகடுகள் 12 மற்றும் லொட் -B வெல்டின் செய்யப்பட்ட 12 பாலங்களை) பெற்றுக்கொள்வதற்காக தகுதிகளைக் கொண்ட கீர்த்திவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. தருவித்தல் வழங்கப்பட்டதன் பின் கட்டமைக்கப்பட்ட உருக்கு மற்றும் துருப்பிடிக்காத உருக்கு என்பவற்றை வழங்குவதற்கான கால எல்லை 08 வாரங்கள் ஆகும்.

02. நாடளாவிய ரீதியில் விலைமனுக்கள் கோரப்படும். கட்டமைக்கப்பட்ட உருக்குப் பாலங்களுக்காக கேள்விதாரர்களுக்கு லொட் A, லொட் B, அல்லது லொட் A மற்றும் லொட் B இரண்டிற்கு கேள்விகளை சமர்ப்பிக்கலாம்.

03. அபகீர்த்தியாளர் (பிளெக் லிஸ்டட்) பட்டியல்படுத்தப்பட்ட வழங்குநர்கள் விலைமனுக்களை வழங்குவதற்கு தகுதியற்றவர்களாவர்.

04. விபரக்குறிப்பு, வழங்கல் கால எல்லை மற்றும் வரைபு மற்றும் மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.

05. இதில் ஆர்வம் கொண்ட கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் பிரதான பொறியியலாளர் (பொறியியல் வேலை வழங்கல்)/இயந்திரப் பொறியியலாளர் (தொலைபேசி: (011)2534579/(011)2572351/2 நீடிப்பு 150 தொலைநகல் (011) 2532278) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். அல்லாவிடில் அரச வேலை நாட்களில் 2021.03.30ஆம் திகதி முதல் 2021.04.21ஆம் திகதி வரை அரசாங்கத் தொழிற்சாலைக்கு சமுகம் தந்து விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. 2021.03.30 முதல் 2021.04.21ம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் மற்றும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி ஆங்கில மொழியில் அச்சடிக்கப்பட்ட விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

07. இரு நகல்களிலான விலைமனுக்களை கட்டமைக்கப்பட்ட உருக்கிற்கு 2021.04.22ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், பிரதான பெறுகைக் குழு, 3வது மாடி, அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம், கொலன்னாவை எனும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

08. விலைமனுதாரரினால் மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரலுக்கு இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் குறித்த படிவத்தின் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட உருக்கிற்கு லொட் A 240,000.00 ரூபா பெறுமதியானதும், லொட் B இற்கு 240,000.00 ரூபா பெறுமதியானதும் மற்றும் லேசர் கதிர் இயந்திரத்திற்காக ரூ.50,000.00 பெறுமதியானதுமான விலைமனுப் பிணை முறி/வங்கிப் பிணை முறி அல்லது அப்பெறுமதிக்கு அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் காசாளருக்கு பி.ப. 3.00 மணிக்கு முன் செலுத்தப்பட்ட பண வைப்புக்கான பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும். அப்பிணை முறிகள்/வங்கிப் பிணை முறிகளின் குறைந்தபட்ச செல்லுபடியாகும் காலம் கட்டமைக்கப்பட்ட உருக்கிற்கு 2021.08.05 வரையும், லேசர் கதிர் இயந்திரங்களுக்கு 2021.07.22 வரையும் இருத்தல் வேண்டும்.

09. கேள்வியின் பெறுமதி 5,000,000.00 ரூபாவை விஞ்சும் பட்சத்தில் வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் உள்நாட்டு முகவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்து கொண்ட படிவத்தை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான முன்னோடி தெளிவுபடுத்தல் 2021.04.29ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கும் அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் 3ம் மாடியிலுள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் இடம்பெறும்.

| | பெறுகை இல. | பொருட்களின் விபரம் | விலைமனுப் பிணை முறியின் அளவு | விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி |
|---|---|---|---|---|
| 01 | 2/1/2/SA/ RA06(iv) | கட்டமைக்கப்பட்ட உருக்கு பாலங்கள் 24 இனை கொள்வனவு செய்தல் (லொட் A- சூடாக்கப்பட்டு சுருட்டப்பட்ட உருக்குப் பாலங்கள் 12 மற்றும் லொட் டீ-உருக்கியொட்டப்பட்ட உருக்குப் பாலங்கள் 12) structural steel universal Beams - 24 Nos. (Lot A Hot Rolled 12 Nos Lot B- welded 12 Nos) (1016x305mmx438kg/mx12m-24Nos.Asperthe meterial standard-J1SG-3101-SS3101-ss400or equivalent and the Dimension Standrad J1SG31920 or equivalent | லொட் A 240,000.00 லொட் B 240,000.00 | 2021.04.22 |
| 02 | 3/1/4/21Q/07/ CE/FA/741) | புத்தம் புதிய லேசர் கதிர் மூலம் உலோகம் மற்றும் உலோகமற்றவைகளை வெட்டும் இயந்திரத்தை வழங்கி பொருத்தி பரீட்சித்து செயற்படுத்தி காட்டுதல் (supply, Installation, Testing and Commissioning of a Brand New Metal and Non Metal Laser Cutting Machine.) | 50,000.00 | 2021.04.22 |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**பணிப்பாளர் நாயகம் அலுவலகம்,**
**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,**
**கொலொன்னாவை.**
**2021.03.30**



## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 15 -0XXX | DATSUN | SUNNY VHB11 | 1983 |
| HI -4XXX | HYUNDAI | ELANTRA | 2000 |
| HQ -6XXX | HYUNDAI | ACCENT | 2001 |
| CBC -7XXX | SUZUKI | WAGON R MH55S | 2017 |
| **கெப்** | | | |
| DAD -0XXX | TATA | XENON LIGHT TRUCK | 2016 |
| **லொறி** | | | |
| PT -0XXX | TATA | ACE EX | 2012 |
| PV -2XXX | MAHINDRA | MAXXIMO | 2013 |
| DAD -6XXX | TATA | ACE HT2 | 2016 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| QI -2XXX | BAJAJ | AUTO RE 2 | 2006 |
| QT -4XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |
| YH -3XXX | PIAGGIO | APE CITY | 2010 |
| YC -1XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| YN -4XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YR -1XXX | BAJAJ | RE 205 | 2011 |
| **டிராக்டர்** | | | |
| RF -5XXX | PREET | 4549-4WD | 2016 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112088505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2021 மார்ச் 30ஆம், 31ஆம், ஏப்ரல் 1ஆம் மற்றும் 2ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2021 ஏப்ரல் 2ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

www.skillsads.com

தொடர்பு:
**ஜானக்க - 0711624559 / மொதித - 071 9530350**




மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் முப்பத்தெட்டாவது பௌர்ணமி கலை இலக்கிய நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. கிழக்குப் பல்கலைக்கழக வாழ்வியலை பேசும் முதல் நாவலான 'எனது வீணையடி நீ எனக்கு' நாவல் வெளியீட்டு நிகழ்வும் நடைபெற்றது. இந் நிகழ்வில் கதிரவன் பட்டிமன்றப் பேரவை நண்பர்கள் மூத்த எழுத்தாளர் மைக்கேல் கொலினுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்கவி பாடி கௌரவிக்கப்பட்டது.

# வர்த்தக நிலையங்களில் சுகாதார நடைமுறைகள் பின்பற்ற வேண்டும்

**கோவில்குளம் குறூப் நிருபர்**

வவுனியாவிலுள்ள வர்த்தக நிலையங்களில் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகவும் முழுமையாகவும் பின்பற்றுமாறு வர்த்தக சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக வர்த்தக சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

கடந்த சில தினங்களாக யாழில் தொற்றாளர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்து காணப்படுகிறது.

வவுனியா நகரிற்கு வரும் பொதுமக்கள் அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எதிர்வரும் தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு வர்த்தக நிலையங்களுக்கு வரும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதியும் தொற்றாளர்கள் அதிகரிப்பைக் கட்டுப்படுத்தவும் வர்த்தக நிலையங்களில் நடைமுறைகளிலுள்ள சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும்.

வர்த்தக நிலையங்களுக்குச் செல்லும் வாடிக்கையாளர்கள் முகக்கவசம் அணிந்து கைகழுவி சமூக இடைவெளிகளைப் பின்பற்றுவதுடன் வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் முகக்கவசம் அணிந்திருப்பது அவசியமாகும்.




# சுத்தமான குடிநீருக்காக போராடும் டிலிகுற்றி தோட்ட மக்கள்



**ஹற்றன் விசேட நிருபர்**

மலையகம் அழகிய இயற்கை சூழலில் ஆறுகள், நீரூற்றுக்கள், நீர் வீழ்ச்சிகள் என நீர்வளம் நிறைந்து காணப்பட்டாலும் இன்னும் பல பகுதிகளை சேர்ந்த மக்கள் சுத்தமான குடிநீருக்காக போராடுகின்றனர்.

அந்தவகையில் நுவரெலியா மாவட்டத்தில் லிந்துலை டிலிகுற்றி தோட்ட மக்கள் 200 வருடங்களாக சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்வதற்காக போராடிவருகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் லிந்துலை டிலிகுற்றி தோட்டத்தில் சுமார் 35 குடும்பங்களை சேர்ந்த 160ற்கும் மேற்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

எனினும் 200 வருடங்களாக ஒருவளை சுத்தமான நீரை பெற்றுக் கொள்ள கூட காத்திருக்க வேண்டிய துர்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது.

இதுதொடர்பில் காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வந்த அரசியல்தலைவர்களுக்கு அறிவித்தும் இன்னும் தீர்வில் எட்டப்பட வில்லை.

ஒவ்வொரு நாளும் சுத்தமான குடிநீர் வசதி இல்லாமல் திண்டாடுகின்றனர்

ஒரு குழாயில் வரும் சொட்டு நீருக்காக குடங்களை வைத்துக்கொண்டு பல மணி நேரம் காத்து இருக்க வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது. இதனால் தமது அன்றாட தேவைகளை கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.





அத்தோடு அப்பகுதியிலுள்ள நீர்ஊற்றிலிருந்து பல்வேறு உயிர் ஆபத்துகளுக்கு மத்தியில் நீரை பெற்று வருவது வேதனை தரும் விடயமாகும். முதியோர்கள், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பிரச்சினை தொடர்பாக அரசியல்வாதிகளிடம் தோட்ட நிர்வாகமும் அறிவித்த போதிலும் இதுவரையும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.



கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் வருடாந்த தேர்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம்: கம்பளை நிருபர்)

## வடிகாலில் விழுந்து பெண் பலி

**(எம்.ஏ.அமீனுல்லா, கண்டி செங்கடகல நிருபர்)**

கண்டி மகியாவ பூர்ணவத்தை பிரதேசத்தில் வடிகாலில் விழுந்து பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். இவர் மூன்று பிள்ளைகளின் தாய் என தெரியவந்துள்ளது. நேற்று முன்தினம் (28) பிற்பகல் பெய்த பலத்த மழையால் மகியாவ பூர்ணவத்தை பிரதேசத்திலுள்ள மூன்று பிள்ளைகளின் தாயான பாத்திமா பியாஸா (43) என்பவரே இவ்வாறு பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டின் முன்னால் செல்லும் வடிகாலில் உள்ள பொலித்தீன் உள்ளிட்ட குப்பைகளை அகற்ற முயன்றபோது வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது. வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பெண்ணை மீட்பதற்காக சென்ற அவரது கணவரும், வடிகாலில் விழுந்து நீரில் மூழ்கியுள்ளார். எனினும் அச்சமயம் தனக்கருகில் இருந்த ஒரு குழாயைப் பிடித்து அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளதாக என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பெண்ணின் சடலம் அவரது வீட்டிலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் மஹியாவையிலுள்ள பிங்காய என்ற இடத்திற்கு அருகிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. இதுதொடர்பில் கண்டி எஸ் எஸ் பி சமில் ரத்நாயக்கவின் ஆலோசனையின் பேரில் மேலதிக விசாரணைகளை நடைபெற்று வருகின்றன.

## நிவித்திகலையில் ஆரம்ப சிகிச்சை பிரிவு

**( பலாங்கொடை தினகரன் நிருபர்)**

நிவித்திகலை வடாபொத பகுதியில் புதிய ஆரம்ப சிகிச்சை பிரிவொன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

ஜனா திபதி கோட்டாபய ராஜபக்சவின் சௌபாக்கிய நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் கீழ் புதிய ஆரம்ப சிகிச்சை பிரிவு அமைக்கப்படவுள்ளது. இதற்காக 180 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாரச்சி இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். அரசாங்க பிரதான வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற வருகைதரும் நோயாளிகளை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் இந்த ஆரம்ப சிகிச்சை பிரிவு அமைக்கப்படவுள்ளது. பிரதேச சுகாதார வைத்திய பிரிவுகளை ஆரம்பித்து பொதுமக்களுக்கு சலுகைகளை வழங்க எதிர்பார்க்கப்படவுள்ளது.

இந்த அடிக்கல் நடும் வைபவ நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, மாகாண சபையின் தலைவர் கஞ்சன ஜயரட்ன,சப்ரகமுவ மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரம்ய குமார வீரசிங்க, நிவிதிகல பிரதேச சபை தலைவர் குலதுங்க லியனகே, இணைப்புச் செயலாளர் சொனாலி ஜயசேகர, மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் கபில கண்ணங்கர, இரத்தினபுரி மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் எஸ்.பண்டிதரத்ன நிவித்திகல பிரதேச செயலாளர் எஸ் சமரசேகர ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பின்னவலயில் இலங்கையின் முதலாவது நகர பல்கலைக்கழகம்

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**





இலங்கையின் முதலாவது நகர பல்கலைக்கழகம் கேகாலை ரம்புக்கன பின்னவலயில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள சௌபாக்கிய நோக்கு திட்டத்தின் கீழ் மாவட்ட மட்டத்தில் இதுவே முதலாவது நகர பல்கலைக்கழகமாகும். சப்ரகமுவ மாகாண முன்னாள் முதலமைச்சர் மஹிபால ஹேரத்தினால் சப்ரகமுவ மாகாண நிதி ஒதுக்கீட்டில் 1240 இலட்சம் ரூபா செலவில் ஹோட்டல் பாடசாலைக்கென அமைக்கப்பட்ட நான்கு மாடி கட்டிடத்தொகுதியை மையமாக கொண்டு இதில் நகர பல்கலைக்கழத்தை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி கட்டடத் தொகுதியில் கேகாலை நகர பல்கலைக்கழகம் ஆரம்பிப்பது குறித்து சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் இராஜாங்க அமைச்சர்களான சீதா அரம்பேபொல, கனக ஹேரத் ஆகியோர் அண்மையில்நேரில் சென்று பார்வையிட்டனர். கேகாலை நகரில் ஆரம்பிக்கப்படவுள்ள நகர பல்கலைக்கழகத்தின் மூலம் உல்லாசத்துறை, விவசாயத்துறை, மொழிகள், கால்நடை, ஆடை உள்ளிட்ட பல்வேறு துறைகளை இலக்காக கொண்டு பட்டப் படிப்பு பாடநெறியை கற்க முடியும். க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படாத மாணவர்களுக்கு இதன் மூலம் வாய்ப்புகளும் ஏற்படுத்தி கொடுக்கப்படும். இந் நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் ரஞ்ஜனி ஜயகொடி உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.




மாத்தளை மாநகரசபை பிரிவில் இறத்தொட்டை பிரதான வீதியை இணைக்கும் ஆற்றங்கரை வீதி 15 மில்லியன் ரூபா செலவில் காபட் பாதையாக புனரமைக்கப்படவுள்ளது. இப்பாதையின் புனரமைப்பு பணி நேற்றுக் காலை பாராளுமன்ற உறுப்பினர் நாலக கோட்டேகொடவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## மணிக்கவத்தை முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேகம்

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

டிக்கோயா மணிக்கவத்தை 02 ஆம் பிரிவு, ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய ஜீர்ணோத்வர்தண பஞ்சகுண்டபக்ச அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருஞ்சாந்தி விழா விஞ்ஞாபனம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன் போது பிரதிஷட்டா பிரதம குரு ஆகம கிரியா ஜோதிட கிரியாரத்தின கிரியாகால மணி சிவஸ்ரீ ஸ்கந்த (கா.சம்பந்தராஜா குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் கிரியைகள் இடம்பெற்றதோடு

மங்கள வாத்தியங்கள் முழங்க அரோகரா கோஷத்துடன் ராஜகோபுரத்திற்கு காலை

10.30.மணியளவில் தீர்த்தம் ஊற்றப்பட்டது .

அதனை தொடர்ந்து மகாஅபிஷேகம் ,ஆசிர்வாத உரை, ஆச்சாரிய சம்பாவனை மகேஸ்வர பூஜை இடம்பெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## நுவரெலியா மாவட்ட செயலாளராக நந்தன கலபட பதவியேற்பு

**(நுவரெலியா தினகரன் நிருபர்)**



நுவரெலியா மாவட்ட செயலாளராக முன்னாள் மத்திய மாகாண பிரதி செயலாளரும் மத்தியமாகாண கல்வி அமைச்சின் செயலாளருமான நந்தன கலப்பட நேற்று (29) திங்கட்கிழமை சம்பிரதாய பூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

நுவரெலியா மாவட்ட செயலாளராக கடமையாற்றிய எ. பீ. ஆர். புஸ்பகுமார விவசாய அபிவிருத்தி அமைச்சு செயலாளராக கடந்த மார்ச் முதலாம் திகதி இடம் மாற்றம் பெற்று சென்றதையடுத்து நந்தன கலபட நுவரெலியா மாவட்ட செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 2002 ஆம் ஆண்டு வலப்பனை பிரதேச பிரதி செயலாளராகவும் அதனை தொடர்ந்து அங்குராங்கெத்த, உடுநுவர, அக்குரன பொன்ற இடங்களில் பிரதேச செயலாளராகவும், அதனை தொடர்ந்து மத்திய மாகாண பிரதாண செயலாளராகவும் மத்திய மாகாண கல்வி செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

# பசறை த.தே.கல்லூரி பழைய நுழைவாயில் பாதையை திறக்குமாறு வேண்டுகோள்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பசறை தமிழ் தேசியக்கல்லூரியில் பயன்படுத்தப்பட்டு வந்த நுழைவாயில் பிரதான பாதை மூடப்பட்டு புதிய பாதையொன்று அமைக்கப்பட்டிருப்பது மாணவ, மாணவிகளுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்திவருவதாக பெற்றோர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர். புதிய பாதையை உடனடியாக மூடிவிட்டு, ஆரம்பகாலம் தொட்டு இருந்த பாதையை மீண்டும் திறக்க வேண்டுமென வலியுறுத்தி மகஜரொன்றும் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த மகஜரின் முதல் பிரதி ஜனாதிபதி, பிரதமர், கல்வி அமைச்சர், கல்வி இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கும், ஏனைய பிரதிகள் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களான அ. அரவிந்தகுமார், வடிவேல் சுரேஸ், பிரதமரின் பெருந்தோட்டப்பிரிவு இணைப்புச்செயலாளர் செந்தில்தொண்டமான் ஆகியோருக்கும் அனுப்பப்படவுள்ளதாக, கல்லூரி அபிவிருத்திச்சங்க செயலாளர் வென்சஸ்லவ்ஸ் குறிப்பிட்டார்.

அந்த மகஜரில், கல்லூரியின் ஆரம்பகாலம் தொட்டு 75 வருடகாலமாக பயன்படுத்தப்பட்டு வந்த நுழைவாயில் பாதையானது, மாணவர்களுக்கு போதுமான பாதுகாப்பை தரக்கூடியதாகவிருந்தது. எனினும் பழைய பாதையை மூடிவிட்டு, புதிய பாதை அமைத்தமையால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கிவருவதாகஅவர்கள்சுட்டிக்காட்டுகின்றனர்.

புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் பாதை, மாணவர்களுக்கு பாதுகாப்பிற்கு உத்தரவாதம் இல்லை. அப்பாதைக்கு அருகாமையில் போதைப்பொருள் விற்பனை மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். வெளிநபர்கள் வந்து தரித்து நிற்கும் இடமாகவும் இவ்விடம் அமைந்துள்ளது. இதனால் மாணவர்களுக்கு பெரும் இடையூறாகவும், பாதுகாப்பு அற்றதாகவுமாக இருந்து வருகின்றது. சமூகச்சீரழிவுக்கும் இப்பாதை வழிவகுப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மாணவர்களின் நலன்கருதி பழைய பாதையை திறக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என பெற்றோர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கிழக்கின் குரல்

## அரசாங்கத்தை சிறந்த முறையில் பயன்படுத்தி மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்

**முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன்**

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**




இந்த அரசாங்கத்தை நாம் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் எமது மக்களுக்கான தேவைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (28) செங்கலடியில் இடம்பெற்ற தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட பிரதேச அமைப்பாளர்கள், இணைப்பாளர்கள், இளைஞர் அணித் தலைவர்கள், மகளிர் அணித் தலைவிகள் ஆகியோருக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

எமது கட்சி குறிப்பிட்ட சில காலங்களில் பாரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. கடந்த பாராளுமன்றப் பொது தேர்தலில் அம்பாறை மக்கள் தங்கள் வாக்குகளை வழங்கி எங்களை அவர்கள் கௌரவித்திருக்கின்றார்கள். அதற்காக முதலில் நாங்கள் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். அதற்காக எம்முடன் இணைந்து வேட்பாளர்களாகக் களமிறங்கிச் செயற்பட்டவர்களுக்கும் நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

ஏனெனில் எங்களுடைய தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி வரலாற்றிலே முதன்முதலாக மக்களின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதென்பது அந்த நிகழ்வின் பிற்பாடுதான். எங்களுக்கு இத்தனை வாக்குகள் கிடைக்குமா என்று இந்த உலகமே பார்த்துக் கொண்டிருந்தது அதே போல் எமக்கு மக்கள் வாக்குகளை அள்ளி வழங்கி எங்களுக்கான நிலையான அத்திவாரத்தை இட்டிருக்கின்றார்கள்.

அந்த மக்கள் ஏன் எங்களுக்கு வாக்களித்தார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த மக்களுக்கு எங்கள் மீது நம்பிக்கை இருக்கின்றது. அந்த நம்பிக்கையைக் காப்பவர்களாக, அதனை மேலும் கட்டியெழுப்புபவர்களாக நாங்கள் இருக்க வேண்டும்.

நமக்குள் வேறுபாடுகள், பிரிவினைகள் இல்லாமல் ஒற்றுமையாக இருந்து செயற்பட வேண்டும். கட்சிக்குள் இருக்கும் குரோதங்களும், வேறுபாடுகளும் களையப்பட வேண்டும். ஒற்றுமையாக இருக்கும் போதுதான் வளர்ச்சி ஏற்படும். தங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவப் பண்புகளை வெளிக்கொணரும் ஆட்களாக எமது கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இருக்க வேண்டும்.

பாராளுமன்ற வாய்ப்பினை நாங்கள் இழந்திருந்தாலும் இன்று பாரிய வேலைத்திட்டங்கள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான அங்கீகாரத்தை ஜனாதிபதியும், பிரதமரும் எங்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரமுயர்வு தொடர்பில் நாங்கள் தொடர்ந்து பல வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றோம். ஜனாதிபதி, பிரதமர், துறைசார்ந்த அமைச்சர் உட்பட அனைவரிடமும் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம்.

அதேபோல் கிட்டங்கிப் பாலம் உட்பட பல பாலங்கள் தொடர்பிலும் கதைத்துள்ளோம். பாராளுமன்றத் தேர்தலின் போது அம்பாறை மாவட்டத்திற்கு நாங்கள் என்னென்ன வாக்குறுதிகளைக் கொடுத்தோமோ சொன்ன விடயங்கள் அனைத்தும் நடக்கும்.

எமது கட்சியை நாங்கள் பாரிய சக்தியாக வளர்த்தெடுக்க வேண்டும். இதற்கான வேலைகளை இலகுவாக்குவதற்கு நிருவாகத்தினைப் பிரித்துக் கொடுத்துள்ளோம். அத்துடன் எமது கட்சிக்கான ஒழுக்கம் மிகவும் முக்கியம். கருணா அம்மான் என்ற பெயர் சும்மா வரவில்லை.

எத்தனை போராட்டங்கள் எத்தனை தியாகங்கள் எத்தனை இழப்புகளைக் கடந்து வந்துள்ளோம். அதனை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

எமது மக்களின் விடிவுக்காக ஆயுதம் தூக்கிப் போராடினோம் அதில் முடிவு காணப்படவில்லை. ஆனால் அரசியல் ரீதியிலாவது அதனைப் பெற்றெடுப்பதற்கான முயற்சிகளை எடுப்போம். அதற்காகத் தான் இந்தக் கட்சியை நாங்கள் ஆரம்பித்து வளர்தெடுத்து வருகின்றோம்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெளிநாட்டில் வசிக்கும் பல உள்ளங்கள் எமக்கு நிதிப்பங்களிப்பை மேற்கொண்டார்கள். உண்மையில் அவர்களை மறக்க முடியாது. அதேபோல் நமக்காக உழைத்துக் கொண்டிருக்கும் முகநூல் போராளிகள் அவர்களையும் மறந்த விட முடியாது.

எனவே இந்த சிறந்த வாய்ப்பான சந்தர்ப்பத்தில் எமது கட்சியை வழிநடத்த வேண்டும். இதற்கான பொறுப்புகள் எமது கட்சியின் அமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இதனைப் புரிந்து கொண்டு அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.



அட்டாளைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயத்தின் சுற்றுப்புறச் சூழலை அழகுபடுத்தும் நோக்கில் பாடசாலை சுற்றுமதில் நிறம் பூசப்பட்டு, பூ மரங்கள் நடும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இவ்வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (28) பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் எப்.ஹலிம் தலைமையில் இடம்பெற்ற போது. (படம்: பாலமுனை விசேட நிருபர்)

## கோபுரத்திலுள்ள மணிக்கூடு செயலிழப்பு

**தோப்பூர் தினகரன் நிருபர்**



மூதூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மூதூர் புளியடிச்சந்தியுள்ள மணிக்கூண்டுக் கோபுரம் நீண்டகாலமாக செயலிழந்துள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இம் மணிக்கூட்டுக் கோபுரம்அமைந்துள்ள இடத்திற்கு அருகில் பாடசாலை, மயானம் என்பன காணப்படுகிறது. இது சன நடமாட்முள்ள இடமாகும். மக்கள் சரியான நேரத்தினை அறிந்து கொள்வதற்கு வசதியாக மணிக்கூட்டு கோபுரத்திலுள்ள மணிக்கூட்டை இயங்கச்செய்ய உரிய பகுதியினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## காத்தான்குடியில் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு நேர்முகப் பரீட்சை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**



ஒரு இலட்சம் காணித்துண்டுகளை வழங்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடியில் திங்கட்கிழமை (29) நேர்முகப் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டது.

இளம் தொழில் முயற்சியாயளர்களுக்கு முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குவதற்காக ஒரு இலட்சம் காணித்துண்டுகள் வழங்கும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நேற்று (29) ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 31ம் திகதி புதன்கிழமை நிறைவடையவுள்ளது.

ஒரு ஏக்கருக்கு குறைவான காணிகளைக் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு முதல் கட்டமாக இந்த நேர்முகப் பரீட்சை காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதர் தலைமையில் இடம் பெற்றது.

இதில் உதவி பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா, காத்தான்குடி பிரதேச செயலக காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர் திருமதி எஸ்.பி.எம்.நவாஸ், காத்தான்குடி பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர், விவசாய போதனாசிரியர் மற்றும் காணிப் பயன்பாட்டு உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் இதன் போது நேர்முகப்பரீட்சை நடாத்தினர்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 2872 பேர் இதற்காக விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிண்ணியாவில் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் பாதிப்பு

**கிண்ணியா மத்திய நிருபர்**



கொரோனா அச்சம் காரணமாக கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நேற்று (29) பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்கள் மீண்டும் வீடுகளுக்கு திரும்பி சென்றதை அவதானிக்க முடிந்தது. இதன் காரணமாக நேற்று பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டன.

பாடசாலையில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து நேற்று இப்பாடசாலையில் மூன்று ஆசிரியர்கள் PCR பரிசோதனையின் மூலம் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

இதனையடுத்தே மாணவிகள் அனைவரும் பாடசாலைக்குள் பிரவேசிக்காது, மீண்டும் வீடுகளுக்கு திரும்பிச் சென்றுள்ளனர்.

எனினும் மாகாண கல்வி திணைக்களத்தால் நடாத்தப்படுகின்ற பரீட்சைக்கு தரம் 11 மாணவிகள் மாத்திரமே பாடசாலைக்குள் பிரவேசித்தனர்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட தரம் 11இல் கல்வி கற்கின்ற மாணவி ஒருவர், சிகிச்சை பெற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெண்களின் ஆற்றலை வலுப்படுத்தும் ஓவியக் கண்காட்சி

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



பெண்களை மையப்படுத்தி அவர்களின் ஆற்றலை வலுப்படுத்தும் ஓவியக்கண்காட்சி மட்டக்களப்பு செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் ஞாயிறன்று (28) இடம்பெற்றது. செவிப்புலனற்றவர்களையும் ஏனைய இளைஞர் யுவதிகளையும் ஒன்றிணைக்கும் வகையில் இக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கே. கருணாகரன் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சீவரட்ணம் ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டு ஓவியக் காட்சியை ஆரம்பித்து வைத்தனர்.

ஓவியக் காட்சிப்படுத்தலில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் வை.எம்.சி.ஏ பொதுச்செயலாளர் ஜெகன் ஜீவராஜ் சர்வோதய திட்ட இணைப்பாளர் கோசானி எட்மன்ட், செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு சங்கத் தலைவர் பி. கஜதீபன் வாழ்வோசை பாடசாலை ஆசிரியர்கள் மண்முனை வடக்கு பிரதேச கழகத்தவர்கள் செவிப்புலன் வலுவற்றோர் நிறுவனத்தின் பயனாளிகளான இளைஞர் யுவதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சம்பூரில் சுவாமி விபுலானந்தரின் திருவுருவச் சிலை திரை நீக்கம்

**தோப்பூர் குறூப் நிருபர்**

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் 129 வது பிறந்ததினத்தை முன்னிட்டு சம்பூரில் ஞாயிற்றுக்கிழமை (28) சுவாமி விபுலானந்தரின் புதிய திருவுருவச் சிலை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வினை தமிழ் கலாமன்றம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன்போது சுமாமி விபுலானந்தரின் பிறந்ததினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் வெற்றிபெற்ற கலைஞர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தமிழ் கலாசார நடனங்கள், பாடல்கள் போன்றனவும் இடம்பெற்றதோடு அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு சுவாமி விபுலானந்தரின் நினைவாக "விபுலம்" எனும் கையேடும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண சங்கப் பொது முகாமையாளர் சுவாமி தக்ஷஞானந்தர், திருகோணமலை தென்கைலை ஆதினக் குரு முதல்வர் திரு அகத்தியர் அடிகளார், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள்,பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பாடசாலை அபிவிருத்தி கட்டணத்துக்கு மேலதிகமாக பணம் அறவிடப்படுவதாக பெற்றோர் குற்றச் சாட்டு

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை வடக்கு கல்வி வலயம் மற்றும் திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்தின் உட்பட்ட நகர்புற பாடசாலைகளிலும் பெற்றோர் வருடா வருடம் பாடசாலை அபிவிருத்தி கட்டணம் செலுத்தி வருகின்ற போதிலும், முதலாம் தவணை பரீட்சை, இரண்டாம் தவணை பரீட்சை மட்டுமல்லாது மூன்றாம் தவணை பரீட்சையிலும் பரீட்சைக்கு மேலதிகமாக பணம் அறவிடப்பட்டு வருவதாக பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் கிராமப்புறப் பாடசாலைகள் மட்டுமல்லாது நகர்புற பாடசாலைகளிலும் அரசாங்கத்தினால் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு வருகின்ற போதிலும், அதற்கு மேலதிகமாக பாடசாலை நிர்வாகம் அதிகளவிலான பணத்தை பெற்றோர்களிடம் அறவிட்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

சில நேரங்களில் பாடசாலை அபிவிருத்தி கட்டணத்திற்கு மேலதிகமாக மாணவர்களிடம் பணம் அறவிடப்பட்டு வருவதால் , மாணவர்கள் அப்பணத்தை உரிய நேரத்திற்கு வழங்காவிட்டால் வகுப்பு மாணவர்கள் மத்தியில் செலுத்தவேண்டிய பணத்தை செலுத்தவில்லை என ஆசிரியர்கள் தெரியப்படுத்துவதனால் மாணவர்களும் மன உளைச்சலுக்கு ஆழாக்கப்பட்டு வருவதாக பெற்றோர் குறிப்பிடுகின்றனர்.

ஆகவே திருகோணமலை மாவட்டத்தில் பாடசாலை அபிவிருத்தி கட்டணத்தை விட மேலதிகமாக பரீட்சைக்கு கோரப்படுகின்ற பணத்தை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.





தெட்சண கைலாயம் திருக்கோணேஸ்வரம் அருள்மிகு மாதுமை அம்பாள் உடனுறை கோணேஸ்வரப் பெருமான் திருக்கோயிலின் வருடாந்த பங்குனி உத்தர பிரம்மோற்சவத்தின் திருக்கொடியேற்றம் ஞாயிற்றுக்கிழமை (28) இடம் பெற்றது. கிரியைகள் இடம் பெறுவதையும், விசேட பூசை நடைபெற்று கொடியேற்றப்படுவதையும், அடியார்கள் வழிபாட்டில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் அன்புவழிபுரம் தினகரன் நிருபர் )

# கிழக்கின் குரல்

# சமூக மாற்றத்தில் அரசியல் பங்களிப்பு பிரதானமானது

## பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தன்

*கல்குடா தினகரன் நிருபர்*

சமுக மாற்றத்தில் அரசியல் பங்களிப்பு என்பது மிகவும் பிரதானமானது என தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் ஆலங்குளம் மற்றும் குகநேசபுரம் கிராமங்களுக்குச் சென்று அப்பகுதி மக்களை சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டறிந்ததன் பின்னர் உரையாற்றும் போதே மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் பாராளுமன்ற உறுப்பனராக இருந்த யோகேஸ்வரன் ஐயாவின் சொந்த பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு மூடுவிழா வைத்து விட்டு அரசியல் செய்வதில் என்ன பிரயோசனம். இப்படிப்பட்டவர்கள்



தான் கடந்த காலங்களில் மக்களின் வாக்குகளால் மக்கள் பிரதிநிதிகலாக இருந்தவர்கள்.

என்னை இல்லாமல் செய்ய வேண்டும் என்று எதிரிகள் என்னை சிறைக்கு அனுப்பினார்கள். அவர்களது எண்ணங்கள் நிறைவேறாமல் போனது. ஆலம்குளம் மக்களது வரலாறு தெரியாது, அம்மக்கள் கடந்த காலங்களில் எவ்வாறு அடிபட்டார்கள் என்று தெரியாமலும் குகனேசபுரம் கிராமம் எப்படி உருவாக்கப்பட்டது, அந்த மக்களின் வரலாறு என்ன என்று எதுவுமே தெரியாமல் தேர்தல் காலங்களில் மாத்திரம் வந்து போவோருக்கு என்ன தெரியும்.

நான் தழிழன் என்பதற்காக எனக்கும் எனது பரம்பரைக்குத்தான் வாக்குப் போடவேண்டும் என்று திரிந்தவர்களுக்கு மத்தியில், எனது வளர்ச்சி பெரும் சவாலாக மாறியுள்ளது . அதனால்தான் என்னை அழிக்க வேண்டும் என்று பார்க்கின்றார்கள். அவ்வாறானவர்கள் எனது எதிரி மாத்திரம் அல்ல உங்களுக்கும் எதிரிதான் என்பதை மறந்து விடாதீர்கள் எனத் தெரிவித்தார்.

இதன் போது மக்களால் பாராளுமன்ற உறுப்பினரின் சேவைகளை பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந் நிகழ்வில் வாகரை பிரதேச சபை தவிசாளர் கண்ணப்பன் கணேசன், கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# திருமலைக்கு அமைச்சர் நாமல் விஜயம்; இளைஞர் சமூக வேலை திட்டம் ஆரம்பம்



*கிண்ணியா மத்திய,கந்தளாய் தினகரன், ரொட்டவெவ குறூப், திருமலை மாவட்ட விசேட நிருபர்கள்*

இளைஞர் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் எண்ணக்கருவிற்கமைய புத்த சமய விவகார அமைச்சின் ஒருங்கிணைப்பில் ஒழுக்க விழுமியங்களைப் பேணுகின்ற இளைஞர் சமூகம் ஒன்றை கட்டியெழுப்பும் நோக்கில், ஏற்பாடு செய்யப்பட்ட யொவுன் சீல சமாதி வேலைத்திட்டத்தின் மூன்றாவது வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் (28) திருகோணமலை சேருவில ரஜமகா விகாரையில் நடைபெற்றது.

தமிழ், முஸ்லிம் சமூகங்களை சேர்ந்த இளைஞர் யுவதிகள், சமயத் தலைவர்கள் இதில் கலந்து சிறப்பித்தமை விஷேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் இளைஞர் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவருமாகிய கபில நுவன் அத்துகோரல, பிரதேச அரசியல் தலைமைகள், மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சனபாண்டிகோராள, சேருவில பிரதேச செயலாளர் பி.ஆர்.ஜயரத்ன, இளைஞர் யுவதிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

சேருவில ரஜமகா விகாரை வளாகத்தில் அமைச்சர் மற்றும் அதிதிகளால் மரக்கன்றுகளும் இதன்போது நடப்பட்டன.

# மட்டக்களப்பில் இடம்பெற்ற குருத்தோலை ஆராதனை

*மட்டக்களப்பு விசேட நிருபர்*

குருத்தோலை ஞாயிறு ஊர்வலம் மற்றும் ஆராதனைக் கொண்டாட்டம் ஞாயிற்றுக்கிழமை (28) மட்டக்களப்பு நகரில் நடைபெற்றது. மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா தலைமையில், புளியந்தீவு புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து ஆசீர்வதிக்கப்பட்ட குருத்தோலைகளை அடியார்கள் பற்றிக் கொண்டு ஆரம்பமான ஊர்வலம் நகரின் பிரதான வீதி வழியாக புனித மரியாள் பேராலயத்தைச் சென்றடைந்தது.

புனித மரியாள் பேராலயத்தின் பங்குத் தந்தை ஜோர்ஜ் ஜீவராஜ், அருட்தந்தை எஸ்.மொறாயஸ் உள்ளிட்ட அருட்தந்தையர்கள் கூட்டுத்திருப்பலியை ஒப்புக் கொடுத்ததோடு ஆசீர்வதிக்கப்பட்ட குருத்தோலைகள் அடியார்களுக்கு வழங்கப்பட்டன.



# அக்கரைப்பற்று பெரியபிள்ளையார் ஆலய குடமுழுக்கில் இரு யானைகள் பங்கேற்பு

*வாச்சிக்குடா விஷேட நிருபர்*



அக்கரைப்பற்று கருங்கொடித்தீவுறை பெரியபிள்ளையார் ஆலய எண்கழிம முப்பத்தாறு தத்துவத் தூண்கள் தாங்கும் பதினேழுகுண்ட பிரம்மசூத்திர 25ஆவது குடமுழுக்கை முன்னிட்டு, பிரதேசத்தில் முதற்தடவையாக கலசம் தாங்கிய இரு யானைகளின் ஊர்வலம் இடம் பெற்றது.

அக்கரைப்பற்று கருங்கொடித்தீவின் ஆதிக்கோயிலாம் 2000 வருடங்கள் பழமையானதும் ஊர்ப்பிள்ளையார் பெரிய பிள்ளையார் கோயில் என சிறப்பு பெயர் கொண்டு விளங்கும் ஸ்ரீ சித்தி விநாயகர் மஹா தேவஸ்தானம் எதிர்வரும் சித்திரை 02ஆம் திகதி 17 குண்ட மகா யாக கும்பாபிஷேகம் காண இருக்கிறது.

கர்மாரம்பமானது; 25ஆம் திகதி ஆரம்பமானதுடன்;

31 ஆம் நாள் மற்றும் சித்திரை 01ஆம் திகதிகளில் எண்ணெய்க்காப்பிடலும் 02 ஆம் திகதி கும்பாபிசேகமும் நடைபெறும்.

இதனை முன்னிட்டதான பெருவிழாவின் மேளதாளங்கள் நடன நிகழ்வுகளுடன் கலசம் தாங்கிய இரு யானைகள் ஊர்வலம் நேற்று இடம் பெற்றது.

பனங்காடு பாசுபதேசுவரர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமான ஊர்வலமானது பிரதான வீதிகளினூடாக அக்கரைப்பற்று சந்தை சதுக்கத்தை அடைந்து அங்கிருந்து பெரிய பிள்ளையார் ஆலயத்தை சென்றடைந்தது.

ஆலய தலைவர் மு.வடிவேல் மற்றும் ஆலயக்கும்பாபிசேக குழுத் தலைவர் எஸ்.புண்ணியமூர்த்தி ஆகியோரின் தலைமையில் இடம் பெறவுள்ள கும்பாபிசேக குடமுழுக்கினை தத்புருஷ சிவாச்சாரியார் பிரதிஷ்டா கலாநிதி சண்முகவசந்தன் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடாத்தி வைக்கவுள்ளனர்.

# அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் செயலமர்வு

*அட்டாளைச்சேனை மத்திய நிருபர்*

ஜனாதிபதியின் 'சுபீட்சத்தை நோக்கிய பயணம்' தேசிய வேலைத் திட்டத்தின் கீழ், கோவிட் 19, தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்பு பெறும் வழிமுறைகள் மற்றும் ஆரோக்கிய வாழ்வை கட்டியெழுப்புதல் தொடர்பில் அம்பாறை மாவட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை பணிப்பாளர் டொக்டர் கே.எல்.எம்.நக்பர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இவ்வேலைதிட்டத்தின் கீழ், அக்கரைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இதன்போது, ஆரோக்கிய வாழ்வைக் கட்டியெழுப்புதல், நஞ்சற்ற உணவுப் பழக்கங்கள், சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள், கோவிட் 19 மற்றும் தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்பு பெறும் வழிமுறைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் ஏ.கே.றொசின் தாஜ் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில், டொக்டர் கே.எல்.எம்.நக்பர் பிரதான வளவாளராகக் கலந்து கொண்டு விளக்கமளித்தார்.

# கிராமத்துக்கான பாதுகாப்பு ஆலோசனை குழுக்கூட்டம்

*பெரியபோரதீவு தினகரன் நிருபர்*

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி, கொக்கட்டிச்சோலை மற்றும் காத்தான்குடி ஆகிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் அப்பகுதி சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்களுக்கிடையிலான கிராமத்துக்காக சுரகிமு லங்கா பொலிஸ் பாதுகாப்பு ஆலோசனைக் குழுக் கூட்டம் மட்டக்களப்பு மாங்காடு தனியார் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (28) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லக்சிறி விஜேசேன, மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்க வெல்லாவெளி உதவிப் பிரதேச செயலாளர் சி.புவனேந்திரன் மற்றும் களுவாஞ்சிகுடி, வெல்லாவெளி, கொக்கட்டிசோலை, காத்தான்குடி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், கிராம சேவை உத்தியோகஸ்த்தர்கள், கிராமிய பொலிஸ் பாதுகாப்பு குழுக்களின் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், என



பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது பிரதேசங்களில் இடம் பெறுகின்ற போதை வஸ்து விநியோகம், அதன் நுகர்வு, சிறுவர் துஸ்பிரயோகம் சுற்றுச் சூழல் பாதுகாப்பு பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் அனர்த்த முகாதைத் துவத்துவம், போன்ற செயல்பாடுகள் தொடர்பாக பிரதேச மட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரிகளினால் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.




தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சியின் மாட்டக்களப்பு மாவட்ட மற்றும் பிரதேச அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு செங்கலடி பிரதேசத்தில் நடைபெற்றது. முன்னாள் பிரதியமைச்சரும் அக்கட்சியின் செயலாளர் நாயகமுமான வினாயக மூர்த்தி முரளிதரன் நியமனக் கடிதங்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்; ஏறாவூர் நிருபர்)

# பொலிஸ் உத்தியோகத்தர் கண்டெடுத்த பணப்பை உரியவரிடம் ஒப்படைப்பு

*மட்டக்களப்பு குறூப் நிருபர்*

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கண்டெடுக்கப்பட்ட பணப்பை உரியவரிடம் கையளிக்கப்பட்ட நிகழ்வு மட்டக்களப்பு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தரான ஆர்.பி.டி.துமிந்த என்ற பொலிஸ் உத்தியோகத்தரே மேற்படி பணப்பையைக் கண்டெடுத்தார்.

அம்பாறையிலிருந்து மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு கடமைக்கு வந்து கொண்டிருந்தபோதே மாவடி முன்மாரி பகுதியில் வீதியில் கிடந்த பணப்பையைக் கண்டெடுத்துள்ளார்.

குறித்த பணப்பையில் 11300 ரூபாய் பணம், சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளிட்டவை இருந்துள்ளன.

குறித்த பணப்பைக்குச் சொந்தக்காரரான முனைக்காட்டைச் சேர்ந்த குணரட்ணம் கனிஸ்டன் உயர் வகுப்பு மாணவனிடம் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்க பணப்பையை ஒப்படைத்தார்.

பணப்பையைக் கண்டெடுத்த பொலிஸ் உத்தியோகத்தர் மாத்தறை பொலிஸ் நிலையத்திலிருந்து கடந்த வாரமே மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடற்கரையோரம் ஞாயிற்றுக்கிழமை (28) தூய்மைப்படுத்தப்பட்டது. அதிபர் அருட்தந்தை அல்பிரட் விஜயகமலன் தலைமையில் இச்செயற்பாடு இடம்பெற்ற போது. படம்: தம்பலகாமம் நிருபர்

# "வாழ்வு என்பது பிறரை அன்புகூர்வதில் கிட்டும் மகிழ்வில் அடங்கியுள்ளது"

"வாழ்வு என்பது நாம் எவ்வளவு கொண்டிருக்கிறோம் என்பதிலோ நாம் என்ன சாதித்தோம் என்பதிலோ அல்ல மாறாக நாம் அன்பு கூரப்படுவதை உணர்வதிலும் நாம் பிறரை அன்புகூர்வதில் கிட்டும் மகிழ்விலும் அடங்கியுள்ளது."

இத்தாலி புனித பேதுரு பெருங் கோவிலில் சிறிய அளவில் குருத்தோலை பவனியைத் தொடக்கி பின்னர் கர்தினால்களுடன் இணைந்து குருத்தோலை ஞாயிறு திருப்பலியை நிறைவேற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஒவ்வோர் ஆண்டும் குருத்து ஞாயிறு திருவழிபாடு நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. எருசலேமில் நுழையும் கிறிஸ்துவை மகிழ்ச்சியுடன் வரவேற்கும் நாம் அவர் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாவதையும் சிலுவையில் அறையப்படுவதையும் காண்கிறோம். புனித வாரம் முழுவதும் நம்மைத் தொடர்ந்துவரும் இந்த ஆச்சரியம் சிந்திக்கத்தக்கது.

இயேசு நம்மை ஆச்சரியத்திலாழ்த்துகிறார். மக்கள் மிகவும் உயரிய வரவேற்பை கொடுக்க அவரோகழுதையின் மீது ஏறி வருகிறார். பாஸ்கா திருவிழாவின்போது தங்களை விடுவிக்கவல்ல வல்லமையுள்ளவராக மக்கள் அவரை எதிர்நோக்கியிருக்க, அவரோ தன்னையே பலியாக்கி பாஸ்காவை நிறைவு செய்கிறார். உரோமையர்களை வாள் கொண்டு வெற்றி காண மக்கள் விரும்பும் போது, அவரோ சிலுவையை கையிலெடுக்கிறார்.ஓசன்னா என்று பாடிய மக்கள் சிலுவையில் அறையுமென கத்துமளவிற்கு என்ன நடந்தது? அவர்கள் மெசியாவைக் குறித்த தப்பெண்ணங்களில் மூழ்கிப் போயிருந்தார்கள். அம்மக்கள் இயேசுவை வியந்து பார்த்தார்களேயொழிய, அந்த வியத்தகுச் செயல்களால் தாங்கள் கவரப்பட அவர்கள் அனுமதிக்கவில்லை.

இன்றும் எண்ணற்ற மக்கள் இயேசுவை வியந்து பார்க்கின்றனர். அவர் எடுத்துரைத்த நல்லவைகளைக் குறித்து அவர் அன்பாலும் மன்னிப்பாலும் நிறைந்திருந்ததைக் குறித்து அவரின் வாழ்வு எடுத்துக்காட்டு இவ்வுலக வரலாற்றை மாற்றியுள்ளதைக் குறித்து வியந்து நோக்குகின்றனர்.

ஆனால் அவர்களின் வாழ்வில் அந்த வியப்பும் பாராட்டும் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. அவரை வியந்து பார்த்தால் மட்டும் போதாது, அவரின் வழிகளில் நடக்க முன்வரவேண்டும். நம் ஆண்டவர் குறித்தும் அவரின் பாஸ்கா குறித்தும் நம்மை ஆச்சரியப்பட வைப்பது என்ன? தன்னைத் தாழ்த்திய தன் வழியாக அவர் மகிமையை அடைந்தார். துன்பதுயர்களையும்மரணத்தையும் ஏற்றுக் கொண்டதன் வழியாக அவர் வெற்றி வாகை சூடினார்.

நாமோ நம் வெற்றியின் பாதையில் இத்தகைய நிலைகளை தூர ஒதுக்கி வைக்கவே பார்ப்போம். புனித பவுல் கூறுவதுபோல், இயேசுவோ 'தம்மையே வெறுமையாக்கி..... தம்மையே தாழ்த்திக்கொண்டார்' (பிலிப். 2:7 8). எல்லாம் வல்லவர் தன்னை ஒன்றுமில்லாதவராக்கியது உண்மையிலேயே ஆச்சரியப்பட வைக்கும் ஒன்றுதான்.

அனைத்துமறிந்த வார்த்தையானவர் சிலுவையிலிருந்து நமக்கு மௌனத்தில் கற்பிக்கிறார். மன்னருக்கெல்லாம் மன்னர் சிலுவை மரத்தில் முடிசூட்டப்படுகிறார். அனைத்துலகிற்கும் ஆண்டவர் அனைத்தும் களையப்பட்டு மகிமைக்குப் பதிலா முட்களால் முடிசூட்டப்படுகிறார்.

மனித உரு எடுத்த நன்மைத்தனம் இங்கு அவமானப்படுத்தப்பட்டுஅடிக்கப்படுகிறது. இந்த அவமானங்களையெல்லாம் என் கடவுளே நீர் ஏன் தாங்க வேண்டுமென ஆவல்கொண்டீர்?

அவர் நமக்காக இதை ஏற்றுக்கொண்டார். நம் துன்பதுயரங்கள் மற்றும் மரணத்தின் போது நம்மைக் கைவிடாமல் நமதருகில் இருக்கவேண்டும் என்பதற்காக இதையெல்லாம் செய்தார்.

நம்மை மீட்கும்படியாக நம் துயரங்களின், துன்பங்களின் ஆழத்தில் இறங்கும் வண்ணம் தான் சிலுவையில் ஏற்றப்பட தன்னையே கையளித்தார். நம்மைப் போன்று அனைத்துத் துன்பங்களையும் அனுபவித்து அவைகளை மீட்டு உருமாற்றினார். கடவுள் நம்மருகேயிருக்கிறார். அவர் தான் வெற்றி வீரர். ஆனால் இந்த குருத்தோலையின் வெற்றி சிலுவை மரத்தை தாண்டிச் செல்லவேண்டும். ஏனெனில் குருத்தோலையும் சிலுவையும் ஒன்றுக்கொன்று பிரிக்கமுடியாதவை. நமக்கு தினசரி வாழ்வில் மன்னிப்பையும் புதிய வாழ்வுக்குரிய வாய்ப்பையும் தரும் நிலை குறித்து வியந்து அவரைப் பின்பற்றும் வரத்தை வேண்டுவோம். அது குறித்து மகிழ்ச்சியுடன் பேசுவோம். வியத்தகு நிலைகளால் அனுபவங்களைப் பெறாத விசுவாசம்அருளின் அதிசயங்களை கண்டு கொள்ள முடியாததாகிறது. அந்த விசுவாசத்தால் வாழ்வு தரும் உணவை ருசி பார்க்கவோ வார்த்தையானவருக்கு செவிமடுக்கவோ நம் சகோதர சகோதரிகளின் அழகை புரிந்து கொள்ளவோ இயற்கை எனும் கொடையின் அழகை இரசித்து பாராட்டவோ இயலாது. இந்தப் புனித வாரத்தில் சிலுவையை நோக்கி நம் பார்வையை உயர்த்தி வியந்து ஏற்கும் அருளை வேண்டுவோம்.

இயேசுவின் பாடுகள் குறித்து தியானித்துக்கொண்டிருந்தபோது, தன் உடன் சகோதரர்கள் அழாமலிருந்தது குறித்து ஆச்சரியத்தில் ஆழ்ந்தார் அசிசியின் புனித பிரான்சிஸ். நாம் என்ன செய்கிறோம்? நாம் கடவுளின் அன்பால் கவரப்பட்டுள்ளோமா? அவரைக் குறித்து வியந்து பாராட்டி பின்பற்றத் தவறியுள்ளோமா? நம் துயர்களும் எதிர்பார்ப்பு ஏமாற்றங்களும் நம்மை முடக்கியுள்ளனவா? இறைவனின் செயல்கள் குறித்து வியந்து பாராட்டும் அருளை தூய ஆவியாரிடமிருந்து பெறும் வகையில் நம்மைத் திறக்காமல் உள்ளோமா?

இறைவனை வியந்து நோக்குவதிலிருந்து மீண்டும் துவங்குவோம். சிலுவையில் தொங்கும் இயேசுவை நோக்கி 'எவ்வளவு தூரம் என்னை அன்புகூர்கிறீர்? என்னை விலைமதிப்பவற்றவனாய் நடத்துகிறீரே?' என்று அவரிடம் பேசுவோம்.

அன்பால் நம்மை ஆளும் இறைவன் நம்மை வியப்பிலாழ்த்துகிறார். நம் இதயங்களையும் மனங்களையும் வியப்பால் நிரப்புகிறார். வியப்பால் நிரப்பப்பட்டவர்களாக நாம் சிலுவையில் அறையப்பட்டிருக்கும் இயேசுவை உற்று நோக்கி "நீர் உண்மையாகவே இறைமகன். நீர் எம் இறைவன்' என நாமும் கூறுவோம். என்று மறையுறையை நிறைவு செய்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.



## குருத்தோலை ஞாயிறு திருப்பலியில் திருத்தந்தை பிரான்சிஸ்

கிறிஸ்டோபர் பிரான்சிஸ்...




## வெள்ளவத்தையில் குருத்தோலை ஞாயிறு திருப்பலி








(பட உதவி: மைக்கல் பெர்னாண்டோ புள்ளே)

பரிசுத்த வாரத்தை ஆரம்பிக்கும் குருத்தோலை ஞாயிறு தினத்தில் கொழும்பு வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலி மற்றும் குருத்தோலை பவனி களில் விசுவாசிகள் பங்கேற்பதையும் படங்களில் காணலாம்.

# இயேசுவின் இறை தன்மையில் அசையாத நம்பிக்கை வைப்போம்

இயேசுவின் இறை தன்மையில் அசையாத நம்பிக்கை வைப்போம், வேதனையோ நெருக்கடியோ பசியோ ஆடையின்மையோ, சாவோ வாழ்வோ, வேறு எந்தச் சக்தியோ இயேசுவிடமிருந்து ஒருபோதும் நம்மைப் பிரிக்கவிடக் கூடாது (உரோ 8:3839).இவ்வுலகில் நாம் யாரையும் எளிதில் நம்பிவிட முடியாது. உன் பகைவன் உன்னைக் கைகூப்பி வணங்கினால் அவனை நம்பாதே; ஏனெனில் அவனுடைய கூப்பிய கைகளிலே கத்தியை வைத்திருப்பான் என்று எச்சரிக்கிறார் வள்ளுவர், "தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்" (குறள் 828)

கிறிஸ்து பல அற்புதங்களையும் அருங்குறிகளையும் செய்தபோது பலர் அவரை நம்பினர்.ஆனால் கிறிஸ்துவோ அவர்களை எளிதில் நம்பிவிட வில்லை. "இயேசு அவர்களை நம்பி விடவில்லை. ஏனெனில் அவருக்கு அனைவரைப் பற்றியும் தெரியும். மனிதர் உள்ளத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தார்" (யோவா 2:25)

மனிதர்களைப் பற்றிய இயேசுவின் கணிப்பு சரியானதே. ஏனெனில், குருத்து ஞாயிறு அன்று. "ஓசன்னா; ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப் பெறுக' (மாற்கு 11:9) என்று ஆர்ப்பரித்த அதே மக்கள் பெரிய வெள்ளிக்கிழமையன்று, 'அவனைச் சிலுவையில் அறையும்" (மாற் 15:13) என்று கூச்சல் இட்டனர், எலும்பில்லாத நாக்கு எப்படியும் பேசும், "போற்றலும் தூற்றலும் ஒரே வாயிலிருந்து வருகின்றன" (யாக் 3:10).



கிறிஸ்துவோ, "போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்" என்ற மனநிலையுடன் புகழ்ச்சியிலும் இகழ்ச்சியிலும் சமச்சீர்நிலையில் வாழப் பழகிக் கொண்டார். இறைவாக்கினர் எசாயா சித்தரிக்கும் துன்புறும் இறை ஊழியனாக கிறிஸ்து தம்மை அடிப்போர்க்கு முதுகையும் தாடியைப் பிடுங்குவோர்க்குத் தாடையையும் கையளித்தார்; நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோர்க்கும் தமது முகத்தை மறைக்க வில்லை (எசா 50:6). அவர் மனிதர் தருகின்ற மகிமையைத் தேடாமல் (யோவா 5:41), அவரது தந்தை அவருக்கு அளிக்கவிருந்த மகிமை ஒன்றையே நாடினார் (யோவா 8:54),

கிறிஸ்து தம்மைத் தாழ்த்தி, சாவை ஏற்கும் அளவுக்கு. அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்தார். எனவே தான் கடவுள் அவரை உயிர்த்தெழச் செய்து மாட்சிமைப்படுத்தினான் (பிலி 2:611).

உலக வாழ்வின் எதார்த்தநிலை: பானையிலே சோறு இருந்தா பூனைகளும் சொந்தமடா வேதனையைப் பங்கு வைச்சா சொந்தமில்லை பந்தமில்லை " இது திரைப்படப்பாடல். நாம் வசதியாக வாழும்போது நமக்கு நெருக்கமாக இருந்தவர்கள் நாம் நொடித்துப் போகும்போது தலை மறைவாகிவிடுகின்றனர். எனவே, இன்பத்தில் தலை கால் தெரியாமல் அலையவோ துன்பத்தில் மனமுடைந்து போகவோ கூடாது." வளமையிலும் வாழத் தெரியும்; வறுமையிலும் வாழத் தெரியும். நிறைவோ குறைவோ, எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன்" (பிலி 4:12) என்று கூறிய புனித பவுலின் மனநிலையைப் பெறவேண்டும்.



**பரிசுத்த வாரம் தரும் வாழ்க்கைப் படிப்பினை**

இயேசு பிடிபட்டபோது ஓர் இளைஞர் வெறும் உடம்பின் மீது ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு இயேசுவின் பின்னே சென்றார். அவரைப் பிடித்தபோது அவர் போர்வையை விட்டுவிட்டு ஆடையின்றித் தப்பி ஓடினார் (மாற் 14:5152). இந்த இளைஞரைப் போல நாம் இயேசுவைப் பின்பற்றக்கூடாது.

சிலர் இயேசுவின்மீது உண்மையான பற்றுறுதியின்றி. ஒருசில கொள்கைகள், இலட்சியங்கள், இலக்குகள் என்னும் போர்வையைப் போர்த்திக் கொண்டு இயேசுவைப் பின்பற்றுகின்றனர். ஆனால், அவர்களுடைய உயிருக்கு ஆபத்து வரும் போது, அக்கொள்கைகளையும் இலக்குகளையும் தூக்கி எறிந்துவிட்டுத் தப்பி ஓடிவிடுகின்றனர்.

பொதுநிலையினர்களிலும் ஒரு சிலர் பல்வேறு பிரிவினைச் சபைகளுக்கு மாறிக் கொண்டே இருக்கின்றனர். இவர்களுக்கு உறுதியான நிலைப்பாடில்லை. திசை மாறிய பறவைகள், இவர்களுக்கு இயேசு கூறுவது: "கலப்பையில் கைவைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்பட்டத் தகுதியுள்ளவர் அல்ல" (லூக் 9:62)

கிறிஸ்து சிலுவையில் உரக்கக் கத்தி உயிர் நீத்த போது, அவருக்கு எதிரே நின்று கொண்டிருந்த நூற்றுவர் தலைவர், "இம்மனிதர் உண்மையாகவே இறைமகன்" என்றார் (மாற் 15:39). இவர் பிற இனத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இஸ்ரயேல் மக்களும் மறைநூல் அறிஞர்களும் மக்களின் மூப்பர்களும் தலைமைச் சங்கமும் ஆளுநரும் ஏன், வானகத் தந்தையும் கூட இயேசுவைக் கைவிட்ட நிலையில் (என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்?), நூற்றுவர் தலைவர் இயேசுவைக் கடவுளின் மகன்' என்று அறிக்கையிட்டார்.



'கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியின் தொடக்கம்' (மாற் 1:1) என்று தமது நற்செய்தியைத் தொடங்கிய மாற்கு, "இயேசு கடவுளின் மகன்" (மாற் 15:39) என்ற நூற்றுவர் தலைவரின் விசுவாச அறிக்கையுடன் தமது நற்செய்தியை முடிக்கிறார்.

இயேசுவின் இறை தன்மையைக் கூட மறுதலிக்கும் இறையியலாளர் வாழும் இக்காலத்தில் நூற்றுவர் தலைவரைப் பின்பற்றி இயேசுவின் இறை தன்மையில் அசையாத நம்பிக்கை வைப்போம், வேதனையோ நெருக்கடியோ பசியோ ஆடையின்மையோ, சாவோ வாழ்வோ, வேறு எந்தச் சக்தியோ இயேசுவிடமிருந்து ஒருபோதும் நம்மைப் பிரிக்கவிடக் கூடாது (உரோ 8:3839).

அருட்பணி
வை.இருதயராஜ்...

# வீட்டுத்திட்ட நிதியினை வழங்க கோரி பயனாளிகள் கவனயீர்ப்பு போராட்டம்





மாங்குளம் குறூப் நிருபர்

வீட்டுத் திட்டத்திற்காக முதற் கட்ட நிதி வழங்கப்பட்டுள்ள நிலையில் மீதி பணத்தை வழங்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அவற்றை உடனடியாக வழங்கக் கோரியும் பயனாளிகள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இக் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று மாங்குளத்திலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அலுவலகத்தின் முன்பாக இடம் பெற்றது.

இது தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறுகையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கடந்த 2019 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்திற்கு முதற்கட்ட கொடுப்பனவாக ஒரு இலட்சம் தொடக்கம் இரண்டு இலட்சம் ரூபா வரை வழங்கப் பட்டுள்ளது. 7.5 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டத்தின் புதிய அரசாங்கத்தினால் மீதி நிதி விடுவிக்கப்படாத நிலையில் நாம் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றோம்.

இந்நிலையில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட கணக்காளர் என்.பழனிவேல் வருகை தந்து கலந்துரையாடி மூன்று மாத காலத்திற்குள் நிதியினை பெற்றுத்தருவதாக தெரிவித்தார்.

இதனையடுத்த தீர்வு கிடைக்காவிடின் தொடர்ச்சியாக போராட்டத்தினை மேற்கொள்வோம் எனக் கூறி கலைந்து சென்றனர்.

இதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேச சபை முன்பாகவும் மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் கண்டன பேரணியொன்றிலும் ஈடுபட்டனர்.

# திண்மக்கழிவு நிலையத்துக்கு 20 இலட்சம் மேலும் ஒதுக்கீடு

மானிப்பாய் தினகரன் நிருபர்

கல்லுண்டாய் வெளியில் வலி. தென்மேற்கு பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டு வரும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தின் அபிவிருத்திக்கு பிரதேச சபை மேலும் 20 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தின் காக்கைதீவு பகுதியில் அமைந்துள்ள திண்மக்கழிவு வளாகத்தை யாழ்.மாநகர சபையும் வலி. தென்மேற்கு பிரதேச சபையும் பயன்படுத்தி வந்தன.

வளாகத்தில் குவிக்கப்பட்டிருந்த குப்பை மேடு இரு தடவைகள் மர்மமான முறையில் தீப்பற்றி எரிந்தமையால் யாழ்.மாநகர சபைக்கும் வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

இது தொடர்பில் விசாரிப்பதற்காக காக்கைதீவு திண்மக்கழிவு வளாகத்திற்கு மல்லாகம் நீதவான் சென்றபோது திண்மக்கழிவு வளாகத்தை முழுமையாக பொறுப்பேற்று கொள்வதாக தெரிவித்த யாழ்.மாநகர சபை ஒரு டிராக்டர் பெட்டி திண்மக்கழிவு கொட்டுவதற்கு ஐநூறு ரூபா வழங்க வேண்டும் என்று பிரதேச சபைக்கு நிபந்தனையும் விதித்தது.

திண்மக் கழிவுகளை கொட்டுவதற்கு வேறு இடம் இல்லாமையால் மாநகர சபையின் நிபந்தனையை ஏற்றுக் கொண்ட பிரதேசசபை கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக 500 ரூபா வீதம் பணம் செலுத்தி திண்மக் கழிவுகளை கொட்டி வருகின்றது. இதனால் சபைக்கு பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிரதேச சபை கேட்டுக்கொண்டதற்கிணங்க சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் கல்லுண்டாய் வெளியில் காணி வழங்கியதை அடுத்து அக்காணியில் 50 இலட்சம் ரூபா செலவில் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையத்தின் வேலைகளை முழுமையாக பூரணப்படுத்த மேலதிக நிதி தேவைப்பட்டதால் சபை மேலும் 20 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்த நிதி மூலம் சுற்றுவேலி, களஞ்சிய அறை, மின்விநியோகம் போன்ற வேலைகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை நிலையத்தின் பாதுகாப்பு கருதி இரவும் பகலும் இரண்டு காவலாளிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

# உபஉணவு செய்கையாளரின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

முல்லைத்தீவு குறூப் நிருபர்

கண்ணகைபுரம் கிராமத்தில் உப உணவுப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டுவரும் விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு உப உணவுப் பயிர்ச் செய்கையை மேம்படுத்த அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இக் கிராமத்துக்கான பயிர்ச் செய்கை நீர்வழங்கல் கூட்டம் மார்ச் 24ம் திகதி கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகனன் தலைமையில் நடைபெற்றபோது, அமைச்சர் டக்ளஸின் மேலதிக இணைப்பாளர் கோ. றுஷாங்கன் இத் தகவலை அங்கு வெளியிட்டார்.

உழுந்து, பயறு உள்ளிட்ட சிறு தானியங்கள், வெங்காயச்செய்கை, மரக்கறிச் செய்கை என பல்வேறு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் கண்ணகைபுரம் கிராம மக்கள், தமது விவசாய உற்பத்திகளுக்கான போதிய சந்தைவாய்ப்பைப் பெற முடியாமல் சிரமப்பட்டு வருகின்றனர். கடந்த ஆண்டு கொரோனா நெருக்கடி உச்சமாக இருந்த காலப்பகுதியில் கிராமத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பலநூறு கிலோ கிராம் பூசணிக்காய் உரிய சந்தைவாய்ப்பு இல்லாத காரணத்தினால் பெருமளவில் அழுகி நாசமடைந்தன. இதனால், பூசணி செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெருத்த நட்டத்தை எதிர்கொண்டனர்.

இது குறித்து கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன், இனிவரும் காலத்தில் கண்ணகைபுரம் கிராமத்தில் விவசாய உற்பத்திகளுக்கு உரிய சந்தைவாய்ப்பைப் பெற்றுத்தர அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

# தேங்காய் எண்ணெய் கலப்படம்; மன்னாரில் மாதிரிகள் சேகரிப்பு



## பாவனையாளர் அதிகார சபை நடவடிக்கை

மன்னார் குறூப் நிருபர்

நாடளாவிய ரீதியில் அதிகரித்து வரும் தேங்காய் எண்ணெய் கலப்படம் தொடர்பான பிரச்சினைகளை குறைக்கும் வகையில், மன்னாரில் உள்ள வர்த்தக நிலையங்களில் பாவனையில் உள்ள தேங்காய் எண்ணெய்களின் மாதிரிகளை பெற்று கொள்ளும் நடவடிக்கையை பாவனையாளர் அதிகார சபை ஆரம்பித்துள்ளது.

மத்திய பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் இந் நடவடிக்கையினை நேற்று ஆரம்பித்தனர்.

மாவட்ட ரீதியாக உள்ள மொத்த மற்றும் பிரதான விற்பனை நிலையங்களில் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு தேசிய பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகளின் ஒழுங்கமைப்பில் கலப்படம் மற்றும் அங்கிகரிக்கப்படாத எண்ணெய்கள் தொடர்பாக ஆரயப்பட்டதுடன் சந்தேகத்துக்குரிய எண்ணெய்களின் மாதிரிகளும் பெறப்பட்டுள்ளன.

பெறப்பட்ட மாதிரிகள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு கொழும்பில் உள்ள தேசிய பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. தேசிய பகுப்பாய்வு திணைக்களத்தினூடாக மாதிரிகளில் கலப்படம் உறுதி செய்யப்படும்பட்சத்தில் விற்பனையாளர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# பேருந்து பயணிகளுக்கு பி.சி.ஆர்



ஓமந்தை விஷேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி பேருந்தில் வரும் பயணிகளுக்கு வவுனியாவில் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வவுனியா விதை உற்பத்திகள் பண்ணைக்கு முன்பாக பொலிசார் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் ஒன்றிணைந்து இச் செயற்றிட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா ஊடாக பயணிக்கும் பேருந்துகளை வழிமறித்து வவுனியாவில் இறங்கவுள்ள பயணிகளிடமே பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# காட்டு மரங்கள் அழிப்பு



முல்லைத்தீவு குறூப் நிருபர்

பூநகரி முக்கொம்பனில் மரங்கள் அழிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டு வருகின்றது. பூநகரி பிரதேச செயலாளர் பிரிவு உவர் ஆபத்தினை எதிர்கொண்டுள்ள ஒரு பிரதேச செயலாளர் பிரிவாகும்.

மரங்களை பாதுகாப்பது தற்போதுள்ள முக்கிய முடிவாகும். முக்கொம்பன், கரியாலைநாகபடுவான், ஜெயபுரம் பகுதியில்தான் தற்போது காடுகள் காணப்படுகின்றன. முக்கொம்பனில் இருந்துதான் பூநகரிக்கான குடிநீர் எடுத்துச் செல்லப்படுகின்றது.

இத்தகைய பின்னனியில் கடந்த பத்தாண்டுகளில் முக்கொம்பன் பகுதியில் அனுமதியுடனும் அனுமதியற்ற முறையிலும் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. முக்கொம்பனில் இருந்து 10ம் கட்டைப் பக்கமாக நெருங்கிவரும் உவர்ப் பரம்பலைத் தடுப்பதில் முக்கொம்பனில் உள்ள காடு முக்கிய பங்கு வகிக்கும் நிலையில் தற்போது முக்கொம்பனில் பெருமளவு மரங்கள் தேவையற்ற விதத்தில் அழிக்கப்பட்டு வருவதாக பொது மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழ்.தென்மராட்சி பிரதேசத்தில் 30 பாடசாலைகள் மூடப்படும் அபாயம்

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் தகவல்

சாவகச்சேரி விசேட நிருபர்

தென்மராட்சி பிரதேசத்தில் மாத்திரம் அறுபது பாடசாலைகளில் முப்பதுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இழுத்து மூடப்படும் அபாயநிலை காணப்படுவதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் எச்சரித்துள்ளார்.

அண்மையில் மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற ஆண்டு விழா நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இத் தகவலை குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில்,

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பாலர் பாடசாலைகள் மற்றும் ஆரம்ப பாடசாலைகளில் இணையும் மாணவர் தொகை வெகுவாக குறைவடைந்துள்ளது. மீசாலை கிழக்கில் உள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில் இவ்வருடம் முதலாம் தரத்திற்கு ஒரு மாணவர் கூட இணையவில்லை.

இது எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். தற்சமயம் இலங்கையில் கல்வி அமைச்சு ஒரு அறிவித்தலை விடுத்துள்ளது. அதாவது இருநூறு பிள்ளைகளுக்கும் குறைவாக காணப்படும் பாடசாலைகளை மூடுவது தொடர்பாக ஆலோசிக்கப்படுகிறது.

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள அறுபது பாடசாலைகளில் 54 பாடசாலைகளே தற்சமயம் இயங்கி வருகின்றன. ஆறு பாடசாலைகள் சில பல காரணங்களால் ஏற்கனவே மூடப்பட்டு விட்டன. பொறுப்பு வாய்ந்த கல்வி அதிகாரி ஒருவரின் தகவலின் படி தென்மராட்சியில் முப்பது பாடசாலைகளில் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்களே கல்வி பயில்கிறார்கள்.

கல்வி அமைச்சின் யோசனை நடைமுறைக்கு வருமானால் தென்மராட்சி பிரதேசத்தில் மாத்திரம் 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளை மூட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும். ஒரு பாடசாலையை தீர்மானம் நிறைவேற்றி மூடுவது சுலபம். ஆனால் அதே பாடசாலையை ஆரம்பிப்பது மிகமிகக் கடினமான செயற்பாடு.

அத்துடன் தென்மராட்சியில் குறைந்த மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகள் சிலவற்றை அருகில் இருக்கும் பாடசாலைகளுடன் இணைக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. அதனை நாம் தொடர்ச்சியாக எதிர்த்து வருகிறோம் என்றார்.

# குளத்தினை புனரமைக்க கோரிக்கை

முல்லைத்தீவு குறூப் நிருபர்

கிளிநொச்சி கரியாலைநாகபடுவான் குளத்தினை முழுமையாக புனரமைக்குமாறு குளத்தின் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

1957ஆம் ஆண்டிற்குப் பின்னர் குளத்தில் புனரமைப்பு வேலைகள் முழுமையாக இடம்பெறவில்லை. நீர்ப்பாசன வாய்க்கால்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. மாவட்டத்தின் நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாக கரியாலைநாகபடுவான் குளம் காணப்படுகின்ற போதிலும் புனரமைப்பிற்கான எந்தவிதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

கடந்த பல ஆண்டுகளாக மழை வீழ்ச்சியின் போது குளத்திற்கான நீர் வரவு மந்த கதியில் இருந்த போதும் தற்போது நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாயிகள் இணைந்து வாய்க்காலினை வெட்டி ஆற்றுடன் இணைத்திருப்பதன் காரணமாக நீர் வரவு கூடுதலாக உள்ளது. எனினும் குளம் புனரமைக்கப்பட வேண்டும்.

# தனிமைப்படுத்தப்பட்ட தொழிற்சாலை ஊழியர்களுக்கு உலருணவுப் பொருட்கள்



கொரோனா தொற்றுக் காரணமாக வவுனியாவில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு மாணிக்கதாசன் நற்பணி மன்றத்தின் ஒருங்கிணைப்பில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த சுவிற்சர்லாந்தில் வசித்து வரும் விஜயநாதன் இரட்னகுமார் என்பவர் தனது தந்தையான அமரர் விஜயநாதனின் 5ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இவ் உதவித் திட்டங்களை வழங்கினார்.

தனிமைப்படுத்தப்பட்ட ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர் குடும்பங்களுக்கும் மற்றும் மிகவும் கஷ்ரமான நிலையில் உள்ள தாய்மார்களுக்கும் இவ் உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன. மேலும் போராட்டத்தில் தனது பிள்ளைகளை இழந்த தாய் ஒருவருக்கும் இவர் உணவுப் பொருட்களை வழங்கினார்.

# மாணவர்களின் வரவு வீழ்ச்சி

முல்லைத்தீவு குறூப் நிருபர்

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தில் மாணவர்களின் வரவு குறைவாக உள்ளது என ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி த.யோகானந்தராசா தெரிவித்தார். மேலும் கூறுகையில்,

ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தில் 27 பாடசாலைகளில் 26 பாடசாலைகள் இயங்குகின்றன. பெரியகுளம் அ.த.க.பாடசாலை மூடப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தில் ஆசிரியர்களும் மாணவர்களும் எதிர்கொள்கின்ற முதன்மை பிரச்சினை போக்குவரத்து நெருக்கடியாகும். முத்தையன்கட்டு இடதுகரை, வலது கரை, கூழாமுறிப்பு உட்பட பல பாடசாலைகளுக்கான பஸ் சேவைகள் நடைபெறுவதில்லை. பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களின் போக்குவரத்து கருதி பஸ் சேவைகள் நடைபெற வேண்டும் என்றார்.

# நகர்வலம்



கல்கிசை - தெஹிவளை கடற்கரை அபிவிருத்திகள்

## பல்கலை துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளுடன் முன்னெடுப்பு

### கடற்கரை பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர்

அஷ்ரப் ஏ சமத்

கல்கிசை கடற்கரையில், பீச் ஹோட்டலில் இருந்து தெஹிவளை புகையிரத நிலையம் வரை யான 2 கிலோமீற்றர் பகுதி உரிய துறைசார் பல்கலைக்கழக பேராசிரியர்களின் ஆலோசனையுடனே முன்னெடுக்கப்பட்டதாக கடற்கரை பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதற்காக கடற்கரை பாதுகாப்பு திணைக்களம் ஊடாக 110 மில்லியன் ரூபா இத்திட்டத்திற்காக செலவழித்துள்ளதாக தெரிவித்த அத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுகத் யாலோகம, 1500 கியூப் மணல் நிரப்பி 100 மீற்றர் அகலமும் 250 மீட்டர் நீளமும் கொண்ட 2 கிலோ மீற்றர் கடற்கரை பகுதி கடலரிப்பிலிருந்து பாதுகாத்து அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



அரசாங்க தகவல் திணைக்களம் ஊடாக ஊடகவியலாளர்ளை அப்பிரதேசத்துக்கு அழைத்து வந்து, அங்கு நடைபெற்றுள்ள அபிவிருத்திகளின் உண்மை நிலைமைகளை பணிப்பாளர் சுகத் யாலோகம விளக்கிக் கூறினார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில், இத் திட்டம் ஏற்கனவே 2017ல் திட்டமிடடப்பட்டிருந்தது. இவ் அபிவிருத்தி திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எமது திணைக்களத்திற்கு அனுமதி அளித்திருந்தார். அதற்கமைவாகவே கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதனை ஊடகங்கள் மூலம் சில சூழலியலாளர்கள் வேறுவிதமாக அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் சேறுபூசுகின்றனர்.

கடல் சம்பந்தப்பட்ட பல்கலைகழக பேராசிரியர்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு கடற்கரை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கு கடல் பாதுகாப்பு கரையோரத் திணைக்களத்திற்கு சகல அதிகாரங்களும் உண்டு. இங்கு மண்நிரப்புவதற்கு முன்னர் புகையிரத தண்டவாளங்கள் வரை கடல் நீர் அரித்திருந்தது. அச்சமயத்தில் இருந்த சகல புகைப்படங்களும் எம்மிடம் உள்ளன. மேலதிக செயலாளர் தலைமையில் எங்களது பொறியியலாளர்கள் இதனை அவதானித்து அறிக்கை சமர்பித்துள்ளோம். இதே போன்று பல கடலோர பிரதேசங்களும் எதிர்காலத்தில் உரிய சூழலியல் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்களின் ஆலோசனை பெற்று முன்னெடுக்கப்படும் என்றார்.

## வாகன விபத்தில் இரு பெண்கள் பலி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

ஏ 9 வீதியில் கெக்கிராவ ஆலிஸ்தான் பகுதியில் சனிக்கிழமை (27) இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பெண்கள் உயிரிழந்ததாக கெக்கிராவ பொலிசார் தெரிவித்தனர்.

பக்கமுன பகுதியிலிருந்து 16 பயணிகளுடன் அனுராதபுரத்திற்கு யாத்திரை சென்ற வேன் வீதியை விட்டு விலகிச் சென்று பெட்டிக் கடை ஒன்றுடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது. குறித்த வேனில் 3 பிள்ளைகள் உட்பட 16 பேர் பயணித்துள்ளனர். வேனின் சாரதிக்கு தூக்கம் ஏற்பட்டதனாலேயே விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

காயத்திற்குள்ளானோரை பிரதேசவாசிகள் மீட்டு சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பினர். இதன் போது 46 மற்றும் 85 வயது இரு பெண்கள் உயிரிழந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## ஆசிரியர் விடுதிகளை புனரமைக்க நடவடிக்கை

திறப்பனை தினகரன் நிருபர்

வட மத்திய மாகாண கிராமிய பாடசாலைகளில் தற்சமயம் பாவிக்க முடியாமலும் உடைந்தும், சிதைந்தும் போயுள்ள நிலையில் காணப்படும் ஆசிரியர் விடுதிகளை புனரமைக்க மாகாண சபை முன்வந்துள்ளது. மாகாண ஆளுநர் மகிபால ஹேரத் வழங்கிய ஆலோசனையின் பேரில் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வட மத்திய மாகாணத்தின் கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் தற்சமயம் பாவிக்க முடியாத அளவுக்கு உடைந்து போயுள்ள ஆசிரியர் விடுதிகளை உரிய திட்டதிற்கு அமைய புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மாகாண ஆளுநர் கல்வித்துறை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

வெளி இடங்களிலிருந்து கிராமிய பாடசாலைகளுக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் இத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்காக மாகாண சபை மூலம் 90 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.





'தெயட எளிய' வேலைத்திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்திலுள்ள மின்சார வசதியற்ற சமுர்த்தி பயனாளிகளுக்கு இலவச மின்சார வசதிகளை பெற்றுக்கொடுக்கும் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் காலி மாவட்ட பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கலந்துகொண்ட காலி தேர்தல் தொகுதி அபிவிருத்தி குழுத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மர்ஜான் பளீல் குத்துவிளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்து பயனாளிகள் மத்தியில் உரையாற்றுவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: வெலிகம தினகரன் நிருபர்)

## நெல்கொள்வனவு செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை

ஹொரவ பொத்தான விஷேட நிருபர்

அனுராதபுர மாவட்டத்தில் கலாவெவ, ஹொரவபொத்தான, கஹட்டகஸ்திகிலிய, கலபின்துனுவெவ, மதவச்சிய போன்ற பல பகுதிகளிலும் தற்போது பெரும்போக நெல்அறுவடை நடைபெற்றுவரும் நிலையில் அறுவடை செய்யப்படும் நெல்லை அரசாங்கம் கொள்வனவு செய்யவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெல் அறுவடைக்கான இயந்திரங்கள் மற்றும் கூலிஆட்களுக்கு தட்டுப்பாடு நிலவியதால் வெளி மாவட்டங்களில் இருந்து அவற்றை வரவழைத்து அறுவடை மேற்கொண்டபோதிலும்ஏனையபோகங்களைவிட இம்முறை பெரும்போகத்தில் குறைவான விளைச்சலே கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் நியாயமான விலையில் அரசாங்கம் நெல்கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அநுராதபுர மாவட்டத்தில்

## குடிநீரை சிக்கனமாக பயன்படுத்த அறிவுறுத்து

ஹொரவபொத்தான விஷேட நிருபர்

அநுராதபுர மாவட்டத்தில் வரட்சியான காலநிலை நிலவி வருவதால் குளங்களின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து செல்வதாக கலாவெவ பிராந்திய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பணிப்பாளர் லொகுபரன தெரிவித்தார்.

மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு அரசு பெரும்தொகை பணத்தை செலவிடுவதாகவும், அதனை குடிநீர் தேவைக்காக மாத்திரம் பயன்படுத்துமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அண்மைய நாட்களாக நீர்வளங்கள் கட்டமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதனாலேயே பகுதிநேர நீர்துண்டிப்பு இடம்பெறுவதாகவும் இன்னும் ஒரிரு நாட்களில் நீர்வழங்கல் நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பும் எனவும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கலாவெவ பிராந்திய பணிப்பாளர் லொகுபரன மேலும் தெரிவித்தார்.



'மிஹிந்து நிவஹன' வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் அநுராதபுர மாவட்டத்தின் ஆரம்பவிழா அநுராதபுரம் ஸ்ரீ சம்புத்த ஜயந்தி விகாரையில் நடைபெற்றது. கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, கட்டடப் பொருட்கள் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இதனை ஆரம்பித்து வைத்தபோது பிடிக்கப்பட்ட படம்.

## மாணவி கூட்டு வல்லுறவு; இரு மாணவர்கள் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பதினாறு வயது பாடசாலை சிறுமி ஒருவரை கூட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக கூறப்படும் 15 வயது மாணவர்கள் இருவரை கடந்த 24 ம் திகதி கைது செய்துள்ளதாக கெக்கிராவ பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்கள் கெக்கிராவ பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களாவர்.

சிறுமியும் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களான இரு மாணவர்களும் ஒரே பாடசாலையில் கல்வி கற்று வருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

சம வயதுடைய அதே பாடசாலையில் கல்வி கற்கும் சிறுமியின் காதலன் என கூறப்படும் ஒரு மாணவனுடன் சிறுமி வகுப்பறையில் தனியாக உறையாடிக் கொண்டிருந்த வேளையில் சந்தேக நபர்களான மாணவர்கள் இருவரும் தங்களின் கையடக்க தொலைபேசி மூலம் அந்த சிறுமியை படம் எடுத்துள்ளனர். பின்னர் அதனை சிறுமியிடம் காட்டி பாடசாலை அதிபருக்கும் பெற்றோரோருக்கும் காட்டுவதாக கூறி அச்சுறுத்தி சிறுமியைஅழைத்துச் சென்றுள்ளதாகவும் அந்தப் பயணத்தில் மற்றய சந்தேக நபரும் இணைந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் சந்தேக நபர்கள் இருவரும் சிறுமியை கூட்டு வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளதாக பொலிசார் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களான இரு மாணவர்களையும் கைது செய்த பொலிஸார் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

## நொச்சியாகம நகரை அபிவிருத்தி செய்ய தீர்மானம்

திறப்பனை தினகரன் நிருபர்

நொச்சியாகம நகரை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முன் வந்துள்ளது. நகர புதிய திட்டமிடலுக்கு அமைய இவ் வேலைத்திட்டத்தை முன் கொண்டு செல்வதே இதன் நோக்கமாகும். நகர அபிவிருத்தி அதிகார சபை இதை பொறுப்பேற்று முன்னெடுத்துச் செல்லவுள்ளது.

நகரத்தில் தற்போது காணப்படும் முறையற்ற வியாபார கூடங்களை அகற்றுதல், முறையற்ற விதத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றுதல், வீதிப் போக்குவரத்தை ஒழுங்கு படுத்துதல், பஸ் நிலையமொன்றை அமைத்தல், நடமாடும் வியாபார கூடங்களை அகற்றி நகரை அழகுபடுத்தும் முறைக்கு ஏற்ப நகர அபிவிருத்தி திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் கே.பி.எஸ். குமாரசிறியின் யோசனைக்கு இணங்க நகரை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

புத்தளம் வீதி ஊடான கொழும்பு அநுராதபுரம் பிரதான பாதையில் அமைந்துள்ள நொச்சியாகம நகரம் வலயத்தில் அமைந்துள்ள அதிகமான கிராமங்களுக்குரிய ஒரு முக்கிய நகரமாக கொள்ளப்படுகின்றது. அவசர வேலை திட்டமாக இதை முன்னெடுத்துச் செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குமாரசிறி எம்.பி தெரிவித்துள்ளார்.





இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரியின் தரம் 01 மாணவர்களை உள்ளீர்க்கும் கால் கோள் விழா அதிபர் சி.யோகேஸ்வரன் தலைமையில் நேற்று (29)பாடசாலையில் நடைபெற்றது. பாடசாலையின் கற்பக விநாயகர் ஆலயத்தில் பூசை நிகழ்வுகளுடன் ஆரம்பித்து பின் தரம் 02 மாணவர்கள் புதிய மாணவர்களான தரம் 01 மாணவர்களை வரவேற்று அழைத்துச்சென்றனர். மாணவர்களுக்கு மரக்கன்றுகளும் பாடசாலை நிர்வாகத்தால் வழங்கி வைக்கப்பட்டன.

## அயல்நாட்டு செய்திகள்



# 10 ஆண்டுகளில் செய்யாத பணிகளை 100 நாட்களில் செய்து முடிப்பேன்

### மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன்



பத்து ஆண்டுகளில் செய்யாதவற்றை 100 நாட்களில் செய்து முடிப்பேன். மக்கள் நீதி மய்யத்தின் ஆட்சியில் வேலைதேடும் இளைஞா்கள் வேலை கொடுக்கும் முதலாளிகளாக மாறுவார்கள்.

கோவை தெற்குத் தொகுதியில் போட்டியிடும் அவர் தொகுதிக்குட்பட்ட 19 முக்கிய இடங்களில் வாகனப் பிரசாரத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை ஈடுபட்டார்.அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரசாரத்தின்போது...

காமராஜபுரம் பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்ட கமல்ஹாசன் அப்பகுதி மக்களிடம் ஏற்கெனவே இணையவழி (சூம் செயலி) கலந்துரையாடலை சில மாதங்களுக்கு முன்பு நிகழ்த்தியிருந்தார். உரையாடலின் போது அப்பகுதியைச் சோ்ந்த கர்ப்பிணி பெண் ரம்யா என்பவர் 'என்னைக் காண வருவீர்களா' எனக் கமல்ஹாசனிடம் கேட்டிருந்தார். இதன்படி நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசாரத்தின்போது ரம்யாவைச் சந்தித்த கமல்ஹாசன் அவர் விரும்பியபடி அவரது நாட்குறிப்பில் கையெழுத்திட்டு பரிசளித்தார்.

இதேபோல, கோவையில் கொலை செய்யப்பட்ட தனது மகனின் சாவுக்கு நீதி கிடைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்த லலிதா என்பவரையும் கமல்ஹாசன் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். மேலும், பார்வைத்திறன் குறைபாடு கொண்ட சிறுவன் கமலேஷ் விருப்பத்தின்படி அவரையும் கமல்ஹாசன் சந்தித்து தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

# தமிழகத்தில் இனி பொது முடக்கத்துக்கு அவசியமில்லை

### சுகாதாரத் துறை முதன்மைச் செயலர்



தமிழகத்தில் பொது முடக்கத்தை அமல்படுத்த வேண்டிய அவசியம் தற்போது இல்லை என்றும், அதேவேளையில் தேவைப்பட்டால் சில கட்டுப்பாட்டுகளை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதாரத் துறை முதன்மைச் செயலர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சென்னை, ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில், கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள கொரோனா படுக்கை வசதிகளை ராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் ஆய்வு செய்தார்.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

தமிழகத்தில் சென்னை, கோவை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் கொரோனா பாதிப்பு அதிகமாக உள்ளது. நோய்த் தொற்று தீவிரமடைந்துள்ளதாக மத்திய அரசு வெளியிட்ட 46 மாவட்டங்களில், தமிழகத்தில் அந்த மூன்று மாவட்டங்கள் இடம் பெற்றுள்ளன.

தற்போதைய சூழலில், தமிழகத்தில் ஒன்பது மாவட்டங்களில் மட்டுமே இரண்டு சதவீதம் பாதிப்பு உள்ளது. மற்ற இடங்களில் அதிக பாதிப்பு இல்லை.

சென்னையைப் பொறுத்தவரை அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் தேவையான படுக்கை வசதிகள் உள்ளன. தேவையான மருத்துவக் கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழகம் முழுதும் நோய்க் கட்டுப்பாட்டுப் பகுதிகளைக் கண்காணிப்பதில் தொய்வு ஏற்பட்டுள்ளது. அப்பணிகளைத் தீவிரப்படுத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது, கிருஷ்ணகிரி மாவட்டத்தை தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் கொரோனா கண்காணிப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் தொடா்பான ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது, நோய் பாதிப்பு குடிசைப் பகுதிகளில் குறைவாகவும், கூட்டு குடியிருப்புப் பகுதிகளில் அதிகமாகவும் பரவுவது தெரிய வந்துள்ளது.

மாநிலத்தில் மீண்டும் பொதுமுடக்கத்தை அமல்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. கடந்தாண்டு தடுப்பு மருந்துகள் ஏதும் இல்லாத நிலையில், பொது முடக்கத்தை அமல்படுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. தற்போது அது தேவையில்லை என்றார்.

தமிழ் மண், பண்பாடு தனித்தன்மை மீது படையெடுக்கும்

# கூட்டணிக்கும் எதிரான போர்தான் இத்தேர்தல்

### திமுக தலைவர் ஸ்டாலின்



தமிழ் மண் பண்பாடு தனித்தன்மை மீது படையெடுக்கும் பாஜகவுக்கும், அதற்கு எல்லா வகையிலும் அடிமையாக துணை நிற்கும் அதிமுக கூட்டணிக்கும் எதிரான போர்தான் இத்தேர்தல். தமிழர்களின் அரசியல் தெளிவு மே 2 முடிவுகளில் தெரியும்.

திமுக கூட்டணி வெல்லும் தமிழ்நாட்டின் தனித்துவத்தைக் காக்கும் என திமுக தலைவர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

சேலத்தில் நடைபெற்ற பரப்புரை கூட்டம் தொடர்பாக டுவீட்டரில் திமுக தலைவர் ஸ்டாலின் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அப் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,...

எடப்பாடி தொகுதியில் திமுக வேட்பாளருடன் நடந்து சென்று வாக்காளர்களிடம் ஆதரவு கோரினேன். மக்களின் ஆதரவும் ஆர்ப்பரிப்பும் திமுகவின் வெற்றியை உறுதி செய்கிறது. எடப்பாடி மட்டும் இல்லை மொத்த தமிழகமும் திமுக ஆட்சியை எதிர்பார்க்கிறது. எதிர்பார்ப்பு நிறைவேறும் தமிழகம் வளம் பெறும் எனத் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம்

# 122 வேட்பாளர்களில் 08 பெண்களே போட்டி

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 8 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 122 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களில் 10 பேர் மட்டுமே பெண்கள். 8 சதவீதப் பெண்கள் மட்டுமே களம் காண்கின்றனர். இவர்களில் 6 பேர் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், 4 பேர் சுயேச்சைகள். முன்னணி அரசியல் கட்சியினர் பெண்களுக்கு வாய்ப்பு வழங்கவில்லை. அக்கட்சியினர் ஆண்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்க முனைப்பு காட்டியுள்ளனர்.

அரசியல் மற்றும் வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. ஆனால், தேர்தல் களத்தில் தொடர்ந்து பெண்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். பெண்களை அங்கீகரிக்க முன்னணி அரசியல் கட்சிகள் உட்பட பலரும் முன்வரவில்லை. மேடைப்பேச்சுடன், தங்களது கர்ஜனையை நிறுத்திக் கொள்கின்றனர். அதற்குச் செயல் வடிவம் கொடுக்க மறுக்கின்றனர். ஆண்களின் ஆதிக்கம் தொடர்கிறது.

திமுக போட்டியிடும் 8 தொகுதிகளிலும் ஆண் வேட்பாளர்களைக் களம் இறக்கியுள்ளது. இதேபோல், 8 தொகுதியில் களம் காணும் பகுஜன் சமாஜ் கட்சியும் பெண்கள் போட்டியிட அனுமதிக்கவில்லை. 5 தொகுதிகளில் போட்டியிடும் அதிமுக, 2 தொகுதிகளில் போட்டியிடும் பாமக, ஒரு தொகுதியில் போட்டியிடும் பாஜக, 5 தொகுதிகளில் போட்டியிடும் அமமுக, 3 தொகுதிகளில் போட்டியிடும் தேமுதிக, 2 தொகுதிகளில் போட்டியிடும் இந்திய ஜனநாயக கட்சி ஆகிய கட்சிகள், பெண்களுக்கு வாய்ப்பு வழங்க மறுத்துள்ளன.

அதே நேரத்தில், தேர்தல் களத்தில் 50 சதவீதம் பெண்களுக்கு நாம் தமிழர் கட்சி வாய்ப்பு வழங்கி உள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 8 தொகுதிகளில் களம் காணும் அக்கட்சி, 4 தொகுதிகளில் பெண்களைப் போட்டியிட அனுமதித்துள்ளது. 6 தொகுதிகளில் போட்டியிடும் மக்கள் நீதி மய்யம், ஒரு தொகுதியில் போட்டியிட பெண் ஒருவருக்கு வாய்ப்பு கொடுத்துள்ளது. மேலும், தேசிய சிறுபான்மையினர் மக்கள் கழகம் சார்பில் ஒரு பெண் போட்டியிடுகிறார்.

எதிர்காலத்தில் தேர்தல் அரசியலில் பெண்களுக்கு அனைத்துக் கட்சிகளும் சமமான வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# தமிழகத்திற்குள் ஊடுருவும் கேரள ஆட்கொல்லி யானைகள்



நவீன சென்சார் கருவிகள் பொருத்தல்

தமிழகத்திற்குள் ஊடுருவும் கேரள ஆட்கொல்லி யானைகள் குறித்து மக்களை எச்சரிக்கும் விதமாக கூடலூர் பகுதியில் நவீன சென்சார் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. எல்லை தாண்டி வரும் யானைகளை ஒரு கி.மீ. தூரத்திற்கு முன்பே கண்டதும் மணி அடித்து கிராம மக்களை எச்சரிக்கும் தன்மை கொண்டது இந்த கருவி. வனங்கள் நிறைந்த நீலகிரி மாவட்டத்தில் குடியிருப்புகளுக்கு படையெடுக்கும் யானைகளும் அதிகம்.

உணவு, தண்ணீர், தேடி கிராமங்களுக்குள் நுழையும் யானைகள் தாக்கி மனிதர்கள் உயிரிழப்பது தொடர் கதையாகி வருகிறது. சேரம்பாடி வனத்தில் மட்டும் கடந்த 4 மாதங்களில் காட்டு யானைகள் தாக்கி 5 பேர் உயிரிழந்துள்ளனர். கேரள வனத்தில் இருந்து தமிழகத்துக்குள் ஊடுருவும் ஆட்கொல்லி யானைகளே அப்பாவி மக்களை கொன்று வருகிறது. இந்த யானைகளின் வருகை குறித்து முன்கூட்டியே கிராம மக்களை எச்சரிக்க முடியாமல் வனத்துறையினர் திணறி வருகின்றனர். இப்போது அவர்களுக்கு கைகொடுக்கும் வகையில் பயன்பாட்டுக்கு வந்துள்ளது நவீன சென்சார் கருவி. தமிழ்நாடு கேரள எல்லையில் யானை வழித்தடத்தில் 2 இடங்களில் இக்கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. 1 கி.மீ தூரத்துக்கு முன்பே யானைகள் வருவதை இக்கருவிகள் கண்டுபிடித்து அலாரம் தானாகவே ஒலித்து மக்களை எச்சரிக்கும்.

# திமுக, அதிமுக என வரலாற்றுப் பிழையை மீண்டும் செய்யாதீர்கள்

### நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்



திமுக, அதிமுக என வரலாற்றுப் பிழையை மீண்டும் மீண்டும் செய்யாதீர்கள் என, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

செஞ்சி சட்டப்பேரவைத் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் ஆபூ. சுகுமாரை ஆதரித்து நேற்று முன்தினம் சீமான் பேசிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,...

உலகத்தில் தலைசிறந்த கல்வியில் முதல் இடத்தில் தென்கொரியா, இரண்டாம் இடத்தில் ஜப்பான், மூன்றாவது இடத்தில் சிங்கப்பூர், நான்காவது இடத்தில் ஹாங்காங், 5ம் இடத்தில் பின்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன. இந்த 5 நாடுகளை முந்திக் கொண்டு தமிழ்நாட்டில் தரமான கல்வியைக் கொண்டுவருவேன். பிள்ளைகள் வீட்டின் செல்வங்கள் அல்ல, நாட்டின் செல்வங்கள். ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை இலவசமாகக் கற்பிக்கப்படும்.

ஏன் என்றால் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அறிவுதான் முக்கியம். அந்த அறிவு விற்பனைக்கு அல்ல. உயிர் காக்கும் மருத்துவம், தரம் உயர்த்தி ஒரு ரூபாயில் இருந்து ஒரு கோடி வரை இலவசமாக அளிக்கப்படும். முதல் குடிமகனுக்குக் கிடைக்கும் சலுகை, கடைக்கோடி மக்களுக்கும் கிடைக்க வேண்டும் எனச் சட்டம் இயற்றுவேன். இதுதான் ஜனநாயகம்.

இந்த வரலாற்று வாய்ப்பைத் தவறவிடாதீர்கள். ஐந்தாண்டுக்கு ஒரு முறை தேர்தல் வருகிறது. ஆனால், மாற்றம் வரவில்லை. வேறு வழியில்லை என்று சொல்லாதீர்கள். திமுக, அதிமுகவிற்கு மாற்றாக நாங்கள் இருக்கிறோம். எங்களுக்கு ஒரு வாய்ப்பு தாருங்கள். எங்கள் ஆட்சியில் வாழ்ந்து பாருங்கள். தமிழகம் சொர்க்கமாகத் திகழும்.

நல்ல கருத்துகளை விதைத்துவிட்டால் தவறான அரசாங்கம் உருவாகாது. கை நிறைய விதைகளை விதைத்துக் கொண்டிருக்கிறேன். 10 ஆண்டு காலம் விதைத்துக் கொண்டிருக்கிறேன். இன்று பல இலட்சம் இளைஞர்களை உருவாக்கியிருக்கிறார்கள். திமுக, அதிமுக என மறுபடியும் வரலாற்றுப் பிழையைச் செய்யாதீர்கள்.

வீதியில் ஏற்பட்ட புகையால்

# இரு பஸ்கள் மோதி 05 பேர் பலி; 50 பேர் படுகாயம்



ஆந்திர மாநிலத்தில் சம்பவம்

ஆந்திர மாநிலம் விஜய நகரம் மாவட்டத்தில் இரண்டு அரசு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட பயங்கர விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

விசாகப்பட்டினத்தில் இருந்து விஜயநகரம் நோக்கி வந்த அரசு பேருந்தும், பாலகொண்டுவில் இருந்து விஜயநகரம் நோக்கி வந்த அரசு பேருந்தும் விஜயநகர மண்டலம் சங்கிரிபேட்டா எனும் இடத்தில் சென்று கொண்டிருந்தது. அச்சமயம் சாலையோரம் இருந்த குப்பைகளுக்கு வைக்கப்பட்ட தீயின் காரணமாக அப்பகுதி முழுவதும் புகை மூட்டமாக காட்சியளித்துள்ளது. இதனால் சாலை எந்த திசையில் உள்ளது என தெரியாத நிலையில் இரண்டு அரசு பேருந்து ஓட்டுநர்களும் குழப்பத்திற்கு ஆளாகினர். அதேநேரத்தில் எதிர்திசையில் வந்து கொண்டிருந்த லொறி மீது மோதாமலிருக்க பேருந்து ஓட்டுநர் முயற்சி செய்த போது திடீரென இரண்டு அரசு பேருந்துகளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த பயங்கர விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததோடு 2 பேருந்து ஓட்டுனர்கள் உட்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். தொடர்ந்து விஜய நகரம் எஸ்.பி. ராஜகுமாரி தலைமையிலான பொலிர் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு காயமடைந்தவர்களை 108 ஆம்பியூலன்ஸ் மூலம் விஜய நகரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்துக்கான காரணம் குறித்து பொலிசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட மீனவர்கள் துணைநிலை ஆளுநர் தமிழிசையை சந்தித்தனர்



இலங்கையில் இருந்து விடுவிக்கப்பட்ட காரைக்கால் மீனவர்கள் 16 பேரும் துணைநிலை ஆளுநர் தமிழிசையை நேற்று முன்தினம் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

புதுச்சேரி பிராந்தியமான காரைக்கால் மேடு கிராமத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் நாகையைச் சேர்ந்த இருவர் ஆகியோருடன் மொத்தம் 14 பேர், கடந்த 23ம் தேதி கடலில் மீன்பிடிக்கச் சென்றனர். அப்போது, 14 பேரையும் இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர். பிடிபட்ட தமிழக மீனவர்கள் 40 பேர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட நிலையில், காரைக்கால் மீனவர்கள் விடுவிக்கப்படவில்லை.

இதுதொடர்பாகப் பிரதமர், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோர் மூலம் இலங்கை அரசிடம் பேசியுள்ளதாகவும் விரைவில் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் மத்திய மீன்வளத்துறை அமைச்சர் கிரிராஜ் சிங் தெரிவித்திருந்தார். புதுச்சேரி ஆளுநர் தமிழிசையும் முயற்சிகள் எடுத்தார்.

மீனவர்கள் நாடு திரும்பும் வரை தொடர்ந்து தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க தனது ஆலோசகர்களுக்கும் அவர் அறிவுறுத்தினார். இந்நிலையில் நிபந்தனைகளுடன் 14 மீனவர்களையும் யாழ்ப்பாணம் நீதிமன்றம் விடுதலை செய்தது. இதைத்தொடர்ந்து 14 மீனவர்களும் 27ம் திகதி இரவு காரைக்கால் மீன்பிடி துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தனர்.

இந்நிலையில் இலங்கையில் இருந்து விடுவிக்கப்பட்ட காரைக்கால் மீனவர்கள் 16 பேரும், துணைநிலை ஆளுநர் தமிழிசையை ஆளுநர் மாளிகையில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து அவர்களிடம் துணைநிலை ஆளுநர் தமிழிசை கூறுகையில், மீனவர்கள் கடலுக்குள் செல்லும் அனைத்து நேரங்களிலும் பாதுகாப்புடன் இருக்க வேண்டும். குடும்பத்தையும், முக்கியமாகக் குழந்தைகளையும் சரியான முறையில் கவனித்துக் கொள்வது அவசியம் என்று அறிவுறுத்தினார்.

# அனுராதபுரம் சந்தஹிரு சேய தூபியில் புதையல் பொருட்கள் புனித நினைவுச் சின்னங்கள் வைக்கும் நிகழ்வு









இலங்கை வரலாற்று ஏடுகளில் ஒரு புதிய அத்தியாயமாக, சந்தஹிரு சேய தூபியின் நாற்சதுரத்தினுள் புதையல் பொருட்கள் மற்றும் புனித நினைவுச் சின்னங்களை வைப்புச் செய்யும் மகோற்சவம் நேற்று முன்தினம் புனித நகரமான அனுராதபுரத்தில் தூபி அமையப்பெற்றுள்ள வளாகத்தில் மகா சங்கத்தினரின் மத அனுஷ்டானங்களுக்கு மத்தியில் இடம்பெற்றது.

வண. மகா சங்கத்தினர் மற்றும் நாட்டின் பல பாகங்களில் உள்ள பக்தர்கள் ஆகியோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட விலையுயர்ந்த கலைப்பொருட்கள், புனித சின்னங்கள் மற்றும் பல்வேறு அலங்கார வேலைப்பாடுகள் கொண்ட பெறுமதி வாய்ந்த கல் என்பன இந்த நாற்சதுரத்தில் வைக்கப்பட்டன.

இந்த திட்டத்தின் முன்னோடியாக செயற்படும், பாதுகாப்பு செயலாளரும், கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் பாரம்பரியங்களை முகாமைத்துவம் செய்யும் ஜனாதிபதி செயலணியின் தலைவருமான ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) புனித நினைவுச்சின்னங்கள் அடங்கிய கலசத்தை தூபியின் நாற்சதுரத்தில் வைத்து மகா சங்கத்தினரிடம் கையளித்தார்.

ஆர்தர் சேனநாயக்கவினால் தூபியின் முகட்டில் வைப்பதற்காக வழங்கப்பட்ட 3 அடி உயரமான சூடாமாணிக்கம் என்றழைக்கப்படும் 'இரத்தின கல்', தனவந்தர்கள் மற்றும் பக்தர்களினால் அளிக்கப்பட்ட விலையுயர்ந்த கற்கள் மற்றும் தங்கம் பதிக்கப்பட்ட கற்கள் மற்றும் தங்கம் ஆகியவை எட்டு புனித ஸ்தலங்களின் பொறுப்பாளரான சிரினிவாச தேரரிடம் கையளிக்கப்பட்டது.

தூபியின் நாற்சதுரத்தினுள் வைப்புச் செய்வதற்காக முப்படை மற்றும் சிவில் பாதுகாப்ப படை வீரர்களினாலும் பல்வேறு பெறுமதிவாய்ந்த பெருட்களும் இந்த வைபவத்தின்போது வழங்கி வைக்கப்பட்டன. யுத்தத்தின் போது காயமடைந்த, அங்கவீனமுற்ற மற்றும் உயிர் நீத்த இராணுவ வீரர்களை நினைவுகூர்ந்த பதுகாப்பு செலயாலாளர் 'இந்த தூபியின் கம்பீர தோற்றம் யுத்தத்தின் போது பல்வேறு தியாகங்கள் புரிந்த போர் வீரர்களுக்கான எமது அஞ்சலி என தெரிவித்தார். இலங்கையை ஆண்ட பண்டைய மன்னர்கள் எமக்காக விட்டுச் சென்றதைப் போன்று நாமும் எமது எதிர்கால சந்ததியினருக்கு எமது பெருமையை எடுத்துச் சொல்ல இந்த தூபி வழி வகுக்கும் என ஜெனரல் குணரத்ன தெரிவித்தார்.

## மேல் மாகாணம்

# பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 1,120 பேர் கைது

மேல் மாகாணத்தில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 1,120 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் (28) காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு இடையில் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 47 பேரும், நீதிமன்றதை புறக்கணித்து வந்து பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 418 பேரும் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 549 பேரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் அறிவுறுத்தலின் பேரில் இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.






# காதலை ஏற்க மறுத்த ஆசிரியை மீது கொலை முயற்சி

## சந்தேகநபர் பிணையில் விடுதலை

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

காதலுக்கு மறுப்பு தெரிவித்த ஆசிரியயை கெப் வாகனத்தால் மோதி கொலை செய்ய முயற்சித்த சந்தேக நபர் கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை கெப்பித்தி கொல்லாவயில் மாவட்ட நீதவான் மாலிந்த ஹர்ஷன த அல்விஸ் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே அவர் இந்த உத்தரலை பிறப்பித்துள்ளார்.

சந்தேக நபர் 5 இலட்சம் ரூபா இரண்டு சரீரப் பிணையிலும் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை பதவிய பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடவும் நீதவானால் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் முறைப்பாட்டாளர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்காமல் இருக்குமாறும் விதிமுறைகளை மீறி செயற்பட்டால் வழங்கப்பட்டுள்ள பிணையை இடைநிறுத்தி விளக்கமறியலில் வைப்பதாகவும் நீதவான் எச்சரித்துள்ளார்.

சந்தேகநபர் பதவிய பீ யாய இல 285 முகவரியைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் கெப் வாகனத்தில் கூலிக்கு சாரதியாக தொழில்செய்பவர். இந்நிலையில் ஆசிரியை பாடசாலையில் கடமைகளை முடித்துவிட்டு வீடு திரும்பும் போதெல்லாம் தன்னை காதலிக்குமாறு வற்புறுத்தியுள்ளார். எனினும் ஆசிரியை அவருடைய காதலை ஏற்க மறுத்துவிட்டார். இதனால் மனவிரக்தியடைந்த சாரதி அவரை



பின்தொடர்ந்து சென்று மிரட்டியுள்ளார். இறுதியில் கெப் வண்டியால் மோதி பலத்த காயங்களை ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸ்நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுகமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஒரு கிலோமீற்றர் தூரம் ஆசிரியை செலுத்திய மோட்டார் சைக்கிளை பின்தொடர்ந்து சென்று திட்டமிட்டே இதனை செய்துள்ளதாக பொலிஸார் நீதி மன்றில் அறிக்கை சமர்பித்துள்ளனர். திட்டமிட்டு கொலையை செய்வதற்கு எத்தனித்துள்ளதுடன் சிறிய மற்றும் பெரிய காயங்களை ஏற்படுத்தியமை, சாட்சியை மறைத்தமை, வைத்தியசாலையில் அனுமதிக்காமை மற்றும் கவனயீனமற்ற விதத்தில் வாகனத்தை செலுத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேக நபர் மீது நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

# ஹெரோயின் போதைக்காக திருட்டு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



அநுராதபுரம் நகரில் அமைந்துள்ள வியாபார நிலையமொன்றில் முந்திரி பக்கட்டுக்களை திருடிய நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் போதைப் பொருளை வாங்குவதற்கு பணம் தேடும் நோக்கில் இவர் இந்த திருட்டில் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

வியாபார நிலையத்தின் முகாமையாளர் அநுராதபுரம் தலைமையக பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் முந்திரி பக்கட்டுக்களை திருடும் போது வியாபார நிலையத்தின் பணியாளர்கள் திருடனை கையும் களவுமாக பிடித்துள்ளனர். சந்தேக நபர் இரண்டு தடவைகளில் ஒரு கிலோ எடைகொண்ட இரண்டு முந்திரி பக்கட்டுக்களை பணியாளர்களுக்கு தெரியாமல் திருடிச் சென்றுள்ளார்.

வியாபார நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கமராவின் மூலம் சந்தேகநபர் கையும் களவுமாக அகப்பட்டுள்ளார்.

இரண்டு தடவைகளிலும் திருட்டை சிறந்த முறையில் மேற்கொண்டதனால் இன்னுமொரு தடவை திருடன் திருடுவதற்கு வரக்கூடும் அச்சமயம் திருடனை பிடிக்கமுடியும் என முகாமையாளர் மிகவும் சூட்சுமான திட்டமொன்றை தீட்டினார். அதற்கமைய சந்தேக நபர் மற்றுமொரு முந்திரி பக்கட்டை திருடிக் கொண்டு தப்பிச் செல்ல எத்தனித்த போது பணியாளர்களினால் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற பெயரில் விபசார விடுதி

(அக்குறணை குறூப் நிருபர்)



கண்டியில் ஆயுர்வேத மசாஜ் சிகிச்சை நிலையம் என்ற பெயரில் இயங்கிவந்த விபசார விடுதியொன்றை பொலிஸார் சுற்றி வளைத்துள்ளனர். இச்சம்பவத்தில் அதன் முகாமையாளர் உட்பட ஐந்து பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் நேற்று கண்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப் பட்டனர்.

கண்டி நகரை அண்மித்த தொடங்வல, ஹல்லொலுவ புதிய பாலத்திற்கு அருகில் ஆயுர்வேத மசாஜ் சிகிச்சை நிலையம் என்ற போர்வையில் விபசார விடுதியொன்றை நடாத்திவந்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மிகவும் சூட்சுமான முறையில் விபசார விடுதி சுற்றிவளைக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் கலஹா, பேராதனை, அக்குரஸ்ஸ, காலி திஸ்ஸமகாராம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்கள் விபசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், முகாமையாளர் அதற்கு உடந்தையாக இருந்ததாகவும் இவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

# தேசிய சேமிப்பு வங்கி

## நிதிக் கூற்றுக்கள்

(SL)AAA

### 2020 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கானது

## வருமானக் கூற்று - கணக்காய்வு செய்யப்பட்டது

| 2020 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கானது | வங்கி 2020 ரூபா '000 | வங்கி 2019 ரூபா '000 | தொகுதி 2020 ரூபா '000 | தொகுதி 2019 ரூபா '000 |
|---|---|---|---|---|
| **வருமானம்** | **127,547,060** | **121,929,059** | **130,039,494** | **125,810,171** |
| வட்டி வருமானம் | 122,512,049 | 118,729,784 | 124,608,182 | 120,351,774 |
| வட்டிச் செலவினம் | (87,621,868) | (89,897,770) | (88,425,490) | (90,868,139) |
| **தேறிய வட்டி வருமானம்** | **34,890,181** | **28,832,014** | **36,182,692** | **29,483,635** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 2,710,487 | 1,261,268 | 2,723,087 | 1,269,521 |
| கட்டணம் மற்றும் தரகு செலவினம் | (154,486) | (131,954) | (160,556) | (136,838) |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **2,556,001** | **1,129,314** | **2,562,531** | **1,132,683** |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | 1,273,676 | 1,491,610 | 1,745,329 | 1,963,229 |
| நியாய மதிப்பீட்டில் தேறிய இலாபம்/(நட்டம்) | - | - | - | |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டு நிதிச் சொத்துக்கள் | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டு நிதிப் பொறுப்புகள் | | | - | |
| நியாய மதிப்பீட்டு நிதிச் சொத்துக்களின் இனங்காணாமை மூலமான ஏனைய விரிவான வருமானத்தின் தேறிய இலாபம்/(நட்டம்) | 241,284 | 22,021 | 241,284 | 22,021 |
| தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானம் | 809,564 | 424,376 | 721,612 | 2,203,626 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | **39,770,707** | **31,899,335** | **41,453,448** | **34,805,194** |
| பெறுமதி குறைப்புக் கட்டணங்கள் | (4,873,768) | (565,536) | (4,932,840) | (590,700) |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | **34,896,939** | **31,333,799** | **36,520,608** | **34,214,494** |
| ஆளணிச் செலவுகள் | (9,966,786) | (10,157,926) | (10,152,485) | (10,217,978) |
| பெறுமானத் தேய்வு மற்றும் மதிப்புக் குறைப்புச் செலவுகள் | (1,240,503) | (1,042,933) | (1,256,826) | (1,048,095) |
| ஏனைய செலவினங்கள் | (4,258,307) | (4,474,053) | (4,313,367) | (4,461,457) |
| **நிதியியல் சேவைகள் மீது பெசேவ, தேகவ மற்றும் கமீவக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்/( (நட்டம்)** | **19,431,342** | **15,658,887** | **20,797,931** | **18,486,964** |
| நிதியியல் பணிகள் மீதான பெறுமதி சேர் வரி | (3,786,717) | (3,045,921) | (4,006,877) | (3,208,584) |
| நிதியியல் பணிகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | - | (366,157) | - | (383,614) |
| நிதியியல் பணிகள் மீதான கடன் மீள்பெறுகை வரி | - | (1,785,171) | - | (1,803,225) |
| **நிதியியல் பணிகள் மீது பெசேவ, தேகவ மற்றும் கமீவக்கு பின்னரான செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | **15,644,625** | **10,461,638** | **16,791,054** | **13,091,541** |
| இணைந்த மற்றும் கூட்டு முயற்சிகளது இலாபப் பங்குகள் | - | - | - | - |
| **வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)** | **15,644,625** | **10,461,638** | **16,791,054** | **13,091,541** |
| வருமான வரிச் செலவினங்கள் | (5,536,709) | (4,080,468) | (5,969,936) | (4,378,631) |
| **காலப்பகுதிக்கான இலாபம்/( (நட்டம்)** | **10,107,916** | **6,381,170** | **10,821,118** | **8,712,910** |
| **பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்:** | | | | |
| வங்கியின் பங்கு மூலதன உரிமையாளர்களுக்கு | 10,107,916 | 6,381,170 | 10,821,118 | 8,712,910 |
| கட்டுப்பாட்டுக்கு உட்படாத நலன்கள் | - | - | - | - |
| **ஒரு பங்கிற்கான இலாபத்தின் வருவாய்** | | | | |
| சாதாரண பங்கொன்றிற்கான வருவாய் - அடிப்படை (ரூபா) | 10.75 | 6.79 | 11.51 | 9.27 |
| சாதாரண பங்கொன்றிற்கான வருவாய் - குன்றியது (ரூபா) | 10.75 | 6.79 | 11.51 | 9.27 |

## விரிவான வருமானக் கூற்று - கணக்காய்வு செய்யப்பட்டது

| 2020 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கானது | வங்கி 2020 ரூபா '000 | வங்கி 2019 ரூபா '000 | தொகுதி 2020 ரூபா '000 | தொகுதி 2019 ரூபா '000 |
|---|---|---|---|---|
| **வருடத்திற்கான இலாபம்/ (நட்டம்)** | **10,107,916** | **6,381,170** | **10,821,118** | **8,712,910** |
| **வருமானக் கூற்றிற்கு மீள் வகைப்படுத்தப்பட வேண்டியவை** | | | | |
| வெளிநாட்டுச் செயற்பாட்டு மாற்றங்கள் மீதான செலாவணி வித்தியாசம் | | | | |
| காசுப்பாய்ச்சல் காப்பு மூலம் பெறப்பட்ட தேறிய இலாப/ (நட்டங்கள்) | - | - | - | - |
| ஏனைய விரிவான வருமானங்கள் மூலமான நியாய மதிப்பீட்டில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்களின் முதலீடுகள் மீதான இலாப/(நட்டங்கள்) | - | - | - | - |
| துணை மற்றும் இணை நிறுவனப் பங்குகளின் இலாபம் | - | - | - | - |
| ஏனைய விரிவான வருமானங்கள் மூலமான நியாய மதிப்பீட்டு படுகடன் சாதனங்கள் | 273,544 | 127,928 | 329,820 | 227,305 |
| வருமானக் கூற்றுக்கு மாற்றப்பட்ட படுகடன் சாதனங்களின் முதலீடு மீதான இலாப/(நட்டங்கள்) | (241,284) | (13,717) | (241,284) | (13,717) |
| மேற்குறிப்பிட்டவற்றின் மீது தாக்கம் செலுத்திய பிற்போடப்பட்ட வரி | (9,033) | (31,979) | (9,033) | (31,979) |
| **வருமானக் கூற்றிற்கு மீள்வகைப்படுத்தப்பட வேண்டிய மொத்த ஏனைய விரிவான வருமானம்** | **23,227** | **82,232** | **79,503** | **181,609** |
| **வருமானக் கூற்றிற்கு மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள்** | | | | |
| நியாய மதிப்பீட்டு நிதிச் சொத்துக்களின் மூலமான ஏனைய விரிவான வருமானத்தின் ஊடாக நியமிக்கப்பட்ட பங்கு மூலதன சாதன முதலீடு மீதான நியாய மதிப்பீட்டு மாற்றம் | (776,162) | (324,635) | (774,791) | (320,297) |
| பகிர்ந்தளிக்கக்கூடிய நியாய மதிப்பீட்டு மாற்றங்களில் வங்கியின் கடன் இடர் நேர்வு மீதான அடையாளம் காணப்பட்ட நியாய மதிப்பீட்டு நிதிப் பொறுப்புகள் மூலமான இலாபம் அல்லது நட்டம் | - | - | - | - |
| ஊழியர்களுக்கான இளைப்பாற்று நலன்புரித் திட்டங்களின் மீள் அளவீடு | (6,684,417) | (3,454,283) | (6,681,422) | (3,455,660) |
| மேற்குறிப்பிட்டவற்றின் மீது தாக்கம் செலுத்திய பிற்போடப்பட்ட வரி | 1,871,637 | 967,199 | 1,871,637 | 967,199 |
| முன்னைய ஊழியர்களின் இளைப்பாற்று நலன்புரித் திட்டங்களின் மீள் அளவீடு (தேறிய வரியில்) | (4,812,780) | (2,487,084) | (4,809,785) | (2,488,461) |
| மீள்மதிப்பீட்டு மிகையில் தேறிய மாற்றம் | 1,482,472 | - | 1,921,578 | - |
| மேற்குறிப்பட்டவற்றின் மீது தாக்கம் செலுத்திய பிற்போடப்பட்ட வரி | (415,092) | - | (415,092) | - |
| மீள்மதிப்பீட்டு மிகையில் தேறிய மாற்றம் (தேறிய வரியில்) | 1,067,380 | - | 1,506,486 | - |
| துணை மற்றும் இணை நிறுவனங்களின் பங்குகள் மீதான இலாபம் | - | - | - | - |
| **வருமான கூற்றிற்கு மீள்வகைப்படுத்தப்படாத ஏனைய மொத்த விரிவான வருமானம்** | (4,521,563) | (2,811,719) | (4,078,090) | (2,808,758) |
| **வரி நீங்கலான வருடத்திற்கான ஏனைய மொத்த விரிவான வருமானம்** | (4,498,336) | (2,729,487) | (3,998,586) | (2,627,149) |
| **வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | **5,609,580** | **3,651,683** | **6,822,532** | **6,085,762** |
| பகிர்ந்தளிக்கத்தக்கவை: | | | | |
| வங்கியின் பங்குரிமையாளர்கள் | **5,609,580** | **3,651,683** | **6,822,532** | **6,085,762** |
| கட்டுப்பாடற்ற நலன்கள் | - | - | - | - |

## நிதி நிலைமை கூற்று - கணக்காய்வு செய்யப்பட்டது

| | வங்கி 2020-12-31இல் உள்ளவாறு ரூபா '000 | வங்கி 2019-12-31இல் உள்ளவாறு ரூபா '000 | தொகுதி 2020-12-31இல் உள்ளவாறு ரூபா '000 | தொகுதி 2019-12-31இல் உள்ளவாறு ரூபா '000 |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்கு நிகரானவை | 6,491,963 | 5,376,715 | 6,598,595 | 5,564,824 |
| மத்திய வங்கிகளிலுள்ள மீதிகள் | - | - | 6 | 58 |
| வங்கிகளுடனான இருப்புகள் | 13,253,499 | 12,364,469 | 17,456,660 | 15,745,184 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 19,897 | 11,622 | 19,897 | 11,622 |
| இலாபம் அல்லது நட்டம் மூலம் இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துக்கள் | | | - | - |
| சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்டது | 11,221,746 | 11,459,882 | 23,617,944 | 22,130,273 |
| சீர்மதிப்பு பெறுமதியில் நியமிக்கப்பட்டது | - | - | - | - |
| மதிப்பு குறைக்கப்பட்ட செலவில் உள்ள நிதியியல் சொத்துக்கள் | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 516,795,160 | 454,394,957 | 517,833,067 | 456,636,285 |
| படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | 754,233,344 | 615,634,321 | 758,594,934 | 619,567,786 |
| ஏனைய விரிவான வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 15,271,822 | 3,478,811 | 16,059,841 | 4,626,582 |
| துணை நிறுவனங்களில் முதலீடுகள் | 4,811,000 | 4,811,000 | - | - |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களிலான முதலீடுகள் | - | - | - | - |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 15,315,772 | 13,564,578 | 16,197,837 | 13,857,882 |
| சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமை | 1,226,183 | 1,073,507 | 1,271,525 | 1,130,868 |
| முதலீட்டுச் சொத்துக்கள் | - | - | 237,077 | 333,315 |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 687,961 | 598,876 | 694,160 | 599,612 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 1,446,249 | - | 1,446,249 | 338 |
| ஏனைய சொத்துக்கள் | 23,033,780 | 35,197,923 | 23,192,936 | 35,370,115 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **1,363,808,376** | **1,157,966,664** | **1,383,220,728** | **1,175,574,745** |
| **பொறுப்புகள்** | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை | 12,862,337 | 35,045,251 | 13,339,705 | 36,139,122 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டம் மூலம் இனங்காணப்பட்ட நிதியியல் பொறுப்புகள் | - | - | - | - |
| மதிப்பு குறைக்கப்பட்ட செலவில் உள்ள நிதியியல் பொறுப்புகள் | | | | |
| வைப்பாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 1,237,123,791 | 1,016,574,286 | 1,237,669,284 | 1,015,635,421 |
| படுகடன் பிணையங்களை வைத்திருப்போருக்கு செலுத்த வேண்டியவை | - | - | - | - |
| ஏனைய கடன்கொடுநர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 8,159,591 | 21,203,242 | 19,656,090 | 32,808,023 |
| குத்தகை பொறுப்புகள் | 1,274,713 | 1,066,882 | 1,320,877 | 1,121,441 |
| விநியோகிக்கப்பட்ட படுகடன் பிணையங்கள் | 31,773,753 | 26,691,711 | 31,908,279 | 26,955,697 |
| ஓய்வு பணிக்கொடை பொறுப்புக்கள் | 10,885,085 | 5,025,779 | 10,916,429 | 5,053,759 |
| நடப்பு வரி பொறுப்புகள் | 3,128,643 | - | 3,705,537 | 565,704 |
| பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள் | - | 482,241 | 1,121 | 483,005 |
| ஏனைய ஏற்பாடுகள் | - | - | - | - |
| ஏனைய பொறுப்புகள் | 6,699,216 | 5,951,464 | 7,253,989 | 7,430,415 |
| துணை நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியவை | 3,750 | 547 | - | - |
| **மொத்த பொறுப்புகள்** | **1,311,910,879** | **1,112,041,403** | **1,325,771,311** | **1,126,192,586** |
| பங்கு மூலதனம் | | | | |
| ஒதுக்கப்பட்ட மூலதனம்/ சாட்டப்பட்ட மூலதனம் | 9,400,000 | 9,400,000 | 9,400,000 | 9,400,000 |
| நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | 4,068,268 | 3,562,872 | 4,090,363 | 3,571,214 |
| ஏனைய விரிவான வருமான ஒதுக்கங்கள் | (434,929) | 318,006 | (411,786) | 283,501 |
| பிடித்து வைத்துள்ள வருவாய் | 11,883,168 | 8,194,507 | 16,085,184 | 10,964,046 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 26,980,990 | 24,449,876 | 28,285,656 | 25,163,395 |
| பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம் | 51,897,497 | 45,925,261 | 57,449,417 | 49,382,159 |
| கட்டுப்பாடற்ற நலன்கள் | - | - | - | - |
| **மொத்த பங்கு மூலதனம்** | **51,897,497** | **45,925,261** | **57,449,417** | **49,382,159** |
| **மொத்த பொறுப்புகள் மற்றும் பங்கு மூலதனம்** | **1,363,808,376** | **1,157,966,664** | **1,383,220,728** | **1,175,574,745** |
| **எதிர்பாராத பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்** | **23,787,099** | **10,355,197** | **23,850,325** | **10,691,602** |
| **ஆவணத் தகவல்கள்** | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 4,641 | 4,715 | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 259 | 256 | | |

குறிப்பு: கூறப்பட்ட தொகைகள் பெறுமதி குறைவு மற்றும் பெறுமான தேய்வு நீங்கலானவை.

### விளக்கக் குறிப்புகள்:-

1) 2019ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணக்குகள் வெளியிடப்பட்டதிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு முறைகளில் எந்த மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

2) சிறந்த வெளிப்படுத்தல்களை வழங்குவதற்காக, நடப்பு ஆண்டின் வகைப்படுத்தலுடன் ஒப்பிடுவதற்கான தேவையேற்படும் இடங்களில், ஒப்பீட்டு தகவல்கள் மீள்வகைப்படுத்தப்படுகின்றது.

3) கொவிட்-19 இனால் ஏற்படுத்தப்பட்ட தாக்கம்

